உ

சிவமயம்.

மேலகரம்

திரிகூடராசப்பக் கவிராயர்

இயற்றிய

# திருக்குற்றாலக்குறவஞ்சி.

[ மூன்றாம் பதிப்பு ]

டி. கே. சிதம்பரநாத முதலியார்

எழுதிய

முகவுரையுடன்

திருக்குற்றாலநாதசுவாமி

தேவஸ்தானத்தாரால்

வெளியிடப்பட்டது.

லோகாம்பிகை பிரஸ்,

தென்காசி.

1932.

போடுவான் புட்ப பாணம் புறப்பட மாட்டே னாவா
தேடிநீ திரிகூ டத்திற் சிங்கியைக் காட்டு வாயே. (98)

### நூவன் சிங்கியைத் தேடமாட்டேனென்று மறுத்துக்கூறல்.

அங்கணர் திரகூ டத்தி லெளிநீ யணைந்தா லென்ன
நுங்களிற் பிரிந்தாலென்ன நூவனுக் குண்டோ நட்டங்
கங்கண மெனக்கேன் சிங்கா காசலை யுனக்குண் டானாற்
கொங்கணச் சிங்கி தன்னைக் கூட்டிவா காட்டு வேனே. (99)

### சிங்கன் சிங்கியைத் தேடல்.

### விருத்தம்.

திருவண்ணா மலைகாஞ்சி திருக்கா ளத்தி
சீகாழி சிதம்பரந்தென் னாரூர் காசி
குருநாடு கேதாரங் கோலக் கொண்டை
கோகரணஞ் சேகநாதங் குப்ப கோணம்
அரியலூர் சீரங்கந் திருவா னைக்கா
வடங்கலும்போய்ச் சிங்கிதனைத் தேடிச் சிங்கன்
வருசிராப் பள்ளிவிட்டு மதுரை தேடி
மதிகொண்டான் திரிகூட மேதிர்கண் டானே. (100)

வில்லிபுத்தூர் கருவைநல்லூர் புன்னைக் காவு
வேள்திருச்செந் தூர்குருகூர் சீவை குந்த
நெல்வேலி சிங்கிகுளந் தேவ நல்லூர்
நிலைதருஞ்சிற் றூர்குமரி திருவாங் கோடு
சொல்லரிய குறுங்கைகளாக் காடு தேடித்
தொன்மருதூ ரத்தாள நல்லூர் தேடிச்
செல்வருறை சிவசயிலம் பாவ நாசந்
திரிகூடச் சிங்கிதனைத் தேடு வானே. (101)

---

(99) நுங்களில்-உங்களுக்குள். கங்கணம்-ஆத்திரம் [தாற்பரியம்]. காசலை - ஆத்திரம்; இது இழிசனர்மொழி. கொங்கணச்சிங்கி - கொங்கண தேசத்துக் குறத்தி.

(100) குருநாடு-பாண்டவர்நாடு. மதிகொண்டான்-சந்திரனைத் தலை மேற்றாங்கிய சிவபிரானது.

(101) புன்னைக்காவு-சங்கரநயினார்கோயில். குமரி—கன்னியாகுமரி. திருவாங்கோடு - மலையாளம். குறுங்கை - திருக்குறுங்குடி.

## இதுவுமது.

இ-ம்-நீலாம்புரி. ஆதிதாளம்.

### கண்ணிகள்.

(1) பேடைக் குயிலுக்குக் கண்ணியை வைத்துநான்
மாடப் புறவுக்குப் போனேன்
மாடப் புறவுங் குயிலும் படுத்தேன்
வேடிக்கைச் சிங்கியைக் காணேன்.

(2) கோல மயிலுக்குக் கண்ணியை வைத்துநான்
ஆலாப் படிக்கவே போனேன்
ஆலாவுங் கோல மயிலும் படுத்தேன்
மாலான சிங்கியைக் காணேன்.

(3) வெவ்வாப் பறவையின் வேட்டைக்குப் போய்க்காம
வேட்டையைத் தப்பிவிட் டேனே.
வவ்வால் பறக்க மாநா யகப்பட்ட
வைபவ மாச்சுது தானே.

(4) இவ்வாறு வந்தவென் னெஞ்சில் விரகத்தை
யெவ்வாறு தீர்த்துக்கொள் வேனே
செவ்வாய்க் கரும்பை யநுராக வஞ்சியைச்
சிங்கியைக் காணுகி லேனே. (102)

---

[1] படுத்தேன் - பிடித்தேன்.

[2] ஆலா - ஒருபறவை.

[3] வெவ்வா-விருப்பமாக. வவ்வால் பறக்க மாநாயகப்பட்ட என்பதற்கு - வவ்வால் பறந்தோடிப்போனதுபோலச் சிங்கி காணமற்போக மாநாய் கிடைத்ததுபோல மற்றப் பறவைகள் கிடைத்தன என்பது பொருள். வைபவம் ஆச்சுது-[அந்த]வகை[போல] ஆயிற்று இச்செய்கை.

(4) இவ்வாறு - இந்தவிதம். அநுராகம் - ஐக்கியமுடைய.

## குற்றாலத்திற் சிங்கன் சிங்கியைத்தேடுதல்.

நற்றாலந் தன்னிலுள்ளோர் யாவ ரேனு
நன்னகரத் தலத்தில்வந்து பெறுவார் பேறு
பெற்றார்தா நன்னகரத் தலத்தை விட்டாற்
பிரமலோ கம்வரைக்கும் பேறுண் டாமோ
வற்றாத வடவருவிச் சாரல் நீங்கி
வடகாசி குமரிமட்டு மலைந்த சிங்கன்
குற்றாலத் தலத்தின்முன்னே தவத்தால் வந்து
கூடினான் சிங்கிதனைத் தேடி னானே. (103)

## சிங்கன் சிங்கியைக் காணாமற் புலம்பல்.

இ—ம்—தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

சிங்கியைக் காணேனே யென்வங்கணச் சிங்கியைக் காணேனே.

அநுபல்லவி.

சிங்கியைக் காமப் பசுங்கிளிப் பேடையைச்
சீர்வளர் குற்றாலர் பேர்வளம் பாடிய
சங்கீத வாரியை யிங்கித நாரியைச்
சல்லாபக் காரியை யுல்லாச மோகனச் (சிங்கி)

சரணங்கள்.

(1) ஆரத் தனத்தைப் படங்கொண்டு மூடி
யசைத்துநின் றாளதை யானைக்கொம் பென்றுநான்
கோரத்தை வைத்த விழிக்கெதிர் சென்றேனென்
கொஞ்சத் தனத்தை யறிந்து சுகக்காரி
பாரத் தனத்தைத் திறந்துவிட் டாள்கண்டு
பாவியே னாவி மறந்துவிட் டேனுடன்
தீரக் கனிய மயக்கி முயக்கியே
சிங்கார மோகனஞ் சிங்கிகொண் டாளந்தச் (சிங்கி)

---

(103) நற்றாலம்-நல்லஉலகம். பேறுபெறுவாரெனக் கூட்டுக. பேறு-பயன். உண்டாமோ - கிடைக்குமோ. சாரல் - மலைப்பக்கம்.

(104) வங்கணம் - அதிகநேசம். வாரி - கடல். சல்லாபம் - வினாவும் விடையுங்கூடிய பேச்சு. உல்லாசம்-உள்ளக்களிப்பு. மோகனம்-மோகம்.

(1) படம்-மேற்சேலை. கோரம்-கொடுமை. கொஞ்சத்தனம்-[என்னுடைய] எளிமைத்தனம். பாவியேன்-பாவியாகிய நான். ஆவி-உயிரை. தீரக்கனிய - முழுவது [மன] மிளக. முயக்கி - தழுவச்செய்து. மோகனம் - புணர்ச்சி.

(2) பூவென்று பாதம் வருடி வருடிப்
புளக முலையை நெருடி நெருடி
யேவென்ற கண்ணுக்கோ ரஞ்சனந் தீட்டி
யெடுத்த சுருளு மிதழா லிடுக்குவள்
வாவென்று கைச்சுருள் தாவென்று வாங்காள்
மனக்குறி கண்டு நகக்குறி வைத்தபின்
னாவென் றுருக்கா விருக்கா லுதைப்பள்
அதுக்குக் கிடந்து கொதிக்குதென் பேய்மனம் (சிங்கி)

(3) தாராடுங் குன்றி வடத்தை யொதுக்கித்
தடமார் பிறுக்கத் தழுவவந் தாலவள்
வாராடுங் கொங்கைக்குச் சந்தனம் பூசாள்
மறுத்து நான் பூசினும் பூசலா காதென்பாள்
சீராடிக் கூடி விளையாடியிப்படித்
தீரா மயல்தந்த தீராமைக் காரியைக்
காராடுங் கண்டர்தென் னாரிய நாட்டுறை
காரியப் பூவையை யாரியப் பாவையை. (சிங்கி) (104)

### நூவன் சிங்கியினது அடையாளம் வினவுதல்.

### கோச்சகக்கலிப்பா.

சங்கமெலா முத்தீனுஞ் சங்கர்திரி கூடவெற்பிற்
பொங்கமெலாஞ் செய்யுமுங்கள் போகமெலா மாரறிவார்
சிங்கமெலா மொத்ததுடிச் சிங்காவுன் சிங்கிதனக்
கங்கமெலாஞ் சொல்லி யடையாளஞ் சொல்வாயே. (105)

---

(2) வருடிவருடி-தடவித்தடவி. புளகம்-இங்கிதமுடைய. நெருடி நெருடி-உறுத்தித் தடவித் தடவி. ஏ-பாணத்தை. அஞ்சனந்தீட்டி - மையெழுதி. எடுத்தசுருளும்-கையிலெடுத்த வெற்றிலைச்சுருளையும். இதழால் இடுக்குவள்-உதடுகளால் இடுக்கிப் பிடிப்பள். மனக்குறி-மனத்தின்குறிப்பு. வைத்தபின்-பதித்தபின்னர் [தாற்பரியம்]. ஆவென்று-பரவசப்பட்டு.

(3) தார் ஆடும் - பூமாலைபோலசையும். குன்றிவடம் - குன்றிமணிமாலை. பூசல்-பூசுதல் [சண்டை]. தீராமை-கொடுமை; இது: புகழ்ச்சியில் வந்தது. கார்-கருநிறம். ஆரியம்-அழகு.

(105) சங்கர் - சங்கக்கோயிலுடையார். பொங்கம் - பொலிவான விஷயம். போகம்-இன்பம். துடி-வேகத்தையுடைய. அங்கம்-அவயவம்.

## சிங்கன் சிங்கியினது அடையாளங் கூறுதல்.

இ—ம்—பியாகடை. மிசுரதாளம்.

பல்லவி.

கருப்பி லழகியடா என்சிங்கி கறுப்பி லழகியடா.

அநுபல்லவி.

கருப்பி லழகி காமச் சுறுக்கில் மிகுந்த சிங்கி சுகக்காரி (கறுப்)

சரணங்கள்.

(1) கண்க ளிரண்டுமம்புக் கணைபோல் நீண்டிருக்குங்
கையைத் தனையகலங் காணுமடா
பெண்கள் மயக்குமவள் விரகப்பார்வை சிங்கி
பிடித்தால் மதப்பயலும் பெலப்பானோ

(2) நகையு முகமுமவள் நாணையக் கைவீச்சும்
பகைவருந் திருமபிப் பார்ப்பாரடா
தொகையாய்ச் சொன்னேனினிச் சொல்லக்கூடாதொரு
வகையாய் வருகுதென்னை மயக்குதையே. (கறுப்)

(3) விடையில் வரும்பவனி யுடையர்திருக் குற்றாலர்
சடையி லிளம்பிறைபோற் றனிநுதலாள்
நடையி லழகுமிரு தொடையி லழகுமவ
ளுடையி லழகுமென்னை யுருக்குதையோ. (கறுப்)
(106)

## நூவன் சிங்கியைச் சேர்த்துவைப்பதற்குச் சிங்கனிடங் கூலி வினவுதல்.

கொச்சகக்கலிப்பா.

சாட்டிநிற்கு மண்டமெலாஞ் சாட்டையிலாப் பம்பரம்போ
லாட்டுவிக்குங் குற்றாலத் தண்ணலார் நன்னாட்டிற்

---

(106) சுறுக்கில் - விரைவில்; அல்லது கூர்மையில்.

(1) அம்புக்கணை - பாணமாகியகணை. பெண்கள் - பெண்களையும். மயக்கும் - மயங்கச்செய்யும். பெலப்பானோ - பலங்கொண்டு எதிர்த்துநிற்பானோ.

(2) நாணையம் - ஒழுங்கு.

(3) தனிநுதலாள் - ஒப்பற்ற நெற்றியையுடையவள்.

(107) சாட்டி - மோதப்பட்டு; நெருங்கி.

காட்டுவிக்கு முன்மோகக் கண்மாயச் சிங்கிதனைக்
கூட்டுவிக்கும் பேர்களுக்குக் கூலியென்ன சொல்வாயே. (107)

## சிங்கன் நூவனுக்குப் பிரதியுபகாரங் கூறுதல்.

இ—ம்—தர்பார். ரூபகதாளம்.

கண்ணிகள்.

(1) வாடை மருந்துப் பொடியும் அம்மியூர்
மரப்பாவை பின்ருெடர மாயப் பொடியுங்
கூடி யிருக்க மருந்தும் இருபொழுதுங்
கூடியிருப் பார்களைக் கலைக்க மருந்தும்
காடுகட்டக் கினிக்கட்டுக் குறளி வித்தை
கண்கட்டு வித்தைகளுங் காட்டித்தருவேன்
தேவடிக்கைக் காமரதிபோல் திரிகூட
வெற்பிலுறை சிங்கிதனைக் காட்டாயையே.

(2) மலையைக் கரையப் பண்ணுவேன் குமரிகட்கு
வாராத முலைகளும் வரப்பண்ணுவேன்
முலையை யொளிக்கப் பண்ணுவேன் ஒளித்தபேர்க்கு
மோகினி மந்திரஞ்சொல்லி வரப்பண்ணுவேன்
திலத வசீகரஞ் செய்வேன் ஒருவருக்குந்
தெரியாமற் போகவரச் சித்துமறிவேன்
கலகமத னப்பயலை யென்மேற் கண்
காட்டிவிட்ட சிங்கிதனைக் காட்டாயையே. (108)

---

காட்டுவிக்கும் - காணச்செய்யும். உன்-உன்னுடைய.

(1) அம்மியூர் - அம்மிமேலேறி நடைசெலுத்தும். மரப்பாவை — மரத்தாலாகிய பாவை. பின்ருெடர - பின்னே தொடர்ந்துவர; இவை னம் வரும்படிசெய்தல் மந்திரவாதிகளது தொழிலிலொன்று காடுகட்டு— காட்டினிடத்து மிருகமாவது பறவையாவது புகாமலிருக்கச்செய்தல். அக்கினிக்கட்டு-தீ சுடாமலிருக்கச்செய்தல். காட்டாய்-காட்டுவாய்.

(2) திலதவசீகரம் - அஃதாவது: ஒரு மைப்பொட்டு இட்டுச்சென்ருல் வேண்டியவர்களை வசமாக்குதல். சித்து-மந்திரம். கண்காட்டிவிட்ட- ஏவிவிட்ட (தாற்பரியம்).

### நூவன் சிங்கனைப் பரிகசித்தல்.

#### விருத்தம்.

ஆற்றைநான் கடத்தி விட்டால் ஆகாச மார்க்க மோடத்
தேற்றநீ யறிவாய் கொலலோ திரிகூட மலையிற் சிங்கா
சாற்றுமுன் மருந்துபோலச் சகலர்க்குங் குறிகள் சொல்லிப்
போற்றுமுன் சிங்கிபோன புதுத்தெரு விதுகண் டாயே. (109)

### சிங்கன் சிங்கியைக்காணுமல் வருந்துதல்.

இ—ம்—முகாரி. ஆதிதாளம்.

#### பல்லவி.

எங்கேதான் போனு ளோயே யென்சிங்கி யிப்போ
தெங்கேதான் போனு ளோயே.

#### அநுபல்லவி.

கங்காளர் திரிகூடக் கர்த்தர்திரு நாடுதன்னில் (எங்கே)

#### சரணங்கள்.

(1) வேளா கிலுமயக்குவள் வலியத் தட்டிக்
கேளா மலுமு யக்குவள்
ஆளா யழகனுமா யாரையெங்கே கண்டாளோ
தோளாசைக் காரிசிங்கி சும்மா கிடக்க மாட்டாள். (எங்கே)

(2) மெய்க்குறியா லெங்கும் வெல்லுவள் மனக்குறியுங்
கைக்குறியுங் கண்டு சொல்லுவள்

---

(109) தேற்றம் - தெளிவான வித்தை (ஆகுபெயர்). மருந்து-மருந்தி னருமை (ஆகுபெயர்). குறிகள் - (அருமையாகிய) குறிகள். போற்றும்- (தெய்வங்களைப்) பரவும்.

(110) கங்காளர் — முழுவெலும்பணிந்தவராகிய.

(1) வேள்-மன்மதன். மயக்குவள்-மயங்கச்செய்வள். தட்டி-அடித் தெழுப்பி. முயக்குவள் - புணரச்செய்வள். தோள் - (என்னுடைய) புயத் [தில்.

(2) மெய்க்குறி-சரீரத்திற்றேன்றும் அடையாளம்.

இக்கிலடங் காதுகுறி யிக்கிலடங் காதுமொழி
மைக்குளடங் காதுவிழி கைக்குளடங் காதகள்ளி(எங்கே)

(3) சித்திரச பேசர்மேலே சிவசமயப்
பத்தியில்லாப் பேயர்போலே
குத்தியி லரக்குங்களுங் குடுவையிற் றென்னங்களும்
அத்தனையுங் குடித்துப்போட் டார்பிறகே தொடர்ந்
தாளோ. (எங்கே) (110)

## சிங்கன் சிங்கியைக் காணுதல்.

### கொச்சகக் கலிப்பா.

ஆணாகிப் பெண்விரக மாற்றமற் போனசிங்கன்
பூணாகப் பாம்பணிவார் பொன்னகர்சூழ் நன்னகரின்
சேணார் பெருந்தெருவிற் சிங்கியைமுன் றேடிவைத்துக்
காணமற் போனபொருள் கண்டவர்போற் கண்டானே (111)

### விருத்தம்.

சீதமதி புனைந்தவர்குற் றால நாதர்
திருநாட்டி லிருவருந்தாங் கண்ட போது
காதலெனுங் கடல்பெருகித் தரிகொள் ளாமற்
கைகலக்கும் போதுகரை குறுக்கிட் டாற்போல்
வீதிவந்து குறுக்கிடவே நாணம் பூண்ட
விண்ணணைச் சிங்கிதனைக் கண்டு சிங்கன்
தூதுவந்த நளனெனன் கன்னி மாடந்
துலங்குதம யந்தியவ ளாயி னானே. (112)

---

இக்கிலடங்காது-திசைகளிலடங்காது; அப்புறமுஞ் செல்லுமென்றபடி. இக்கில்-கரும்பில். மைக்குளடங்காது விழி - அஃதாவது: மற்றைப் பெண்கள் கண்போல் இவள்கண் மைபூசி யழகுசெய்யப்பெறாது என்றபடி. கைக்குள் - கைவசத்தில்.

(3) சித்திரசபேசர்-சித்திரசபையிலிருக்கும் நடேசர். குத்தி-சாராயம்வைக்குமொருவிதபாத்திரம். அரக்கு-சாராயம. குடுவை-கள் அடைக்கும் ஒருவித ஓலைப்பெட்டி

(111) ஆற்றமல்-சகியாமல். பூணாக-ஆபரணமாக. பொன்னகர்-பொன்னுலகத்தவர் [ஆகுபெயர்]. சேண் - நீளம்.

(112) சீதம்-குளிர்ச்சி. தரிகொள்ளாமல்-அடங்காமல். வீதி-தெருவிலுள்ள சனங்கள் [ஆகுபெயர்]. விண்ணணம் - ஒருவித மாயாவித்தை. தூதுவந்தநளனெனன்பது - தமயந்தியிடம் இந்திரன் முதலியோருக்காகத் தூதுபோன நளன் தமயந்தியை நேரிலேகண்டும் தூதுக்கு விரோதமென்று தழுவாமலிருந்தனன். அதுபோலச் சிங்கியை நேரிற்கண்டுஞ் சிங்கன் சனங்கள் கூட்டத்தைக் கண்டவுடன் கைகலத்தற் கிடமில்லாமலிருந்தனனென்பதாம். கன்னிமாடம் - விவாகமில்லாத பெண்களிருப்பதற்குச் செய்த மாளிகை. அவள் - அந்தச்சிங்கியாகிய குறத்தி.

இ—ம்-எதுகுலகாம்போதி. தாளம்-சாப்பு.

பல்லவி.

இங்கே வாரா யென்கண்ணே யிங்கே வாராய்

அநுபல்லவி.

இங்கே வாராய் மலர்ச் செங்கை தாராய் மோகச்
சங்கை பாராய் காமச் சிங்கியாரே. (இங்கே)

சரணங்கள்.

(1) பாதம் நோமே நொந்தால் மனம் பேதமாமே
பாதநோக நிற்ப தேது பாவமினிக்
கூதலோ கொடிது காதலோ கடினம் (இங்கே)

(2) பாவி தானே மதன்கணை யேவி னானே
காவில் மாங்குயில்கள் கூவிக் கூவியெனை
தாவி சோருதுனை யாவியாவிக் கட்ட (இங்கே)

(3) வருக்கை மூலர்வட வருவித் திருக்குற்றாலர்
பெருக்கம் பாடிக்கொள்ள மருக்கள் சூடிக்கொள்ள
ஒருக்கா லாடிக்கொள்ள இருக்காற் கூடிக்கொள்ள. (இங்கே)

சிங்கன் சிங்கியை மகிழ்வித்தல்.

கொச்சகக்கலிப்பா.

தொண்டாடுஞ் சுந்தரர்க்குத் தோழர்திரி கூடவெற்பிற்
றிண்டாடி நின்றசிங்கன் சீராடுஞ் சிங்கிதனைக்

---

(113) மோகச்சங்கை - மோகத்தினளவு. சிங்கியாரே என்பதில் ஆர் என்பது அசைநிலை.

(1) பேதம் - வேறுபாடு. காதல் - ஆசை. கடினம் - அதிகம்.

(2) கூவி - கூவப்பட்டு. ஆவியாவி - தழுவித்தழுவி.

(3) வருக்கைமூலர் - பலாமரத்தடியிலுள்ளவராகிய. மருக்கள் - வாசனைப்பூக்கள் (ஆகுபெயர்).

[114] தொண்டாடும்-பணிவிடைசெய்யும். திண்டாடி-மயங்கி.

கண்டாடித் துள்ளாடிக் கள்ளாடுந் தும்பியைப்போற்
கொண்டாடிக் கொண்டாடிக் கூத்தாடிக் கொண்டாளே.
(114)

## சிங்கனுக்கும் சிங்கிக்கும் சம்வாதம்.

இ-ம-தன்யாசி. ஆதிதாளம்.

### கண்ணிகள்.

(1) இத்தனை நாளாக என்னுடன் சொல்லாமல்
எங்கே நடந்தாய்நீ சிங்கி (எங்கே நடந்தாய்நீ)

(2) கொத்தார் குழலார்க்கு வித்தார மாகக்
குறிசொல்லப் போனனடா சிங்கா (குறிசொல்லப் போனனடா)

(3) பார்க்கி லதிசயந் தோணுது சொல்லப்
பயமா யிருக்குதடி சிங்கி (பயமா)

(4) ஆர்க்கும் பயமில்லைத் தோணின காரியம்
அஞ்சாமற் சொல்லடா சிங்கா (அஞ்சா)

(5) காலுக்கு மேலே பெரிய விரியன்
கடித்துக் கிடப்பானேன் சிங்கி (கடித்து)

(6) சேலத்து நாட்டிற் குறிசொல்லிப் பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா (சிலம்பு)

(7) சேலத்தா ரிட்ட சிலம்புக்கு மேலே
திருகு முருகென்னடி சிங்கி (திருகு)

(8) கோலத்து நாட்டார் முறுக்கிட்ட தண்டை
கொடுத்த வரிசையடா சிங்கா (கொடுத்த)

(9) நீண்டு குறுகிய நாங்கூழ்ப் போலே
நெளிந்த நெளிவென்னடி சிங்கி (நெளிந்த)

---

துள்ளாடி - துள்ளி. கள்ளாடும் - கள்ளிலே மூழ்கும்.

[2] கொத்து - பூமாலை [ஆகுபெயர்].

[5] விரியன் - ஒருவகைப்பாம்பு.

[6] சிலம்பு - பாதசரம்.

[8] கோலத்துநாட்டார்-கலிங்கநாட்டார். முறுக்கிட்ட தண்டை-முருக்குத்தண்டை. வரிசை - சன்மானம்.

[9] நாங்கூழ் - ஒரு நிலப்பூச்சி.

(10) பாண்டிய னார்மகள் வேண்டுங் குப்பிக்காகப்
பாடக மிட்டதடா சிங்கா (பாடக)

(11) மாண்ட தவளையுன காலிமேல கட்டிய
மார்க்கமதே தருபெண்ணே சிங்கி (மார்க்க)

(12) ஆண்டவர் குற்றாலர் சந்நிதிப் பெண்கள்
அணிமணிக் கெச்சமடா சிங்கா (அணிமணி)

(13) சுண்டு விரலிமேல குண்டலப் பூச்சி
சுருண்டு கிடப்பானேன் சிங்கி (சுருண்டு)

(14) கண்டிய தேசத்திற் பண்டுநான் பெற்ற
காலாழி பீலியடா சிங்கா (காலாழி)

(15) மெல்லிய பூந்தொடை வாழைக் குருத்தை
விரித்து மடித்ததார் சிங்கி (விரித்து)

(16) நெல்வேலி யார்தந்த சல்லாச் சேலை
நெறிபிடித் துடுத்தினேன் சிங்கா (நெறிபிடி)

(17) ஊருக்கு மேக்கே யுயர்ந்த அரசிலை
சாரைப் பாம்பேது பெண்ணே சிங்கி (சாரை)

(18) சீர்பெற்ற சோழன் குமாரத்தி யார்தந்த
செம்பொ னரைஞாணடா சிங்கா (செம்பொ)

(19) மார்பிற்கு மேலே புடைத்த சிலந்தியிற்
கொப்புளங் கொள்வானேன் சிங்கி (கொப்பு)

(20) பாருக்கு ளேற்றமாங் காயலார் தந்த
பாரமுத் தாரமடா சிங்கா (பார)

(21) எட்டுப் பறவை குமுறுங் கமுகிலே
பத்தெட்டுப் பாம்பேதடி சிங்கி (பத்தெ)

(22) குட்டத்து நாட்டாருங் காயங் குளத்தாரு
மிட்ட சவடியடா சிங்கா. (இட்ட) (115)

---

(15) தொடை - தொடையினிடத்து.

(16) சல்லாச்சேலை - ஒருவகை மிருதுவான சேலை.

(17) ஊரு - தொடை. மேக்கு - மேற்பக்கம். அரசு - அரசிலை போன்ற அல்குல்.

(19) சிலந்தி - முலை (உருவகம்).

(20) காயல் - காயற்பட்டணம்.

(21) (எட்டுப்பறவை) 93-ம் பாட்டுரையிற் சொல்லப்பட்ட பறவைகள். குமிறும் - முழங்கும். கமுகு - கண்டம் [ஆகுபெயர்].

ஷை வேறு

இ-ம்—புன்னாகவராளி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

(1) வள்ளிக் கொடியிலே தூத்திப்பூப் பூப்பானேன் சிங்கி காதில்
வங்காளத் தாரிட்ட சிங்காரக் கொப்படா சிங்கா

(2) கள்ளிப்பூப் பூத்த ததிசய மல்லவோ சிங்கி தெற்கு
வள்ளியூ ரார்தந்த மாணிக்கத் தண்டொட்டி சிங்கா

(3) வன்னக் குமிழிலே புன்னை யரும்பேது சிங்கி மண்ணில்
முந்நீர்ச் சலாபத்து முத்துமூக் குத்திகாண் சிங்கா

(4) சொருகி முடித்ததிற் றாக்கண மேதடி சிங்கி தென்
குருகையூ ரார்தந்த குப்பியுந் தொங்கலுஞ் சிங்கா

(5) பொன்னிட்ட மேலெல்லா மின்வெட்டிப் பார்ப்பானேன் சிங்கி யிந்த
வன்னப் பணிசலின் மாணிக்கக் கல்லடா சிங்கா

(6) இந்தப் பணியைநீ பூணப் பொறுக்குமோ சிங்கி பூவில்
ஈசர்க்கும் நல்லார்க்கு மெல்லாம் பொறுக்குங்காண் சிங்கா

(7) குன்றத்தைப் பார்த்தாற் கொடியிடை தாங்குமோ சிங்கி
கொடிக்குச் சுரைக்காய் கனத்துக் கிடக்குமோ சிங்கா (தன்

(8) இல்லாத சுற்றெல்லா மெங்கே படித்தாய்நீ சிங்கி நாட்டில்
நல்லாரைக் காண்பவர்க் கெல்லாம் வருமடா சிங்கா

(9) பெட்டகப் பாம்பைப் பிடித்தாட்ட வேண்டாமோ சிங்கி
வெட்ட வெளியிலே கோடிப்பாம் பாடுமோ சிங்கா (இந்த

---

(3) குமிழ்-மூக்கு [உவமை ஆகுபெயர்]. முந்நீர்-கடல். சலாபம்-முத்துக்கொழித்தெடுக்குமிடம்.

(5) பொன்னிட்ட-பொன்போன்ற. மின்வெட்டிப் பார்த்தல்-பிரகாசப்படுதல்.

(6) இந்தப்பணியை-இந்த ஆபரணத்தை (சந்திரன் கங்கையாகிய ஆபரணத்தை. (இந்து-சந்திரன். அப்பு-கங்கை.)

(7) குன்றத்தை - மலைபோன்ற முலையை.

[8] சுற்று - சுழற்சி.

[9] பெட்டகப்பாம்பு - பெட்டியில் மூடிவைத்திருக்கும் பாம்பு போன்ற அல்குல். கோடிப்பாம்பு - சாதிப்பாம்பு; நல்லபாம்பு.

(10) கட்டிக்கொண் டேசற்றே முத்தங் கொடுக்கவா சிங்கி நடுப்
பட்டப் பகலில்நா னெட்டிக் கொடுப்பேனோ சிங்கா
(11) முட்டப் படாமுலை யானையை முட்டவோ சிங்கி காம
மட்டுப் படாவிடில் மண்ணோடே முட்டடா சிங்கா
(12) சேலை யுடைதனைச் சற்றே நெகிழ்க்கவோ சிங்கி சும்மா
நாலுபேர் முன்னெனை நாணங் குலையாதே சிங்கா
(13) பாதம் வருடித் துடைகுத்த வேண்டாமோ சிங்கி மனப்
போதம் வருடிப்போய்ப் பூனையைக் குத்தடா சிங்கா
(14) நாக்குத் துடிக்குதுன் னல்வா யிதழுக்குச் சிங்கி யுன்றன்
வாய்க்கு ருசிப்பது மாலைக்கள் ளல்லவோ சிங்கா
(15) ஒக்கப் படுக்க வொதுக்கிடம் பார்க்கவோ சிங்கி பருங்
கொக்குப் படுக்கக் குறியிடம் பாரடா சிங்கா
(16) விந்தைக் காரியுன்னை வெல்லக் கூடாதடி சிங்கி யது
சந்தேக மோவுன் றலைப்பேனைக் கேளடா சிங்கா
(17) தென்றொடெல் லாமுன்னைத் தேடித் திரிந்தேனே சிங்கி யப்பா
விந்நாட்டில் வந்தென்னை யெப்படி நீகண்டாய் சிங்கா
(18) நன்னகர்க் குற்றால நாதரை வேண்டினேன் சிங்கி மணிப்
பன்னகம் பூண்டாரைப் பாடிக்கொள் வோமடா சிங்கா
(19) பாடிக்கொள் வாரெவ ராடிக்கொள் வாரெவர் சிங்கி நீதான்
பாடிக்கொண் டாற்போது மாடிக்கொள் வேனடா சிங்கா
(20) பார்க்கப் பொறுக்குமோ பாவியென் னாவிதான் சிங்கி முனை
யாக்கப் பொறுத்தவ ராறப் பொறார்களோ சிங்கா. (116)

---

[11] முட்டவோ - மோதவோ.

[13] வருடி-தடவி; பற்றி. மனப்போதம் வருடி-மன அறிவைப்பற்றி

[15] ஒக்க-ஒருமிக்க; ஒன்றாக. கொக்குப்படுக்க-கொக்கைப்பிடிக்க.

(16) விந்தை-விநோதம்; வேடிக்கை. தலைப்பேனைக்கேள் - அஃதாவது: தலைப்பேனொன்றை யெடுத்து ஒரு நாழிக்குள்ளே யடியிலே போட்டு நெல்லை நிறைய அளந்துவைத்து அதன்மேலொரு மஞ்சளையுங் கரியையும் வைத்தால் அடியிலேயிருக்கும் பேன் மஞ்சளிலேறினால் நல்லதென்றுங் கரிமேலேறினாற் கெட்டதென்றுந் தெரிந்துகொள்ளுதல்; இதுவும் பழையவழக்கு.

(18) பன்னகம் - பாம்பு.

## வாழ்த்து.

### வெண்பா.

சுற்றாத வூர்தோறுஞ் சுற்றிவெண் டாம்புலவீர்
குற்றால மென்றொருகாற் கூறினால்—வற்றா
வடவருவி யானை மறுபிறவிச் சேற்றில்
நடவருவி யானை நமை. (117)

### கண்ணிகள்.

1 சொற்றமதிச் சடையானைக் குறும்பலா வுடையானை
வெற்றிமழுப் படையானை விடையானை வாழ்த்துகிறேன்

2 தாதையிலாத் திருமகனைத் தடமலைக்கு மருமகனை
வேதசங்க வீதியனை வேதியனை வாழ்த்துகிறேன்

3 தந்திமுகத் தொருகோனைத் தமிழிலஞ்சி முருகோனை
மைந்தரெனு மிறையோனை மறையோனை வாழ்த்துகிறேன்

4 தீமுகத்திற பறிகொடுத்த திருமுடிக்கா ஒருமுடியை
மாமனுக்கு வரிசையிட்ட மாமனைநான் வாழ்த்துகிறேன்

5 காமனுக்கும் பூமனுக்குங் கன்னிதெய்வ யானைக்கு
மாமனென வேபகரும் வள்ளறனை வாழ்த்துகிறேன்

6 நீடுலகெ லாமளந்த நெடியமா லும்மயனுந்
தேடரிய திரிகூடச் செல்வனையான் வாழ்த்துகிறேன்

7 சித்ரநதி யிடத்தானைத் தேனருவித் தடத்தானைச்
சித்ரசபை நடத்தானைத் திடத்தானை வாழ்த்துகிறேன்

8 பனகவணி பூண்டவனைப் பக்தர்களை யாண்டவனை
யனவரத தாண்டவனை யாண்டவனை வாழ்த்துகிறேன்

---

(117) நட - நடுதற்கு. வருவியான - வரவழைக்கமாட்டான்.

(1) கொற்றம் - வெற்றி.

(2) தாதை - பிதா.

(3) தந்தி - யானை. கோனை - தலைவனை.

(4) தீமுகத்தில்-யாகத்தீயிடத்தில். திருமுடிக்கா - சிறந்த தலைக்காக. ஒருமுடியை-ஆட்டின் தலையை. மாமனுக்கு-மாமனாகிய தக்கனுக்கு. வரிசையிட்ட - உபசாரப்பொருளாகக் கொடுத்த. மாமனை - பெரியதலைவனை. இச்சரிதம் கந்தபுராணத்திற் காணலாம்.

(5) பூமன் - பிரமன்.

(8) பனகவணி - சர்ப்பாபரணம்.

9 அரிகூட வயனுகி யரனுகி யகலாத
திரிகூடப் பரம்பரனைத் திகம்பரனை வாழ்த்துகிறேன்

10 சிற்றாற்றங் கரையானைத் திரிகூட வரையானைக்
குற்றாலத் துறைவானைக் குருபரனை வாழ்த்துகிறேன்

11 கடகரியை யுரித்தவனைக் கலைமதியந் தரித்தவனை
வடவருவித் துறையவனை மறையவனை வாழ்த்துகிறேன்

12 ஆதிமறை சொன்னவனை யனைத்துயிர்க்கு முன்னவனை
மாதுகுழல் வாய்மொழிசேர் மன்னவனை வாழ்த்துகிறேன்,
(118)

விருத்தம்

வார்வாழுந் தனத்திகுழல் வாய்மொழியம் பிகைவாழி வதுவை (சூட்டுந்
தார்வாழி திரிகூடத் தார்வாழி குறுமுனிவன் றலைநாட் சொ (ன்ன
பேர்வாழி யரசர்கள்செங் கோல்வாழி நன்னகரப் பேரா லோர (ங்கு
மூர்வாழி குற்றாலத் தலத்தடியார் வாழிநீ டூழி தானே. (119)

---

(11) கடகரி - மதயானை.
(119) வதுவை-கல்யாணத்தில். சொன்னபேர்-சொல்லப்பட்டவர்.

திருக்குற்றாலக் குறவஞ்சி
மு. ரா. அருணாசலக்கவிராயரெழுதிய அரும்பதவுரையுடன்
முற்றுப்பெற்றது.

# அநுபந்தம்.

உ-ஆம் பக்கம் திரிகூடநாதர் துதியி னிரண்டாமடி முதலிற் கலையென்பதற்குப் பலாப்பிஞ்சென்று பொருள். பலாப்பிஞ்சைக் கலையென்பது அந்நாட்டு வழக்கு.

(க0-ஆம் பக்கம் ரு-ஆம்வரி) 'நில்லாமே யொருவசனஞ்சொல் லாமே யெ பார்' என்று ஏட்டுப்பிரதியிற்கண்ட பாடமே சிறந்தது.

(கக-ஆம் பக்கம் ச-ஆம்வரி) 'ஓவியநேராகவே வந்தாள்' என்னும் பாடம்.

கசு-ஆம் பக்கம் கரு-ஆம்வரி பின்பின 'சொன்னயத்தினை நாடி நாடித்தே திருகூடன கூடிக்கூடி' என ஓரடி ஏட்டுப் பிரதிகளிற் காணப்படுகிறது. அதனையுஞ் சேர்த்துப்படிக்க

(ககூ-ஆம்பக்கம் உ-ஆம்வரி) 'சடைகொண்டானுடைதான் கொண்டு தன்னுடை கொடுத்தானையன்' என்று ஏட்டுப்பிரதி யிற்கண்ட பாடமே சிறந்தது 'இவ்வாறுபாடங்கொள்ளுங்கால், சடைகொண்டான்-(இங்கே) திரிகூடநாதன், உடை - (வசந்த வல்லியின்) சேலை(யை). கொண்டு, தன் உடை - தன்னுடைய திக்காடையை. (கொடுத்தான்) என்று பொருள் கொள்க. [ஐயன் என்பதனை நான்காமடியோடு கூட்டியுரைக்க.] திரிகூட நாதர் தம்மைக்கண்டுமோகித்த வசந்தவல்லி அவசமடையும்படி தம் வடிவழகால் மயக்க, மயங்கிய வசந்தவல்லி காமமிகுதியால் தன்னுடையவிழ்ந்ததனையும் அறியாதவளாயினாள் என்றவாறு.

ககூ-ஆம் பக்கம் கஉ-ஆம்வரி) 'கையாற்றிருநீறெடுப்பார்' என்றும் பாடம்.

(உஅ-ஆம் பக்கம் கரு-ஆம்வரி) 'சலுக்கைக்காரர்க் காசை யானேனிப்போது' என்று ஏட்டுப்பிரதியிற் கண்ட பாடமே சிறந்தது.

(உகூ-ஆம் பக்கம் ங-ஆம் வரி) 'தான்பெண்ணாகிய பெண்ணை நான் விடே னென்றுசொல்லு' என்று ஏட்டுப்பிரதியிற் காணப் படுகிறது.

(௯ பக்கம் எ-ஆம் வரி) 'அவ்வேளை யழைத்தருள்வா ரவர்வேளை யோருவருக்குமறியோணாதால்' என்றும் பாடம்.

(௩௦-ஆம்பக்கம் கச-ஆம் வரி) 'மேகாலமறையோதிய' என்றும் பாடம்.

(௩௩-ஆம்பக்கம் கச-ஆம்வரி) 'சித்திரநதியான்' என்றும் பாடம்.

(௩௪-ஆம்பக்கம் ௪௬-ஆம் வரி) 'உருவசி யரம்பை கருவமு மடங்க' என்பதன்பின் 'முறுவலின் குறும்பான் முனிவரு மடங்க' என்பதையும், (௧எ-ஆம்வரி) 'சமனிக்கு முறையாற் சபையெலாமடங்க' எனபதன் பின் 'கமனிக்கு மவருங்கடைக் கணலடங்க' என்பதையும் சேர்த்துப்படிக்க.

௩௫-ஆம் பக்கத்திறுதி அருபல்லவிபின்பின் பின்வருவன வற்றைச்சேர்த்துப்படிக்க.

## சரணங்கள்.

வல்லிகர்முலை யில்லையெனுமிடை வில்லையனநுதல் முல்லையொருநகை
வல்லியெனவொரு கொல்லிமலைதனில் வல்லியவளினு மெல்லியிவளென
வொல்லிவடகன டில்லிவரைபுகழ் புல்லிவருருநீ சொல்லிமதுரித
நல்லிபணிமலை வல்லிகுழன்மொழிச் செல்விபுணர்பவர் கல்விமலைக்குற
(வஞ்சி)

குன்றிவிடுமழை மின்கவெனநிரை குன்றிவடமுலை தங்கவே
மன்றல்கமழ்சிறு தென்றல்வரும்வழி நின்றுதரள மிலங்கவே
யொன்றிலிரதியு மொன்றின்மதனனு மூசலிடுதழை பொங்கவே
யென்றுமெழுதிய மன்றினடமிடு கின்றசரணினர் வென்றிமலைக்குற
(வஞ்சி)

ஆடியிருகுழைத் தோடுமொருகுழற் காடுமிணைவிழி சாடவே
கோடுபொருமுலை மூடுசலவையி னூடுபிதுக்கிமல் லாடவே
தோடிமுரளி வராளிபயிரவி மோடிபெறவிசை பாடியே
நீடுமலைமயி லாடுமலைமதி சூடுமலைநிரி கூடமலைக்குற (வஞ்சி)

## கோச்சகக்கலிப்பா

முன்னங் கிரிவளைத்த முக்கணர்குற் றாலவெற்பிற்
கன்னங் கரியகுழற் காமவஞ்சி தன்மார்பிற்
பொன்னின் குடம்போற் புடைத்தெழுந்த பாரமுலை
இன்னம் பருத்தா லிடைபொறுக்க மாட்டாதே.

௧௫. இ-ம் தோடி. ஆதிதாளம்.

பல்லவி.

வஞ்சிவந்தாள்—மலைக்குற-வஞ்சிவந்தாள்.

அநுபல்லவி.

வஞ்சிவந்தாள் திரிகூட ரஞ்சிதமோகினிமுன்னே
மிஞ்சியவிரகநோய்க்குச் சஞ்சீவிமருந்துபோலே.

(௩௯-ஆம்பக்கம் ௧௨, ௧௩-ஆம்வரி( "தோட்டுவளம்புரிகாதர் திரிகூட மலைவளருந் தோகையேயுன், னாட்டுவள மெனக் குரைத்துக் குற்றால நகர்வளமு நவிலுவாயே" என்றும் பாடம்.

(௪௧-ஆம்பக்கம் ௧௧-ஆம்வரி) மூவர்பாடிப்புகழ்ந்திட்டநாடு' என்றும், (௧௪-ஆம்வரி 'அஞ்சுநூறுமகங் கண்டநாடு' என்றும்பாடம்

(௪௨-ஆம்பக்கம் ௯-ஆம்வரி) 'சமூலக்காண்பது தீந்தயிர்மத்து' என்றும் பாடம்.

(௪௩-ஆம்பக்கம் ௧௯-ம்வரி) காத்திருக்குங்கயிலாய மேய்த் திருக்கும் அம்மே' என்றும் பாடம்.

[illegible]-ஆம்பக்கம் ௧௪-ஆம் வரி) 'கமூததின்மேன் மறுவு[illegible]' என்றும் பாடம்.

(௫௭-ஆம் பக்கம் ௧௯-ம் வரி 'திக்காடக்குளுவசிங்கன்' என்றும் பாடம். திக்காட - திக்குகள் நடுங்க.

(௫௮-ஆம் பக்கம் ௧௭-ஆம் வரி) திரிகூடப்பெரியசிங்கக்குமரனே' என்றும் பாடம்.

(௫௯-ஆம் பக்கம் ௮-ஆம் வரி) 'சிலகண்ணி யிறுக்கி' என்றும் ௧௯-ஆம் வரி 'புலியோடம்புலியைத்தாக்கி' என்றும் பாடம்.

(௯௦-ஆம்பக்கம் ௬, ௭-ஆம்வரி) 'மார்க்கமெல்லாம் பலபேசிக் கொண்டு வாட்கார நூவனும்வந்தானே' என்றும், (௧௯-ஆம் வரி) 'மட்டுவோய்' என்றும் பாடம்.

(௯௩-ஆம்பக்கம் ௧௫-ஆம்வரி) 'குளமோடைக்காங்கேயன்' என்றும் பாடம்.

(எச-ஆம்பக்கம் ச-ஆம்வரி) 'காவலர் திரிகூடத்திற் காதலாற்கலங்கி வந்த' என்றும் பாடம்.

(எகூ-ஆம்பக்கம் கூ-ஆம்வரி) 'மாயிருங்காகங்கள் என்றும் பாடம்.

(எஅ-ஆம்பக்கம் ௬-ஆம்வரி) 'சேடநீதிரிகூடத்திற் சிங்கியைத்தேடுவாயே' என்றும் பாடம். சேடன்—தோழன்.

(அஎ-ஆம்பக்கம் அ-ஆம்வரி)'எங்கேகடந்தாயடிசிங்கி' (எங்கே நடந்தாயடி) என்றும் பாடம்.

(அஅ-ஆம்பக்கம் ௫-ஆம்வரி) 'மார்க்கமதேதடிசிங்கி' என்றும், (க௬-ஆம்வரி) 'விரித்துமடித்தவரார்சிங்கி' என்றும், (கச-ஆம்வரி) 'நெல்வேலியார்தந்தசல்லாபச்சேலை' என்றும், (உஉ-ஆம்வரி) 'பாருக்குளேற்றமாங்காயலார்தாந்தந்த' என்றும் பாடம்.



லோகாம்பிகை பிரஸ், தென்காசி.

# பிழையும் திருத்தமும்.


| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 4 | 29 | Was | was |
| 6 | 13 | Walks | walks |
| 32 | 8 | பொருத்தருளுமாறு | பொறுத்தருளுமாறு |
| ௭ | 2 | படகு | படரு |
| ௧௪ | 14 | தண்டு | வண்டு |
| ௧௫ | 2 | கொண்டை | கெண்டை |
| ,, | 30 | தோல்வளை | தோள்வளை |
| ௧௯ | 21 | குதிகொண்டடாட | குதிகொண்டாட |
| ௨௬ | 6 | நாணும் | நானும் |
| ௩௮ | 9 | ககலமலை | சகலமலை |
| ,, | 16 | யெந்த | யெந்தை |
| ௪௰ | 20 | குறித்திடுஞ் | குருத்திடுஞ் |
| ௭௩ | 8 | பறவெல்லாம் | புறவெல்லாம் |
| ௯௧ | 25 | வருவியான | வருவியான் |

விலை அணா எட்டு.

*Copyright Reserved.*

# இப்புத்தகத்தில் அடங்கியவை.


| | பக்கம் |
|---|---|
| மூன்றாம்பதிப்பு முகவுரை. (டி. கே. சிதம்பரநாத முதலியார் பி. ஏ., பி. எல்.,) | 1—4 |
| ஆங்கில முகவுரை. (ராவ் சாகிப். K. S. கற்பகவிநாயகம் பிள்ளை) | 1 — 10 |
| முதல் பதிப்பு முகவுரை. (மு. ரா. அருணாசலக்கவிராயர்) | 11 — 14 |
| இரண்டாம் பதிப்பு முகவுரை. (மு. ரா. அருணாசலக்கவிராயர்) | 15 — 16 |
| நூலாசிரியர் வம்சாவளி. | 17 — 18 |
| நூலாசிரியர் வரலாறு முதலியவை, (குக. மணிவாசகசரணாலயர்) | 19 — 32 |
| திருக்குற்றாலத் தேவாரத் திருப்பதிகங்கள். | 33 — 38 |
| **திருக்குற்றாலக்குறவஞ்சி** (குறிப்புரையுடன்) | க — கூஉ |
| அனுபந்தம் | 1 — 4 |
| பிழையும் திருத்தமும். | 5 |



குற்றாலம் நீர்வீழ்ச்சி.

# திருக்குற்றாலக் குறவஞ்சி

## மூன்றாம் பதிப்பு

## முகவுரை

ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழில் அருமையான கவிகள் இயற்றப்பட்டன. திருக்குறள், திருவாசகம், காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதி, குலசேகர ஆழ்வார் பாசுரங்கள், பொய்கைஆழ்வார் பாடல்கள், கலிங்கத்துப்பரணி, கம்பராமாயணம் முதலானவை அநுபவிக்கத்தக்க கவிகள். அவைகளைக் கற்கும்போது தமிழராகிய நமக்குத் தனித்த ஒரு பெருவகை பிறக்கிறது. அவைகளுக்குப் பிற்பாடு உண்டாயிருக்கிற நூல்கள் — புராணங்கள், கோவைகள், அந்தாதிகள் எல்லாம் அனேகமாய்க் கவித்துவம் என்பது இல்லாத, எதுகைமோனைகளைக் கணக்காக அமையும்படிசெய்து தீர்த்த செய்யுள்களாகத்தான் முடிந்தன. பூர்வமான, தமிழ்ப்பண்பு, கவிப்பண்பு, இதயப்பண்பு இவைகளை ஆசிரியர்கள் அறவே மறந்துவிட்டார்கள் அல்லது ஒழித்துவிட்டார்கள் என்று சொல்லவேண்டியிருக்கிறது. ஏது தமிழ்க்கவி அஸ்தமித்தே போய்விட்டதோ என்று அஞ்சவே தோன்றும்.

இந்த நிலைமையில் இருநூறு வருஷங்களுக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவில் மேலகரம் என்ற சுமார் ஐம்பது கூரை வீடுகள் உள்ள சிறிய ஊரில் இருந்த புலவர் ஒருவர் தமிழ் பாஷையின் இன்பநிலைகளை அநுபவித்தறிந்து அற்புதமான கவிகளைப் பாடி உதவினார் என்பது பாலைவனத்துக்கு மத்தியில் கற்பகக்காவைக் கண்ட கணக்குத்தான். புலவர் திரிகூடராஜப்பன் கவிராயர் பாடிய 'குறவஞ்சி' தன்னுடைய புலமையைக் காட்டிவிட வந்த சொறகோவை அல்ல; உண்மையாக இதயம் அநுபவித்த ரஸங்களைத் தமிழுக்கே உரிய இசையிலும் தாளத்திலும் வைத்துப் பாடிய பாடல்கள். வழக்கோடு ஒட்டிய தமிழில் எளிமைபடப் பாடியிருப்பதால் தமிழராய்ப் பிறந்த யாருமே கவிரஸத்தை அநுபவிக்கும்படியாக இருக்கின்றன. தமிழ் நூல்களை முறையில் கற்றுணர்ந்தவர்களுக்கோ கற்கக்கற்கத் தெவிட்டாத தேன்தான்.

நாற்பது ஐம்பது வருஷத்துக்கு முன்பு திருநெல்வேலி மதுரைச் சீமையில் தமிழ் கற்றவர் என்றால் குற்றாலக் குறவஞ்

சியைக் கல்லாதவர் இருக்கமாட்டார்கள். மங்கை நாடகத்தி லும் பரத நாட்டியத்திலும் குறவஞ்சிப் பாடலைப் பாடுவது சாமான்யம். எல்லாப் பள்ளிக்கூடங்களிலுமே பாடமாக வைத்துப் பாடும்படியாகக் கற்பிப்பார்கள் பிறகு ஆங்கில பாஷையைக் கற்க நம்மவர் முயன்றார்கள்; மதராஸ் யூனிவர்ஸிட்டியும் பட்டம் அளித்துவிட்டது. அவ்வளவுதான். தமிழ் கற்பதே அகௌரவம். குற்றாலக் குறவஞ்சியைப் படிப்பது அனுபவிப்பது என்பது எவ்வளவு கேவலம்! ஆங்கிலக்கவிகளை வைத்துக்கொண்டு எவ்வளவு கஷ்டம் பட்டாலும் சரி அனுபவித்தோம என்று மாத்திரம் சொன்னால் போதும் அவர்களுக்குப் பெரிய பெரிய மதிப்பு

இருபத்தைந்து வருஷத்துக்குமுன் ஒரு திருத்தமான பதிப்பும், பன்னிரண்டு வருஷத்துக்குமுன் இரண்டாவது பதிப்பும் வெளிவந்தன. ஆனாலும், குறவஞ்சியைத் தமிழுலகம் கவனித்தபாடாக இல்லை. காரணம், மேலே சொன்ன ஆங்கில மோகம் ஒன்று. மற்றது, பண்டைத் தமிழ் பண்டைத் தமிழ் என்று வழக்கொழிந்த பாஷையில் எழுதிய நூல்களின் மேல் ஏற்பட்ட மோகம். தற்போது இந்தமோகம் எல்லாம் கொஞ்சம் தெளிந்து வருகிறது. உண்மையான தமிழ்க் கவியை அனுபவிக்க வேண்டும் என்ற அவா தமிழர் பலருக்கும் உண்டாய் வருகிறது குறவஞ்சிக்கும் பூர்வமாக ஏற்பட்ட மதிப்பு மறுபடியும் ஏற்படலாம் என்று சொல்லக் காரணம் இருக்கிறது.

குறவஞ்சி ஆசிரியர் காலத்தில் சாமான்ய மக்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் வின்னியாசமான செய்யுள்களிலும் கற்பனைகளிலும் மற்றும் போலியான விகடங்களிலுமே விருப்பம் இருந்தது ஆகவே அவர்களுடைய விருப்பத்திற் கிணங்கியோ அல்லது மற்றப் புலவர்களோடு ஒட்டிப்போகும் காரணத்தினாலோ சிற்சில அவசியம் அல்லாத விஷயங்களும் கவிப்போக்குகளும் அங்கொன்று இங்கொன்று காணக்கிடக்கின்றன. அவைகளை ஒதுக்கிவிட்டு நூலைப் பார்ப்போமானால் ரொம்ப ரொம்ப வியக்கக்கூடியதாகவும் தெவிட்டாத ரஸம் உள்ளதாகவுமே இருக்கக் காண்போம். ஏதோ பழம் புஸ்தகங்களையும் நிகண்டுகளையும் வாசித்துவிட்டு அவைகளையே அப்படியும் இப்படியுமாகப் புரட்டுகிற காரியம் அல்ல. இயற்கையை— புற இயற்கையையும் மக்களின் உள இயற்கையையுமேதான் இதயத்தோடு ஒட்டவைத்து அனுபவித்தவர்.

"ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக்காண்பது யோகியர் உள்ளம்"

இது புலவர் திருக்குற்றாலத்தைக் கண்டு பாடியதல்லவா! தினை இலக்கணத்தை முன்னால் வைத்துக்கொண்டு எழுதிய வெறும் சம்பிரதாயச் செய்யுளா? மேலும் உண்மையான பழந்தமிழ்க் கவிகளை இதய தத்துவம் புலப்படும்படியாக ஊடுருவிக் கற்றிருக்கிறார்.

" வாகனைக்கண் டுருகுதையோ—ஒரு
மயக்கமதாய் வருகுதையோ

மோகம்என்ப திதுதானோ—இதை
முன்னமேநான் அறியேன்! ஓ!

ஆகம் எல்லாம் பசந்தேனே—பெற்ற
அன்னை சொல்லும் கசந்தேனே

தாகம் அன்றிப் பூணேனே—கையில்
சரிவளையும் காணேனே "

காதல்த்துறையில் வெள்வளையைக் காணோமே காணோமே என்று பாடியதையெல்லாம் பார்த்து சடைத்துப்போயிருக்கிறோம். ஆனால் நம்முடைய ஆசிரியர் அதைக் கையாளுகிற விதத்தில் நாயகி கைவளையல்களை உண்மையிலேயே காணாமல்ப் போக்கிவிட்டு அங்கும் இங்குமாகத் திகைத்துப் பார்க்கிற சாயல் நம் கண்முன்னால் வந்துவிடுகிறது.

குறத்தி வருகிறது, குறி சொல்லுகிறது; வேடன் வருகிறது, பறவைகள் மேய்கிறது முதலான பாடல்களைப் பார்த்தால் கவியெல்லாம், காட்டிலும் மலையிலும்தான் சஞ்சரிக்கிறது என்று சொல்லத்தோன்றும். எத்தனை தடவை படித்தாலும் அந்தப்பாடல்கள் புதிதாகவே தோன்றும்.

சமய பக்தி என்றால் அதுசம்பந்தமாக மூர்த்தியையும் ஸ்தலத்தையும் அனுபவிக்கிறதும் கூடத்தான்.

" சுற்றுத ஊர்தோறும் சுற்றவேண்டாம் புலவீர்
குற்றாலம் என்றொருகால் கூறினால்—

போதும், என்று அழகாக அனுபவித்துப் பாடுகிறார். இயற்கை அழகையும், கடவுள் தத்துவத்தையும் ஒன்றாய்ச் சேர்த்து அனுபவித்து விடுகிறார். சிருஷ்டி தத்துவங்களில் உள்ள உண்மைகளை தற்காலத்து ஸயன்ஸ் நிபுணர்களைப்போல நேர்முகமாகக்கண்டு அனுபவித்துப் பாடுகிறார். ஒரோஒரு தத்துவங்

தான் சகல பகுதிகளையும் ஒழுங்கானமுறையில் இயங்கச்செய்கிறது என்பது தற்காலத்து ஸயன்ஸ் முடிபு. அதை இருநூறு வருஷங்களுக்கு முன் நமது மேலகரம் கவிராஜர்

"சாட்டிநிற்கும் அண்டம்எலாம் சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் குற்றாலத் தண்ணலார்"

என்று உடல் புளகிக்கப் பாடுகிறார்.

இப்படிச் சிறியவிஷயம் பெரியவிஷயம் எல்லாவற்றையும் பற்றிப் பாடுகிறார் ஆனால் ஒன்று: அவைகளுக்குள் எல்லாம ஒரு ஹாசிய ரஸமும் ஒரு பக்தி ரஸமும் பின்னிக்கொண்டு ஓடுவதைப் பார்க்கலாம். இதைப்பார்த்து அனுபவிக்கக் கொடுத்துவைத்தவர்கள் தமிழர்கள் தான்.

திரிகூடராஜப்பன் கவிராயருடைய சரித்திரம் பரம்பரை முதலானவைபற்றிய குறிப்புகளையும் செய்யுள்களின் நயம் பற்றிய குறிப்புகளையும் இத்துடன் சேர்த்திருக்கிற முதலாவது இரண்டாவது பதிப்பின் முகவுரைகளில் கண்டு அனுபவிக்கலாம். ராவ்சாகிப் கற்பகவிநாயகம் பிள்ளை அவர்கள் குறவஞ்சியின் கவிநயத்தை திறம்பட மதித்து அனுபவித்தவர்கள். அவர்களால்த்தான் குறவஞ்சி எத்தகைய கவிச்சிறப்பு வாய்ந்ததுவென்ற விஷயம் தமிழுலகுக்குத் தெரியவந்தது. அவர்களுடைய பதிப்பையே ஒட்டியுள்ளது இந்த மூன்றாம் பதிப்பு.

திருக்குற்றால தேவஸ்தானத்திலிருந்து 'குறவஞ்சியை' புதிய பதிப்பாக வெளியிடுவது ரொபபவும் போற்றத்தகுந்த விஷயம்' ஆசிரியரின் மற்றப் பிரபந்தங்களையும் இதோடு வெளியிடுகிறார்கள். தர்மகர்த்தர் ஸ்ரீமான் வி எஸ். சண்முகநாத முதலியார் அவர்களுக்கும், மானேஜர் V. சங்கரலிங்க முதலியார் அவர்களுக்கும் தமிழுலகம் ரொம்பவும் கடமைப்பட்டுள்ளது.

திருநெல்வேலி;
5—12—1937.

டி. கே. சிதம்பரநாத முதலியார்.

# PREFACE.

"Truth is the property of the Infinite,
The pursuit of Truth of the Finite"—*Von Muller.*

In bringing out a second edition of the *Thirukutta-la Kuravanji* some fifteen years after the first, the present editor desires to say a few things which may serve to capture the attention of the Tamil reading public that may in the absence of an introduction, pass this by as a minor literary product of secondary importance. To the *editor* himself, the task is both a labour of love and the fulfilment of a pious duty towards the author *whose descendant he is* But the average reader (and readers of Tamil are, alas, too rare and have to be caught warily) may not care to go on unless he knows something of the author and his work.

From time to time in the history of our planet, men have sprung up remarkable for their scholarship or their wisdom or their capacity to sacrifice themselves wholeheartedly for the public good; and even those who have shuffled off this mortal coil have left their wisdom and experience for the benefit of posterity in the shape of books. Southern India can also boast of such great men. One such was *Thirukuta Rajappan Kavirayar*, the *author of the present work.* He was born at *Melagaram* near *Courtallam, Tinnevelly* District, about two hundred and fifty years ago (within two decades more or less) He was the author of *fourteen* works three of which have appeared in print, *viz.*, Thirukkuttala Kuravanji, Thirukkuttalapuranam, and Thirukkuttalamalai. The works both published and unpublished are remarkable for their literary merit and devotional value, and that too in a land where devotional poetry is by no means rare. The present work—the

Kuravanji—won the approval of a conclave of Tamil pandits brought together for the purpose by the **Pandyan king**, Muthuvijayaranga Chockalinga Nayakkar, at Courtallam. The king was so mightily pleased that he honoured the poet with the **title of temple vidwan of Thirukuttalam**, and granted him lands almost adjacent to the temple, which to this day are known as **Kuravanji Medu**. The date of the grant, a copper-plate one, is the 12th of **Thai** of the year 1640 (Salivahana Era) corresponding to 891 of the Malayalam Era or 1718 A. D. According to tradition, the poet was about 70 years old at the time The lands so granted were inherited by and are also now in the enjoyment of the editor and his revered brother, M. R. RY. K S. Vaithilingam Pillai Avergal. Among the **contemporaries** of the author, special mention must be made of the eminent Tamil devotional poet, **Tayumanavar**, and Namasivayakavirayar of Vikramasinghapuram, an ancestor of Mathava Sivagnana Yogi who won immortal renown by his **Mapadiyam** and other great works on the Saiva Siddhanta.

**The work** itself is unique in character. Literary precedents it had none: one or two have attempted to follow, but with indifferent success. It belongs to be general class of **street dramas**, a style of performance which still persists, though unhappily fast dying out. The modern stage with its garish lights, flaunting curtains and fetid atmosphere seeks to blend all the effects of action, song and scenery, but lamentably fails to create any effect. The illusion it produces is in its own mind, not in that of the spectator: and the solitary pleasure the latter derives is the melancholy satisfaction that without any special effort on his part, he can inhale all the disease bacilli known and

unknown to Science. And in return for this, he has to pay and that richly. In what a refreshing contrast to all this is the *street-show!* Nature provides the stage and most of the lighting effect; the open theatre does away with the heat and discomfort of the modern stage The players depend for their livlihood not on the gate, but on charitable endowments The audience is in a sweeter, cleaner and more receptive mood and the "philosophic pill" administered through the play goes down easily, though it cannot boast of much "gilding."

To provide a free show goes a long way to secure an audience; but to keep the audience one must capture its imagination And what is better calculated to do this than a *love-tale*? The street-shows are thus tales of love from its inception to its consummation. present or expected

*South Indian devotional literature,* God-intoxicated as it is, knows of no higher or more appealing symbolism than the *refined love of man and woman. The soul seeking its creator* is like the high-born lady who has had a glimpse of the royal lover, but has missed him, and sits waiting for him, too ignorant of the world to set out to seek him, too modest to confess her love and too much [illegible] [illegible]ssfully Even thus does *the D*[illegible] [illegible]ing this finite clod, till at last it [illegible] *The Eternal One has divided* [illegible] *into two, which ever seek to merge themselves each in the* [illegible] And on the finite plane, nothing can symbolise this better than human love What nobler aim can a play have than to capture the mind of a crowd with a tale of love that all the while points to the higher way?

*The human-divine love motif* was, then, common to South Indian literature. The uniqueness of the present work consists in the introduction of the *Kurathi* and the **duplication of the love theme**. The **Kuravars of today** are a very depressed class, and it is with difficulty that thay are not treated wholesale as a criminal tribe. Their modes of livelihood are precarious; they are still noted only for basket-making; they are known to snare birds and small animals, including vermin like bandicoots; their life is, in a word, squalid. But not so very long ago, theirs would seem to have been a picturesque life, to judge from this work. They were then as now essentially nomadic, and the wandering life of these gipsies seems to have given them a fund of experience and quaint knowledge The gipsy-woman alone seems to have preserved traces of her ancient lore, for she is still sought after to tell the fortunes or tattoo the bodies of her higher placed sisters. A roaming **carefree** life with its ups and downs and its innumerable points of contact with people high and low, of various climes and communities, would necessarily polish the wit of the dullest person; and the **Kuravars**, to judge from the Kuravanji would appear to have been anything but a dull lot. The scenes where Singan (the Kuravan) and Singi (the Kurathi) appear are indeed full of the most sparkling wit. The introduction of such characters in a street-play was calculated to enliven the interest and relieved the tedium incidental to he otherwise frail structure of such plays. To do this without doing violence to the main theme was **a stroke of enius** for which our author deserves unstinted praise.

**The heroine**, a lovely maiden accomplished in all the arts and graces of the period, is out playing tennis, which ppears to have been even then quite a lady-like accom-

plishment While thus engaged, she sees Thirukudanathar (the *deity* of Courtallam) come out in procession. She feels strangely affected, but does not quite realise what her malady is or what the cause of the trouble is. The cold moonlight and the delicious breeze, otherwise so welcome, have now become torments, along with all thoughts of love She chides the Moon and Cupid for their cruelty to one in her helpless condition. She communes with her companions and finds out she has fallen in love But who is her lover? When will he come again? Or will he come at all? Is this passion to be fruitless? Is all that is left to her only to pine away (her bangles are already slipping off her arms) and die? At this juncture appears the Kurathi She may know something of this *mysterious lover*, for she is a much travelled person. She has gone round the whole of India even to the confines of China. She has met many royal personages and has been richly rewarded by them. And besides, is she not *mistress of the occult*? She is brought in and questioned. Of course, the cause, of the trouble is plain to her. She knows who the lover is, and describes not only him, but also his country and his abode. From the lips of the gipsy we get one of the finest descriptions of Courtallam and its precincts* The heroine now knows all that

---

*Poets yearning to enjoy and describe the glories of Nature can find no better place than Courtallam. Its woods and its water-falls combine majesty with grace. The heart exalted by the sight at once turns to thoughts of worship, and who more worthy of worship than the Lord Siva appearing here IN HUMAN FORM as Kurum Pala Isar, the LORD OF SHORT JACK TREE? The original tree is still in existence, and if it is the same as the one mentioned by Tiru Gnana Sambandhar, must be over 1,000 years old. This is a very great age, but not improbable, in view of the claim that the BODHI tree at Anuradhapura is the same as the one planted by Asoka's sister, when she went on the mission to Ceylon.

she can know from an outsider. Description has served to illumine much that was dark before *Concentration may now begin* and *realisation follow in its wake.* The gipsy has fulfilled her function; she is suitably rewarded and allowed to depart.

This, however, is not the last we see of the Kurathi. Her intervention, though not improbable, is more or less machanical or artificial. But the gipsy is no machine; she is a human being, capable of loving and being loved. And the human interest is kept up when we see her lover, Singan, on the stage. Singan is a fine man of his class, expert in the walks of life common to his community. While pursuing successfully his usual avocation of snaring birds, he sees Singi, loves her and follows her He misses her for a while, and when at last he finds her, he is bewildered at seeing her decked out in silk and gold. He is jealous. Where could she have got these? Has any one fore-stalled him? Then we hear Singi soothing him and dispelling his fears with her wondrous tales of the countries she had visited, the people she had met, and the exhibition of her skill which had brought her the gifts she was showing off. A love-tale gives little room for the display of **historical** or **geographical** knowledge; but the tale of Singi's travels abounds in such references. We hear of the **Kiluvai Mannan,** Sinnananja Thevan, (சின்னணஞ்சாத் தேவன்) who provided a copper roof to the Chitra Sabha at Courtallam (this is one of the five sabhas of Nataraja's mystic dance); in the year 887 Malayalam era we also hear of Shenbaga Maran who re-edifled the Tenkasi temple in the year 424 Malayalam Era. These personages are historical. The description of the ornaments gives us an interesting picture of the jewellery of the time fashioned in the image of flowers, and birds

and small animals. It is also interesting to note that while the **Ramayana** harps on the unhistorical ten heads of **Ravana,** the **Saiva Samayacharyas** thought more of **his Sivabhakti** and the **saintly devotion of his wife, Mandothari who had but to command to secure the presence of the Lord to remove her from this vale of sorrow**

தென்னிலங்கை வாழுமொரு கன்னிகை
மண்டோதரியாள்மானே — அவர்
பொன்னடியிற்சேர்ந்தனைய என்ன
தவஞ்செய்தாளோ — மானே

*This aspect of the Ravana story* finds expression in the play and serves to show the *profound Sivabhakti of the Author* (Readers who are further interested in this subjcet are referred to the work of the late Prof P. Sundaram Pillai, author of *Manonmaniyam,* and my worthy friend (M R. Ry. Rao Sahib V. P. Subramania Mudaliar Avl, a Tamil scholar and poet of no mean order).

*The introduction of the second love theme* has the effect of giving body to the play. It may be compared to the effect of the bass in a piece of music. The tune played is good, but the bass and the tenor together make for the richness of the music *The tale of the soul in quest of God* is good; *the tale of the man in pursuit of a woman* is common. But the good and the common put together make this work what it is excellent

*The slight change of emphasis in the two love themes is also note-worthy.* It is the love of a woman in the one case and that of a man in the other. If psychologists are correct, the love of a woman is and is bound to be purer fuller and moral asting than that of a man. Is it not fitting that both these should be presented side by side in relation to and contradistinction from *Divine Love* which

indeed is the *sole theme* and the *undercurrent* of the play? Divine Love is greater than all; but the superiority of a woman's love to man's is that not an indication of superiority of God's Love to the rest?

Enough has been said by now about the charm and distinction of *the work* Those who would know more must go to the work itself; for no criticism can do justice to its infinite grace and beauty. The editor has only attempted to show that here is the production of a poet of the first rank It may be worth noting incidentally that in common with other great poets our author seems to have possessed the power of gifted expression, which apparently by itself could bring about what was desired or wished. Thus, for instance, he referred to ILANJI as MEERUMILANJI in the present work, and as PONNILANJI in the Thirukkuttala Talapuranam; the prosperity of the village Ilanji seems to have dated from this period.

The fame and popularity of the play may be further judged from the fact that the RAJAH OF TANJORE created an endowment for its annual staging in the Siva Temple at Tanjore, at the time of the NAVARATHRI festival. The performance is given to this day.

Reference may be made to SOME OF THE DESCENDANTS OF THE AUTHOR to show how near he was to our own times. THE MOST FAMOUS OF THESE was SRILASRI SUBRAMANIA DESIGA SWAMIGAL, the saintly and most illustrious FORMER PANDARA SANNIDHI of THIRUVAVADUTHURAI MUTT. He was a scholar of great renown, and a great PATRON OF TAMIL and SANSKRIT learning and SOUTH INDIAN MUSIC. His praises have been sung by

eminent men like the late MAHAVIDVAN MINAKSHI-SUNDARAM PILLAI, the late CHRISTIAN, SCHOLAR and TAMIL POET VEDANAYAGAM PILLAI and Mahamahopadhyaya Sri V. Swaminatha Aiyar Avergal whose fame is well known to the Tamil world.

VAITHILINGA KAVIRAYAR, the elder brother of the Swamigal, was also a scholar of repute, both in Sanskrit and Tamil. He was invited to the Courts of Travancore and the Setupathi and Seithur and was held in great esteem.

The present Head Tamil Pandit of the Hindu College, Tinnevelly, M.R. Ry. M. C. SUBRAMANYA KAVIRAYAR Avl., is another descendant. This gentleman's scholarship was recognised recently by the presentation of a KHILAT at the time of the Prince of Wales' visit in 1922.

The house where the poet and SRILASRI SUBRAMONIA DESIKA PANDARA SANNADHI were born still stands and is in the possession of the present editor. It was visited by the late Ramnad Rajah Bhaskara Setupathi, among others. At the suggestion of his esteemed friend, the PRESENT RAJA OF RAMNAD, His Highness Rajah Sethupathy Srimath Hiranya Garbayaji Ravikula Muthuvijaya Reghunatha Rajah Maharaja Raja Sri Raja Rajeswara Sethupathy ALIAS B. Muthuramalinga Sethupathy Avergal, the editor has carried out extensive repairs to the house so that it may continue to stand for centuries and serve as a place of pilgrimage, even like Sankara's birth-place at Kaladi. May Saivite devotees make it a point to visit the place. Gurupuja is performed every year, and any slender

profits accruing from the publication of the poet's works are devoted exclusively to the peformance of the puja. May his life and works ever be a source of inspiration to us and a light to guide us to the Path of Grace.

**Rao Sahib, K. S. Karpagavinayagam Pillai,**

**25—10—'27.**

NOTE:— The first edition was brought out by M. R. Ry. M. R. Arunachala Kavirayar Avergal of the Madura Tamil Sangam, who has rendered invaluable assistance to the present edition as well by contributing illuminating notes etc. The present editor takes this opportunity of rendering him a full measure of thanks as also to Sri Manivasaga Saranalaya Swamigal of Kallal, Ramnad District, for his interesting and exhaustive Tamil preface and to his uncle M. R. Ry. M. C. Subramonia Kavirayar Avergal for his sincere help in bringing out this edition with grace.

சிவமயம்.

# முதற்பதிப்பின் முகவுரை.

குறவஞ்சியென்பது குறத்திப்பாட்டு எனக் கூறப்படும்; அதுவருமாறு: தலைவன் பவனிவருதல், அப்பவனியைக் கண்ட பெண்கள் அத்தலைவனைக் காமுறுதல், மோகினிப்பெண் (தலைவி) வருதல், அவள் பவனிவந்த தலைவனைச்சண்டு மயங்கல், மயங்கியபின் சந்திரன் தென்றல் முதலியவரை நிந்தித்தல், அது கண்டு பாங்கி மோகினியை ஐயுற் றதென்னென வினவுதல், தலைவி பாங்கியோடு உற்றதுரைத்தல், பாங்கி தலைவனைப் பழித்துக்கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்துகூறல், தலைவி பாங்கியைத் தலைவனிடந் தூதுபோகச்சொல்லி வேண்டுதல், தலைவி பாங்கிக்குத் தலைவனடையாளங்கூறல், குறத்தி வருதல், தலைவி குறத்தியை மலைவள முதலியவை வினவுதல், குறத்தி தலைவிக்குத் தனது மலைவளம் நாட்டுவள முதலியவையுந் தலைவனது தலவளங் கிளைவள முதலியவையும் பிறதேசத்திற் குறிசொல்லி விருதுசள் பெற்று வந்ததையுங் கூறல், தலைவி குறத்தியினிடங் குறிகேட்டல், குறத்தி தெய்வந்தொழுதல், தலைவி நினைத்த காரியத்தைக் குறத்தி குறிமுகத்துக் கூறல், தலைவி குறத்திக்குப் பரிசிலுதவி விடுத்தல், குறவன் வருதல், பறவைகள் வருதல், கண்ணி குத்தல், பறவைகளைப் பிடித்தல், குறவன் குறத்தியை விருப்பமுற்றுத் தேடல், பாங்கனோடு குறவன் குறத்தியடையாளங் கூறல், குறவன் குறத்தியைக் காண்டல், குறவன் குறத்தியினிடத்துப் புதிய ஆபரணங்களைக் கண்டு ஐயுற்று வினவுதல், அங்ஙனம் வினவும் ஒவ்வொன்றுக்குங் குறத்தி விடை கூறல் ஆகிய இவ்வகை யுறுப்புக்களமைய அகவல், வெண்பா, கொச்சகம், கலித்துறை, கழிநெடில்விருத்தம் இவைகளினிடையிடையே சிந்து முதலியவற்றை நாடகத் தமிழாற் பாடுவது.

இத்தகைய நூலைச் செந்தமிழ்ப் பரமாசாரியராகிய அகத்தியமுனிவ ரிருப்பிடமாயுள்ள பொதிகைமலைச் சார்பிலிருக்குந் திருக்குற்றாலமென்னும் க்ஷேத்திரத்தி லெழுந்தருளிய திரிகூட

நாதசுவாமிக்குத் திருமேனியைவிட்டு நீங்காத ஓராபரணமாகச் செய்து திருக்குற்றாலக்குறவஞ்சி யெனப் பெயரிட்டுச் சாத்தி யவர் திருக்குற்றாலத்துப் பக்கமாகிய மேலகரத்து வைசிய வேளாளகுலவிளக்காக விளங்கிய திரிகூடராஜப்பக் கவிராய மூர்த்தி யென்பார்; இவர், தமதுகாலத்திற் காணப்பட்ட தமிழிலக்கிய இலக்கணங்க ளெல்லாவற்றையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து கற்பனை யமகம் திரிபு சிலேடை முதலிய பாடல்களைச் சொற்சுவை பொருட்சுவைகளுடன் எதுகை மோனை யாதிய நயம்பெறப் பாடவல்ல அதிசமர்த்தராய்ப் பிரசித்தி பெற்றிருந்தா ரென்பது இவர் பாடிய திருக்குற்றாலக் குறவஞ்சி முதலிய *பதினான்கு பிரபந்தங்களால் யாவருக்கும் நன்கு புலப்படும். நுண்ணறிவுடையார் இப்பதினான்கு பிரபந்தங்களையும் பார்த்தறிய வேண்டுவதில்லை தாலீபுலாக நியாயமாகத் திருக்குற்றாலத்தலபுராணமொன்றினுமே யிவரது வித்துவத் திறமையை யறியலாகும், இங்ஙனம் பாடுவார் பலருளரேனும் இவரைப்போலும் படிப்பவர் மனத்திற் பத்திரசம் பழுத் தொழுகுமாறு பாடுவார் மிகச் சிலரேயாவர்.

இவரது காலம் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூறு வருடங்களுக்குமுன்னென்று தோன்றுகின்றது. [illegible], பாண்டிநாட்டை யரசாட்சிசெய்துவந்த [illegible] முத்து விஜயரெங்கசொக்கலிங்கநாயக்கரவர்கள் [illegible] இவரது வாக்குநயவிசேடத்தைத் [illegible], திருக்குற்றாலக் குறவஞ்சியைக் குறும்பலாவீசர் சந்நிதியி லரங்கேற்றுவித்துப் பெருமகிழ்ச்சியடைந்து முதன் மரியாதைகள பலவுஞ் செய்து திருக்குற்றாலநாதர்கோயில் வித்துவானெனப் பட்டப் பெயருங் கொடுத்ததுடன் குறவஞ்சிமேடையென இப்போது வழங்குகிற

---

*பதினான்கு பிரபந்தங்களாவன:—

1. திருக்குற்றாலக் குறவஞ்சி.
2. ௸ தலபுராணம்.
3. ,, மாலை.
4. ,, சிலேடை வெண்பா.
5. ,, யமகவந்தாதி.
6. ,, உலா.
7. ,, ஊடல்.
8. திருக்குற்றாலப் பரம்பொருள் (மாலை.
9. ௸ கோவை.
10. ,, குழலவாய்மொழி கலிப்பா.
11. ,, கோமளமாலை.
12. ,, வெண்பாவந்தாதி.
13. ,, பிள்ளைத்தமிழ்.
14. ,, நன்னகர்வெண்பா.

நன்செய்நிலத்தைப் பரிசிலாகக் கொடுத்து, எழுதிக்தந்த தாமிரசாஸனத்திற்கண்ட "சாலிவாகன சகாப்தம் 1640க்குச் செல்லாநின்ற கொல்லம் 891க்கு தைமாதம் 12உ ையக் கணக்கிட்டுப் பார்த்தலாலெண்க. இந்நூலாசிரியருக்குக் கிடைத்த கௌரவப் பட்டப்பெயரும் கோயில் மரியாதைபோலப் பிற இடங்களிற் செய்யும் மரியாதையும் குறவஞ்சி மேடென்னும் தாமிரசாஸனம்பெற்ற நன்செய்நிலமும் இக்காலத்தும் இவரது பரம்பரைச் சந்ததியாரும் பெண்வழிக் காணியாக அடியில்வரும் வயித்தியலிங்கம்பிள்ளையவர்களும் கற்பகவிநாயகம் பிள்ளையவர்களும் கையாண்டுவருவதைப் பிரத்தியட்சமாகக் காணலாம்.

திருக்குற்றாலக் குறவஞ்சியைப்போ லொரு குறவஞ்சியும் கூடற் பள்ளுப்போ லொரு பள்ளும், வருணகுலாதித்தன் மடல்போ லொரு மடலும் இல்லையென்று நீண்டநாளாக அறிவுடையாரெல்லாரும் பேசக்கேட்டு வருகின்றோமென்றால் இத்திருக்குற்றாலக் குறவஞ்சியின் பெருமை யாதெனன்னென்றெழுதுவதாகும் இங்ஙனம் அரிய பெரிய விசேடமாகிய இப்பிரபந்தத்தை முப்பது வருடங்களுக்குமுன் அச்சிட்டவர் பலரும் திருத்தமாக அச்சிடாமல், பிழைகள் நிரம்ப அச்சிட்டு, படிப்பவர்களுக்குப் பல செய்யுள்களிலும் பொருள் புலப்படாதிருக்கும்படி செய்துவிட்டனர். ஆதலால் இதனைத் திருத்தமாக அச்சிடுவித்தா லெல்லாருக்கும் பொருள்காண்பது இலேசாயிருக்குமெனத் திருக்குற்றாலத் தலபுராணம் அரும்பதவுரையுடன் அச்சுப்பதிப்பிக்குங்காலத்தி லெண்ணியிருந்தேன். என்னுடைய எண்ணம்போலவே மேற்படி நூலாசிரியர் வழித்தோன்றலாகிய திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகசுவாமிகளது தமையனார் வயித்திலிங்கக் கவிராயரவர்கள் தௌஹித்திரரும் கடையம் சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் புத்திரருமாகிய வயித்தியலிங்கம்பிள்ளை யவர்களும் அவர்களுடைய சகோதரர் கற்பகவிநாயகம்பிள்ளையவர்களு மெண்ணியிருந்தார்கள்.

இவ்விருவரும் உத்தியோகநிமித்தங் கற்ற ஆங்கிலக் கல்வியைப் பார்க்கினும் தம் சுயபாஷையாகிய தமிழ்க்கல்வியை நிரம்பக்கற்றுத் தெளிந்த சிவநேசச் செல்வமும் பரோபகார தரும சீலமும் உடையாராதலின் இவர்களுள், கற்பகவிநாயகம்

பிள்ளை யென்பவர்கள் தமதெண்ணத்தை யெனக்குத் தெரிவித்துத் திருக்குற்றாலக்குறவஞ்சியைச் சுத்தப்பிரதியாக்கி, அதி விரைவிலச்சிட்டு வெளிப்படுத்தவேண்டுமென்று, அச்சிடுதற்கு வேண்டிய திரவியசகாயமுஞ் செய்து, ஊக்கமூட்டினார்கள்; இவர்களது குணாதிசயங்களை யுய்த்து நோக்கும்போது திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள் குணாதிசயங்கள் போலத் தோன்றுகின்றன. அங்ஙனந் தோன்றுதல் அத்தேசிகசுவாமிகள் திருவவதாரஞ்செய்த அருமைக் கிருகத்தை யிவர்கள் ஆண்டநுபவித்து வருகின்ற அந்தத் தானவிசேடம்போலும். இவ் அருமை பெருமை நிறைந்த இவர்கள் தமிழபிமானத்தை நன்கு பாராட்டி வியந்து, உடனே பல நகரங்களிலுமுள்ள பண்டைக்காலத்து ஓலையேட்டுச் சுவடிகளை வரவழைத்து ஒப்புநோக்கிப் பழைய அச்சுப்பிரதிகளிலுள்ள பிழைகளைக் களைந்து சுத்தபாடமாக்கி யெனக்குத் தெரிந்தமட்டும் திருக்குற்றாலநாதர் திருவருளால் அரும்பதவுரையு மெழுதிச் சேர்த்து, அச்சிற் பதிப்பித்து வெளிவரச் செய்தனன்.

யானெழுதிய உரைகளினும் விசேடமான வுரைகள் தெரிந்த வித்துவான்கள் தயைகூர்ந்து, அவற்றை யெனக்குத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கின்றேன். தெரிவிப்பார்களாயின் அவ்வாறு இரண்டாம்பதிப்பிற் பதிப்பித்து வெளியிடச் சித்தமாயிருக்கின்றேன்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்,

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக்கவிராயர்.

# இரண்டாம்பதிப்பின் முகவுரை.

இத்திருக்குற்றாலக்குறவஞ்சியை யான் இரண்டாமுறை அச்சிடுவித்தற்குக் காரணம் ஆறேழுவருடங்களாகப் படிப்பவர்கட்கு இப்புத்தகங் கிடையாதிருத்தலும், மூன்றுதலைமுறை தொடர்ச்சியாக எனக்கும் மேற்குறித்த ஸ்ரீ வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள் ஸ்ரீ கற்பகவிநாயகம் பிள்ளையவர்களுக்கும் நட்புரிமைமேம்பட்டுவருதல்பற்றி அவ்விருவரும் என்னை வேண்டுகோள் செய்தலுமேயாம். அவ்விருவருந் தமிழருமைச் சுவையை நன்கறிந்தவர்கள். அம்மட்டோ! அவர் பரம்பரையிலுள்ள பற்பலரும் அன்னரேயாவர். முற்காலத்தில் அவர்கள் பரம்பரைச் சம்பந்தப் பெரியாரைப் பாடாத புலவர்களில்லை. அப்பெரியாரிலொருவராகிய ஸ்ரீவயித்தியலிங்கக்கவிராயரவர்களைத் திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் ஸ்ரீதாண்டவராயதம்பிரான்மூர்த்திகளும் பாடியிருக்கிறார்கள். அம்மூர்த்திகள் பாடல்களிலொரு பாடல் எனக்குத் தெரியும். அஃதாவது.

"தேவரெலாம் பரவுதிருக் குற்றாலச் சிவன்கதைசெந் தமிழாற் செய்த
நாவலர்தம் பரம்பரையி லுதித்தவயித் தியலிங்க நாவ லோயிப்
பூவலய முழுதுமுன்றன் புகழையே புகழாகப் புகழும் வண்ணம்
ஆவலுடன் வருகந்த சாமியறி ஞன்மணத்தை யணிசெய் வாயே"

என்பதேயாம்.

இப்புத்தகம் பதிப்பித்தவுடன், நூலாராய்ச்சியிலும் நுண்ணறிவிலுஞ் சிறந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ் உதவிப்பத்திராசிரியராகிய பிரமஸ்ரீ இராமாநுஜையங்காரவர்கள் இக்குறவஞ்சியாராய்ச்சியிற் கிடைத்து வைத்திருந்த, சில விஷயங்களை யெனக்குத் தெரிவித்தார்கள். அதன்பின் திருநெல்வேலி இந்துகாலேஜ் தலைமைத் தமிழாசிரியராகிய திருவாளர் மே. சோ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள் மிகப்பழைய குறவஞ்சி ஏட்டுச்சுவடிகளிலாராய்ந்து தெரிந்தெடுத்து வைத்திருந்த அருமையாகிய பற்பல பாடபேதங்களை யெழுதியனுப்பினார்கள்.

இவைகளெல்லாம் முன்னரே கிடையாமையால் இவற்றை அநுபந்தத்தி லெழுதிச்சேர்த்துப் பதிப்பித்திருக்கிறேன். இக்கவிராயரவர்கள் தம் வித்துவ பரம்பரைத் தொன்மைத் தொடர்ச்சி நலத்துக்கேற்பக் கற்பனாலங்காரத்துடன் மதுர

மிருந்த கவிபாடுந்திறமை யுடையவர்கள். அவர்கள் பாடிய செய்யுள்கள் பலவற்றில் இரண்டுசெய்யுள்களை மட்டும் இங்கெடுத்துக்காட்டுகின்றேன்.

இராமநாதபுரம் ஸமஸ்தானமன்னராய் உலகப்பிரசித்தியாகிய பெரும்புகழ் மாட்சிமைபெற்ற பாற்கரசேதுபதிமகாராஜா அவர்கள் திருக்குற்றால யாத்திரைவாசிகளாய் விசயஞ்செய்த காலத்தில் திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிககசுவாமிகள் திருவவதாரஞ்செய்தருளிய விசேட புண்ணிய வீட்டைத் தரிசிக்க மேலகரத்துக்கு வந்திருந்த தருணத்தில் பாடியகவியொன்று. அஃதாவது,

"யாவருமே மென்றுமெய்தா மகிழ்மலர்ச்சி யென்கணுள முகமு மெய்த
லாவதெவ னெனத்தேறே னறிந்துகொண்டே னதனையிவ ணறைவன் கேளீர்
பூவுலகி லவைகளைத்தா மரையெனவே புகலுவது புதுமை யன்றே
பாவலிரே பாற்கரன்முன் பவையலரா தெவன்செய்யும் பகருவீரே"

என்பதாம்.

மகா மாட்சிமைபெற்ற இளவரசுச்சக்கரவர்த்தியவர்கள் மதுராசில் 1922-ம் ஆண்டு ஜனவரிமீ 13உ விசயஞ்செய்திருந்த காலத்தில் கிலத்து என்னும் பட்டமும், தங்கமெடல் முதலிய பரிசுகளும் அளித்த தருணத்தில் அவர்கள்மீது பாடிய கவிகளி லொன்று. அஃதாவது,

" முன்னு ளினிலெவ குலமுதல்வர் மூவாத் தமிழ்நா டொன்றினுக்கே
மன்னுற் கோமுன் மரியாதை வழங்கப் பெற்று ரவர்வ ழியாம்
என்னை ரெல்கீங் காவசென் னினிய பலநாட் டிறையினவை
துன்னு நின்ற வுவகையையென் சொல்வேன் பிரிட்ட னிளவரசே!"


என்பதாம்.

இப்புத்தகம் பதிப்பித்தற்கு யான்செய்யும் வேலைகளுக்கெல்லாம் பரோபகாரங்கருதியுடனிருந்து உதவிபுரிந்த மேற்குறித்த ஸ்ரீ இராமாநுஜையங்காரவர்கட்கு என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேன். சுபம்! சுபம்!! சுபம்!!!

இங்ஙனம்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்
மு. ரா. அருணசலக்கவிராயர்.

உ

# இந்நூலாசிரியர் வம்மிசாவளி.



சிவமயம்.

# திருக்குற்றாலக்குறவஞ்சி நூலாசிரியர் வரலாறு முதலியவை.

குறவஞ்சி யென்பது தொண்ணூற்றாறுபிரபந்தங்களு ளொன்றாய் மற்றைப்பிரபந்தங்களினின்றும் நாடகத்தமிழினிமையும் அகப்பொருட்சுவையும் மிகுந்து ததும்பிப் படிப்போர்மனத்தைக் கவருமென்பதற்கையமில்லை. அக்குறவஞ்சியானது தலைவன் பவனிவருதல் ஆதியாகக் குறத்தி விடைகூறுதல் அந்தமாகப் பலதுறையணிகளுடன் பலவுறுப்புக்களமையப் பல பாவினத்தாற் பாடிமுடிக்கும் ஒரு சிறந்தநூலாகும். இக்குறவஞ்சித்தொகுதிகளுக்குள், திருக்குற்றாலக்குறவஞ்சியானது எந்தவகையிலுந் தலைமை பெற்றுவிளங்குகின்றதும், இதற்கிணையாக வேறொரு குறவஞ்சியில்லை யென்பதும் அறிவாலுயர்ந்தோர்களால் ஒருதலை (நிச்சயம்) ஆகக் கூறப்பெற்றுள்ளது. இக்குறவஞ்சிக்கு முன்னுள்ள முகவுரையெழுதிய மதுரைத் தமிழ்ச்சங்கப்புலவர்களு ளொருவராகிய உயர்ந்த திருவாளர் மு. ரா. அருணசலக்கவிராயரவர்கள் வேண்டுவன நன்றாக விளக்கி எழுதியுள்ளார்கள். ஆயினும், இக்குற்றாலக் குறவஞ்சியில் அடியேனுக்குள்ள ஆசைமிகுதியால் அடியேன் சிற்றறிவிற்கெட்டியவாறு சிலவிஷயங்கள் சுருக்கமாக எழுதத் துணிந்தேன்.

இக்குறவஞ்சிபாடிய புலவர்பெருமானாரவர்களின் கல்வியாற்றல் இறைவனிடத்து மிகுந்துள்ள அன்பாற்றல் இறைவன் அன்னோர்க்களித்த அருளாற்றல் அன்னோரது அறிவாற்றல் முதலியன இந்நூலினிடத்துப்பரக்க (விரிவாக)க் காணக்கிடக்கின்றனவாம். அப்புலவர்பெருமானார் திரிகூடநாதரது திருவருளால் அவதரித்தமையால் திரிகூடராசப்பக்கவிராசரென்ற திருப்பெயர்பெற்றனர்போலும். அன்னோரது குலப்பெருமை உயர்குடிப்பிறப்பின்றன்மை முதலியன திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய ஞானதேசிகசுவாமிகளாலும், என்னுடைய உண்மை நட்பின் தலைவரும் உயரிய சைவத்திருவாளருமாகிய போலீஸ் டிப்டி சூபரிண்டெண்டு ராவ்ஸாஹிப் கே. எஸ். கற்பக விநாயகம்பிள்ளை பி. ஏ., அவர்களாலும் யாவரும் கண்கூடா

(பிரத்தியட்சமாக)க் காணலாம். அப்புலவர்பெருமானார் பாடியருளியபிரபந்தங்கள் பலவுள்ளன; அவ்வரலாறுகளெல்லாம் இதற்குமுன்னெழுதிய முகவுரையில் நன்ருக விளங்கியுள்ளன.

அப்புலவர்பெருமானாரதுகாலம் சுமார் இற்றைக்கு இருநூறுவருடங்களுக்கு முற்பட்டதென்று தெரிகின்றது. எப்படியெனில், அப்புலவர்பெருமானார் காலத்தில் மதுரைமாநகரத்தில் அரசுபுரிந்திருந்த மன்னர் முத்துவிசையரெங்க சோக்கலிங்க நாயக்கரவர்கள், இக்குறவஞ்சியைக் குறும்பலாவீசர்சந்நிதியிலரங்கேற்றுவித்துப் புகழ்ந்து மகிழ்ந்து முதன் மரியாதைகள் பலவுஞ் செய்து திருக்குற்றாலநாதர்கோயில்வித்துவானெனப் பட்டமுங்கொடுத்துக் குறவஞ்சிப் பிரபந்தத்துக்குப் பரிசில் (தியாகம்)ஆக நில மெழுதிக்கொடுத்த தாமிரசாசனம் கொல்லம் அகூக ஆவது ஆண்டு என்று தெரிகின்றதனாலும், இக்குறவஞ்சியில் குறியின் விசேடங் கூறுமிடத்தில்,

"நன்னகர்க் குற்றாலந் தன்னில் எங்கும்
நாட்டு மெண் ணூற்றெண்பத் தேழாண்டு தன்னிற்
பண்ணக மாமுனி போற்றத் — தமிழ்ப்
பாண்டிய னார்முகற் சிற்றோடு மேய்ந்த
தென்னாருஞ் சித்ரச பையை—யெங்கள்
சின்னணஞ் சாத்தேவன் செப்போடு மேய்ந்த
முன்னாளி லேகுறி சொல்லிப்—பெற்ற
மோகன மாலைபார் மோகன வல்லி"

என்று கூறியிருப்பதைப் பார்க்க நமது புலவர்பெருமானார் பெருமைக்கிணங்க அன்போடு ஆதிரித்துவந்த சொக்கன்பட்டி சமீன்தார் ஸ்ரீ சின்னணஞ்சாத்தேவரவர்கள் திருக்குற்றாலநாதர் சித்திரசபைக்குச் செப்போடுமேய்ந்த காலம் கொல்லம் அஅஎ ஆவது ஆண்டு எனத் தெரிகின்றதுகொண்டு அக்காலம் நமது புலவர்பெருமானார் இருந்திருப்பதாகத் தெளிவாகப் புலப்படுகின்றது. நமதுபுலவர் பெருமானார் தம்மை அன்புடனாதரித்து உதவிபுரிந்துவந்த தலைவரவர்களது திருப்பெயரைக் குறவஞ்சியில் இடங்கண்டு விளக்கி நன்றிபாராட்டியிருத்தல் யாவருங்கவனிக்கத்தக்கது. அகூக-வது ஆண்டில் பரிசுபெற்றிருப்பதால் அச்காலம் நமது புலவர் பெருமானார் காலம் முதுமைக் காலமென வூகித்தற் கிடனாயிருக்கின்றது. ஏனெனில், புலவர்

பெருமானார்காலத்தில் மதுரையை யரசாட்சி செய்த மன்னர் முத்து விசையசோக்கலிங்கநாயக்கர். ஸ்ரீ தாயுமானசுவாமி காலத்தில் திரிசிரபுரத்தை யரசாட்சிசெய்த மன்னர் முத்துவிசைய ரெகுநாதசோக்கலிங்க நாயக்கர். இவ்விரண்டு மன்னர்களின் பெயரொற்றுமையை யூகிக்குமிடத்து இவ்விருவரும் தமையனுந் தம்பியுமாகவோ அல்லது தகப்பனு மகனுமாகவோ இருக்கலாமென நினைத்தற் கிடனாயிருக்கின்றனர். திரிசிராமலையை நாயக்கர் ஆண்ட காலம் சுவாமிகள் காலமாகையால் சுவாமிகள்காலம் இற்றைக்கு உருடு வருடங்களுக்குச் சிறிது பிற்காலமெனச் சரித்திரங்களால் விளங்குகின்றது ஆகவே ஸ்ரீ தாயுமானசுவாமிகள் காலமும் நமது புலவர்பெருமானரது காலமும் ஒரே காலமெனவும் அக்காலம் புலவர்பெருமானுக்கு நடுப்பருவகாலமாயிருக்கலா மெனவும் தெளிவாகப்புலப்படுகின்றன.

இவர் காலத்தில் தம்மைப்போலப் பெரும்பிரபலம் பெற்றிருந்தவர் பொதிகைமலைச்சார்பிற் பாவநாசமென்னும் சிவக்ஷேத்திரத்திலெழுந்தருளிய உலகம்மை யென்னும் மகாதேவியார் திருவருள்பெற்ற ஸ்ரீ நமசிவாயன்கவிராய ரேன்பவர். இது பாண்டியநாட்டிற் பிரசித்திபெற்ற கன்னபரம்பரைச்செய்தி. இனி, புலவர்பெருமானர் சரித்திர ஆராய்ச்சியை இம்மட்டோடு நிறுத்திவிட்டு, அவர் பாடியருளிய திருக்குற்றாலக்குறவஞ்சியிலுள்ள பாக்களிற் பொதிந்துகிடக்கும் சொன்னயம் பொருணயம தொடையம் நடைநயம் அணிநயம் முதலியவைகளை என்னால் தெரிந்தமட்டுஞ்சிறிது விளக்குகிறேன். அவை வருமாறு:-

## தற்சிறப்புப் பாயிரம்.

க. விநாயகர் துதியினிறுதியடியில் 'ஐந்துகைவலான் காவலானே' யென்றார். காத்தற்குரிய உறுப்புக் கை என்பதை அம்மொழி விளக்கிநிற்பதுடன் கைவலான் காவலான் என்ற அடுக்குமொழியணிகளும் பொலிந்து கிடக்கின்றன.

உ. முருகக்கடவுள்துதியில் பன்னிரண்டுமுதல் ஒன்றுவரை முறையே எண்ணணியுடன் பொருணயங்களையும்விளக்கி இறுதியடியில் 'தன்னிருதாடருமொருவன் குற்றாலக் குற

வருஞ்சித் தமிழ்தந் தானே' என்று கூறியிருத்தல்; தன்னிசைந்த தாளையும் பக்லிட்டமார்க்கத்தருகின்ற கிருபையுடையான் இத்தமிழினுக்கு ஆற்றலளித்தல் பெரிதல்லவென்று தாம்பெற்ற பெருக்கட்டளையின் இருப்பைப்பெருக்கிச் சிதந்தோர் இவ்வாறு காணக் கிடக்கின்றது.

௩. திரிகூடநாதர் துதியிற் கூறியிருக்கும் குழும்பலவில் உள்ள சிவலிங்க சொரூபங்கள் யாவரும் வியக்கற்பாலன.

௪. குழல்வாய்மொழியம்மைதுதியில் அம்மையாரை ஒரு கொடியாகப் பற்பல கற்பனாலங்காரங்களுடன் வருணித்திருத்தலும், அக்கொடியானது தாமரையையும் ஆம்பலையும் குவளையுமாகிய பூவினையும் பூத்தருளிய தன்மை கூறியிருத்தலும் படிப்போர் மனங்களைப் பரவசப்படுத்தாமலிரா.

௫. மூவர்துதியில் 'அலையிலே மலைமிதக்க வேறினானும் அத்தியிலே பூவையக்நாளழைப்பித்தானும், கல்லிமேல்கிடைத்த பொருளாற்றிற் போட்டுக் கனகுளத்தி லெடுத்தானுங் காப்ப தாமே" என்ற செய்யுட்களில் மூவர்களுடைய அரும் பெருஞ்செயல்களை விளக்கிக்காட்டியிருக்கும் அழகானது படிப் போர்மனங்களைப் பத்திக்கடலுள் அமிழ்த்திவிடுமென்பதற் கையமின்றாம்.

௬. ஆளுடைய அடிகளாகிய ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள் துதியில் 'ஆத்துமம் விட்டிறக்கு நாட்சிலேட்டுமம் வந்தெருவண்ணாம், பித்தனடித்துணை சேர்ந்த வாதவூரனடிகள் பேணுவோமே' என்ற சொற்றொடரில் வாதபித்த சிலேட்டுமத்துக்கேற்பக் கூறியிருக்குஞ் சிலேடைநயமும், பித்தனாகிய இறைவனடியைச் சேர்ந்த ஆளுடைய அடிகளின் பெரும்பத்தியின் சார்பாகிய அன்பின்றன்மையும் அவர்கூறியவாறே சிலேட்டுமம் வந்தெரு வண்ணாம் அப்பித்தனடித்துணைசேர்ந்த வாதவூரடிகளையாம் பேணில் எமக்கும் இறப்பின் றுன்பமும் அக்காலத்திலிடர்ப்படுத்துஞ் சிலேட்டுமத்தின் கொடுமையும் சாராவென்ற உறுதிப்பாடும் தோன்ற நன்குவிளக்கியிருத்தல் புலமிக்க பெரியார்கள் வியந்து போற்றத்தக்கதொன்றாம். "தானே முத்தி தருகுவன் சிவன் அவனடியன் வாதவூரனைக்கடிவின் மனத்தாற் கட்டவல்லார்க்கே" என்ற பெரியார் வாக்கையும் புலப்படுத்தியதொன்றாம்.

எ. சரசுவதிதுதியில் அவயவத்தில் உள்ள செம்மை, கருமை, வெண்மை மூன்றினையும் விளக்கிக்காட்டியிருத்தல் தேவி தனது முக்குணமும் ஒருவடிவாய்த்தோற்றுபவள் என்ற நுண்மையுண்மைகளைப் புலப்படுத்துகின்றது. அவைகளுக்கேற்ப ஞானவாணியென்றும் கலைவாணியென்றும் வியவகாரவாணியென்றும் ஆன்றோரால் ஆளப்பட்டிருக்குந்தன்மையை விளக்கிக்காட்டியிருத்தல் அருமையினும் அருமையாம்.

அ. நூற்பயன்கூறியகவியில், தலத்தின்பெருமையும் அத்தலத்தைச் சார்ந்தார்செய்த பாதகங்கள் தீர்ந்ததன்மையும் அத்தலத்தை நினைத்தார் நினைத்தவரம் பெறுவரென்பதையும் விளக்கியிருததல யாவரும் கவனிக்கத் தக்கதொன்றாம்.

கூ. ஆன்றோர் முறைப்படி அவையடக்கம் கூறினரேயன்றி ஏனைப் புலவர்களைப்போலக் கூறவில்லையென்பது தெற்றென விளங்குகின்றது. " பூவுடனே கூடியநார் புனிதர்முடிக் கணியாமால் " என்றார் பிறரும்.

நூல்.

க. நான்காவது அடியில் 'மேக்கெழுந்தமதிசூடிக் கிழக்கெழுந்த ஞாயிறுபோல் மேவினரே' யென்ற சொற்றொடரினுள்ள நயம் பேரறிவாளர்களாற் போற்றத்தக்கதேயன்றி எம்போலிகளால் வியந்து பாராட்டுந்தன்மையுடையதன்றாம்.

உ. இறைவன் பவனிவருஞ்சிறப்புக் கூறியதருவில் முதற்சரணத்தில் நந்தியாதி கணத்தவர்கள் இறைவனைச் சூழ்ந்துவருஞ் சிறப்பும், உவது சரணத்தில் இறைவனார் திருக்கரங்களின் றெழில்களும் பாம்பணி புலித்தோல் கரியுரி பிரமன் தலை முதலியவைகள் விளங்குஞ் சிறப்புக்களும் சிலேடைநயங்களும் சொன்னயம் பொருணயங்களும், ௩வது சரணத்தில் கணபதி முருகவேள் இருவரும் பக்கத்துவரும் சிறப்புக்களும், ஏனையலங்காரங்களும், 'உடையநாயகன் வரவுகண்டு கண்டுலகெலாந்தழைத்தோங்கவே' என்ற சொற்றொடரினயமும், ௪வது சரணத்தில் வாத்தியங்களின் முழக்கத்தின்சிறப்பும் அடி

யர்கள் பாடும்பல்லாண்டிசை முழக்கத்தின் சிறப்பும், மூவர்கள், வடிசெய் தமிழ்த்திரு முறைகளொருபுறம் மறைகளொருபுறம் வழங்கும்" சிறப்புக்களும், ௫வது சரணத்தில் ஏனைப்பவனிக் கூறிய அலங்காரங்களும், ௬-வது சரணத்தில் 'சைவர்மேலிடச் சமணர்கீழிடச் சகலசமயமுமேற்கவே' என்ற சொற்றொடரினயமும், பிரமவிட்டுணுக்கள் புடைசூழ்ந்து தொழுதுவருத லுடன் சின்ன முழங்குஞ்சிறப்புக்களும், ௭, ௮-சரணங்களில் ஏனைப் பவனி அலங்காரங்களுடன் திருச்செவிகளில் வசிக்கும் ஆகா ஊகூ வென்னும் கந்தருவர்களின் பாட்டின் சிறப்புக்களும் மங்கையர் நடனப்பெருக்கமும் தேவி இடப்பாகமிருக்குஞ் சிறப்பும் மிக அழகாகக் கூறியிருத்தலுடன் சைவத்தின் சிறப்பை இடங்கள்தோறும் விதந்து கூறியிருத்தல்யாவரும் போற்றத் தக்கதாம்.

௯. வசந்தவல்லியின் கேசாதிபாத வருணனையில் முரண்டொடைப் பெருக்கம் பொலிந்து விளங்குஞ் சிறப்பினை யென்னென்றுரைப்பது. கொண்டையாள விழிக் கெண்டையாள், இதழினள் நுதலினள், என்ற சொற்றொடர்களிலுள்ள நயங்களும், அரம்பைதேசவில்லும் விருப்பியாசை சொல்லும் புருவத்தாள், மங்கைப் பருவத்தாள், சொல்லினள், பல்லினள், முத்தினள், முகத்தினள், கழுத்தினள், தொய்யில் எழுத்தினள். கடகமிட்ட செங்கையாள், எங்குஞ் சச்சுக்கிடக்கினும் தித்திச் சுக்கிடக்குமிரு கொங்கையாள் உந்தியாள், உரோம பந்தியாள். சின்ன இடையினள், வாழைத் தொடையினள். நெறிபிடித்த உடையினள், பயிலும் நடையினள். மேனியாள், காமப்பாலுக் கொத்த சினியாள் என்ற சொற்றொடர்களிலுள்ள வருணனை நயங்கள் கரும்புருசிபோல மொழிக்குமொழி தித்திக்கின்றன என்னலாமேயன்றி வேறு சொல்வதற்கில்லை. அவ்வருணனைக் கூட்டமாவன ஏனைப்புலவர்களுக்குக் கற்பனைகளளிக்குஞ் சிந்தாமணியாகி விளங்கிப் பொலிகின்றன.

௧௦-௧௩. வசந்தவல்லி பந்துபயிறல் முதலியவை கூறியிருக்கும் சொற்றொடர்கள் புலவர்கள் கொள்ளையிடும் பொருளடங்கின பேழையாக விருக்கின்றனவென்பதற் கையமின்றாம்.

கச. வசந்தவல்லி திரிகூடநாதரைக்காணுதல் கூறியிருக்கும் விருத்தத்தில் உள்ள சொற்றொடர்ச் சித்திரங்களும் அதிலுள்ள நயங்களும் இவ்வுலகினர் புகழுந்தரமுடையனவென்றாம்.

கரு. வீதியில்வருஞ் சித்தரைக் கண்ட வசந்தவல்லி சித்தரது பணியணிகளையும் சித்தர்கொண்டிருக்கும் பொருள்களையும் கண்டு வியந்து கூறும் அழகும் சித்தரது அருட்கண் பார்வையால் தன் னங்கந் தங்கமான தென்றுகூறுஞ் சொல்லினது வன்மையும் அதனுள் அடங்கியிருக்கும் பொருளழகும் இப்படி என்னைமயக்குஞ் செயலுடையார் குற்றாலநாதரே என்றையுற்றுக்கூறுஞ் சொல்லாற்றலும் அக்குற்றாலநாதரே வியக்கத்தக்கனவாம்.

உஉ-உரு வசந்தவல்லி சந்திரனைப்பழித்தல் கூறியிருக்கும் விருத்தம் கருக்களில் உள்ள சொற்றொடர்களைக் கற்றுக் கொள்ளக் காமுறாப் புலவர்கள் புல்லவர்களேயாவர். வசந்தவல்லி மன்மதனைப்பழித்தல் கூறியிருக்கும் தன்மையும் அன்னதேயாம்

உகூ முதலாவதுகண்ணியில் அவர் வாகனமாகிய மால் விடைக்கு லோகமொக்க வோரடிகாண் என்று கூறியிருத்தலானது விட்டுணுவானவர் ஓரடியால் பூமியளந்ததன்மையையும் நம்இறைவனாகிய திருக்குற்றாலநாதருக்கு விட்டுணுவானவர் முதலடியார் என்ற தன்மையையும் விளக்கிக் காட்டியிருக்கும் சிறப்பினைக் காண்க. இரண்டாவது கண்ணியில், தாருகாவனத்து இருடியர் பத்தினிமார்களும் மதுரையில் வளையல் பெற்ற அப்பெண்களாகிய செட்டிக்கன்னியர்களும் மையலுற்ற தன்மையையும், தென்னிலங்கைவாழு மண்டோதரியாட்கு இறைவன் அருள்புரிந்ததன்மையையும் விளக்கிக் காட்டியிருத்தல் யாவரும் வியக்கத்தக்கதாம் மண்டோதரிசரிதம் திருவாசகத்திலும் திருவுத்தரகோசமங்கைத் தலபுராணத்திலும் காணலாம்.

௩உ. வசந்தவல்லி வருந்திக்கூறும்உடன்பாடெதிர்மறைச் சொற்றொடர்களமைந்த கண்ணிகள் மூன்றிலும் உள்ள இறைவன் பேராற்றலின் பெருக்கம் யாவரும் தலையாற்போற்றத்தக்க

பொருளாம். மேற்படி முதலாவது கண்ணியில், 'புரத்துநெருப்பை மூவர்க்கவித்தவர்...என்னொருத்திகாம நெருப்பையவிக்கிலார்' என்றும் 'பருத்தமலையைக் கையிலிணக்கினார்—கொங்கையான பருவமலையைக்கையிலிணக்கிலார்' என்றும், உ-வதுகண்ணியில் "அஞ்சுதலைக்குளாறுதலை வைத்தார் எனது மனத்தில் அஞ்சுதலைக்கொராறு தலைவையார்" "நஞ்சை பருகியமுதங் கொடுத்தவர் எனது வாள்விழி—நஞ்சு பருகியமுதங்கொடுக்கிலார்" என்றும், ௩-வது கண்ணியில் "தேவர் துரைதன்சாபந் தீர்த்தவர்—வன்னமாங்குயிற் சின்னத்துரைதன் சாபந்தீர்த்திலார்", "சகலபேர்க்கும் இரங்குவா ரெனக்கிரங்கிலார்" என்றும் கூறியிருக்கும் சொற்றொடர்களிலுள்ள நயங்கள் புலமிக்க புலவர்பெருமக்களால் வியக்கத்தக்கனவாம்.

௧௪. வசந்தவல்லி பாங்கியைத் தூதனுப்புதல் கூறியிருக்கும் தருவில் உள்ள பொருணயங்கள் மிக்க அழகும் திட்பநுட்பங்களுங் காணக்கிடக்கின்றன.

௧௫-௧௬. திரிகூடநாதரது சமயம்பார்த்துச் சொல்லும்படி பாங்கிக்குச் சொல்லுந்தன்மை காட்டிய விருத்தத்திலும் தருவிலும் சொல்லியிருக்கும் திரிகூடநாதரது பூசைக்காலங்களின் முறைகளும், ஆட்டற்காலங்களின் முறைகளும், நாட்டிருவிழா திங்கட்டிருவிழா ஆண்டுத்திருவிழாக்களின் முறைகளும் தேவியுட னுகந்திருக்குஞ்சமயமும், கொலுச்சமயமும், ஆங்கு நிகழ்கின்ற நிகழ்ச்சிகளைக் கூறியிருக்கும் முறைகளும், பூசிப்பவர் புரியும் ஆட்டல் ஊட்டன் முதலிய பணிகளின் முறைகளும், நாலுமறைப்பழம்பாட்டு மூவர் சொன்னதிருப்பாட்டுக்களில் இறைவனை ரீடுபட்டிருக்குஞ் சிறப்புக்களும், இறைவனரது கொலுக்கூடம் எல்லார்க்கும் பொதுவென்ற தன்மையும், தேவியுடன் கொலுவிருக்குஞ் சமயச்சிறப்பும், முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் வந்துநின்று திருவனந்தல் செய்யுஞ்சமயமும், அம்மையாருடைய பள்ளியறையிலிருந்து இறைவனார் கோயில்புகும் ஏகாந்தசமயம் என் பெருமாலை நீ சொல்லி மருமாலைவாங்கிவாவென்று கூறியிருக்குஞ் சொற்றொடர்களும் சிவபெருமானை வழிபடுஞ் சைவர்களெல்லாம் நன்றாகவுணர்ந்து கொள்ளத்தக்க தோருதியமென்பதற் கையமின்றாம்.

௩எ, ௩அ. கூடலிழைத்தல் பண்டைக்காலத்துப் பான்மையை விளக்கிக்காட்டியதொன்ரும்.

௩௯—௪௨. குறிசொல்லுங்குறத்தி வருதல் கூறிய விருத்தம். ஆசிரியப்பாவில் குறத்தியினிலக்கணக்கூட்டமும் இறைவனூரது பத்துப் புறவுறுப்புக்களும் குறத்தியினலங்காரங்களும் அவள் குறிசொல்லும் முறைகளும் விளக்கியிருத்தல் மிக்க அழகினும் அழகாம். அன்றியும், பண்டைமுறை பகர்தலுமாம்.

௪௩, ௪௪. வசந்தவல்லி மலைவளங் குறத்திபாற்கேட்டலும் குறத்தி மலைவளங்கூறலும் கூறியிருக்கும் விருத்தம் தருவிற் கூறிய மலைவளங்கள் இனி யொருவர்சொல்லுதற் கிடனின்றிக் காட்டிய தொன்மைப் பண்பு வாய்ந்த சொற்றொடர்களாம் அவைகளிலுள்ள சொன்னயம் பொருணயம் யாவரும் வியந்து போற்றத்தக்கன வென்பதற் கையமின்ரும். அன்றியும், எல்லாமலைகளுந் தங்களுக்குரிய மலையென்றும் குறத்தி தன் குலப்பெருமை கூறியிருத்தலும் முருகவேட்குப் பெண்ணளித்த சிறப்பும் மலைகளெல்லாம் சீதனங்கொடுத்த தன்மையும் மிக அழகாகவிருக்கின்றன.

௪௫, ௪௬. நாட்டுவளம் நகர்வளம் வினவுதலும் நாட்டுவளங் கூறுதலும் கூறியிருக்கும் விருத்தம் தருவிலுள்ள கற்பனையலங் காரங்கள் மிகச்சிறந்தனவாம். அவை இந்தத்தருவிலுள்ள கக கண்ணிகளையும் நன்ருக வூன்றிப்படிப்பவர்களுக்கு இனிது விளங் கும், அவைகள் ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டினல் இஃ தொரு பிரதிநூலாகுமென் றஞ்சிச் சிறிதுவிளக்குவாம். க-வது கண்ணியில் தென்றற்றேரின் மாரன் வசந்தனுலாவுஞ் சிறப்பும் உ-வது கண்ணியில் கார்காலத்திற்கும் பெண்கள் குழலுக்குஞ் சிலேடைகற்பித்துக் கூறியிருக்கும் சிறப்பும் (முற்கூறிய குறிஞ்சி நிலவளத்துடன்) ௩, ௪-கண்ணிகளிற் கூறியிருக்கும் மருதநில வளத்தின் சிறப்புக்களும், கரும்பானது பெண்கள்மொழியைப் பழித்ததென்று ஆடவர்கள் மண்ணில்வைத்து மூடவும் அக் கரும்பானது மீளவளர்ந்து பின்னும் மடந்தையர்கள் தோளை வென்று முத்தங்களை யீன்று பெண்களின் மூரலைவென்று தங் களைப்பிரியுங்காலத்தில் அவர்கள் பெண்மையைவெல்லக் கன்னல்

வேளுக்கு வில்லாகவோங்குமென்ற கற்பனையின் சிறப்புக்களும், ரு-வது கண்ணியிற் பலவிசேடணங்களுடன் முக்கணன் விளையாடியநாடு முதியநான்மறைபாடியநாடு எனச சிவபெருமான் திருவிளையாடல் செய்த தன்மைகூறிய விசேடமான சிறப்பும் கூ, எ கண்ணிகளில் மற்றைச்சிறப்புக்களும், அ, கூ கண்ணிகளில் நீங்கல், நெருங்கல், தூங்கல், சுழலல், வீங்கல், வெடித்தல், ஏங்கல், ஓடல், ஒடுங்கல், வாடல், வருந்தல், போடல், புலம்பல், தேடல் முதலியனவும் இத்தன்மைப்பட்ட பொருள்கள் எனக் கூறியிருக்கும் சொற்றொடர்களின் பெருக்கிலுள்ள சிறப்புக்களும் படிப்போருள்ளங்களைப் பள்ளமாக்கிப் பெருகாநிரா வென்பதற் கையமின்றும்.

சஎ, சஅ. வசந்தவல்லிக்குக் குறத்தி தலமகிமை கூறும் விருத்தம் கண்ணிகளிலுள்ள சித்திரநதிமூலத்தின சிறப்பும சிவமதுசங்கையாற்றின் மேன்மையும், தவமுனிவிருக்கும் குகைகளின் சிறப்பும் சஞ்சீவிவிஞ்சை மூலிகைகளின் வளமும், சண்பகாடவித்துறையின் வளமும் மேயாகிய மொடுக்கநிலயத்தின் சிறப்புக்களும், தேனருவியின் வடவருவிச்சிறப்பும், அதிலாடினோர்களின் பாபங்கள் சமூகீரமாய்ச் சமிருந்தன்மையும், மனைத் தலமகிமைகளின் சிறப்புக்களுங் கூறியிருத்தல் பேரறிவுடையோர்கள் போற்றத்தக்கனவாகும்.

ருக, ருஉ. வசந்தவல்லி குறத்தியைக் குறியின்விசேடம் வினவுதலும் குறத்தி விடைகூறுதலும் கூறிய விருத்தம் தருவிலுள்ள சொற்றொடர்களிற் பலவான அறிகுறிகளும் பொருணயங்களும் அடங்கியிருக்கின்றனவாம். தருவில் 2-வது சரணத்திற்கூறியுள்ள நமது புலவர்பெருமானுரை உண்மையுடனாதரித்துவந்த சொக்கன்பட்டிச்சமீந்தார் ஸ்ரீ சின்னணஞ்சாத்தேவரவர்கள் செப்போடுமேய்ந்தகாலமும் அதின்விசேடங்களும் புலவர்பெருமானார் காலவரையறைகூறியவிடத்துச் செவ்வனே விளக்கியிருக்கின்றனவாம். ௩-வது கண்ணியிலும் சிற்சில முக்கியமான குறிப்புக்கள் காணக் கிடக்கின்றன.

௫௩, ௫௪. வசந்தவல்லி குறிகேட்டல், குறத்தி குறிசொல்லுதல் கூறியிருக்கும் விருத்தம் கண்ணிகளில் உள்ள சொற்றொடர்களிற் குறத்தி தன்னாற்றல்கூறலும், கஞ்சிவாக்கும்படி கேட்டலும், இலை பிளவு முதலியன கேட்டலும், ஆந்தைகரைதல் காகங்கரைதல் சரம்பார்த்தல் முதலியனவாகிய பண்டைக்காலத்து முறைகளை விளக்கியிருக்குந்தன்மைகளும், வசந்தவல்லிக்குத் திரிகூடமலைத்தெய்வம் துணையுண்டென்றலும் பல்லி பலபலவென்று சொல்வதால் திரிகூடத்தலத்தில் உள்ளான் கல்விமான் சிவப்பின்மிக்கான் கழுத்திற்மேற் கறுப்புமுள்ளான் உனக்கு மாப்பிள்ளையாவானென்று கூறுதலும், குறிக்கு வேண்டியவைகளெல்லாம் அமைக்கும்படி சொல்லுதலும் நன்றாக விளக்கிக்காட்டப்பட்டுள்ளன.

௫௧, ௫௨. குறத்தி தெய்வவணக்கஞ்செய்தல் கூறும் விருத்தம் ஆசிரியப்பாவிலுள்ள சொற்றொடர்கள், குறத்தி தெய்வவணக்கஞ்செய்தலும் கேட்குங்குறியானது எப்பொருள்பற்றியென்று தனதிட்டகுலதெய்வங்களை வினாதலும் கேட்டகுறியை முன்னின்று சொல்லும்படி வேண்டிக்கொள்ளுதலும் ஆகிய முறைகளை விளக்கிக்காட்டுகின்றன. அம்முறைகளை ஆயுமிடத்துத் தமிழ்நாடானது எப்பொழுதும் தெய்வத்தின் பின்னை நிற்பதென்பதனையும் எம்முயற்சியினும் தெய்வம்பராவிச் சருமம்புரியத் துணிவதென்பதனையும் இம்முறையானபண்டைத் தொன்மைப்பான்மைகளையும் நன்றாக அறிவுறுத்துகின்றன. அன்றியும், முறையே குறும்பலாவுடையார் அம்பலவிநாயகர் இலஞ்சிக்குமரன் வள்ளிநாயகி மேலைவாசலையன் தெய்வகன்னியர்கள் முதலான தெய்வங்களை வாழ்த்தித் திருக்குற்றாலமலை வடகோடிக்காவல் ஆரியங்காவு ஐயனையும் தென்கோடிக்காவல் சொரிமுத்தையனையும் கூறியிருத்தலும் கவனிக்கத்தக்கதாம், மற்றைச் சிறுதெய்வங்களையும் குலத்துக்கேற்ப வணங்கியிருக்கும் முறைகளும் கவனிக்கத்தக்கனவாம்.

௫௭, ௫௮. வசந்தவல்லி கோபித்தலும், வசந்தவல்லியும் குறத்தியும், தருக்கமாடலும், குறத்தியானவள் திரியுமொழிக்கும்; கூடவுமொழிக்கும்; நாதனுமொழிக்கும்; என்று குறிப்பாகச்

சொல்லிப் பிறகு உன்னைச் சேரவல்லவன் திரிகூடநாதனென்று முன்மூன்று சொற்றொடர்களிலும் துண்டுதுண்டாகச் சொன்ன முழுப்பெயரையும் விளக்கிக் காட்டியிருத்தலும் மிக அழகாக விருக்கின்றன.

அ௦-அ௩. சிங்கன் சொல்லும் பறவைகள் சாய்தல் பறவைகள் மேய்தல் முதலியவைகளைக்கூறும் விருத்தமுள்ளிட்ட தருவிலுள்ள சரணங்களில் திரிகூடநாதர் திருப்பணிசெய்தபெரியார்கள், கட்டளைகள்விட்ட பெரியார்கள், அவர்கள்விட்ட கட்டளைகள் இவைகளை யொன்றுவது விடாமற் கூறியிருக்கின்ற அழகானவைகள் யாவரும் வியந்துபோற்றத்தக்கனவாம். மேலும், அவை, பிற்காலத்தினர்கள் இவற்றை அறிந்துகொள்ளுதற்குக் கல்வெட்டுக்கள்போலவும் சாதனங்கள்போலவு மிருக்கின்றன. [திருப்புன்கூர்த் தேவாரத்தில் ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள்காட்டியிருக்கின்ற விளக்கம் போலெண்க]

௬௩. எட்டுக்குரலிலொருகுரல் கூவும்புறவேனென்று கூறியிருக்குஞ் சொற்றொடர்களிலுள்ள நயங்கள் மிகவும் வியக்கத் தக்கனவாம். எட்டுக்குரல் என்று பெண்களின் அனுபோக காலத்திற் கண்டத்திற்காலும் பலவகை வேறுசத்தங்களின் அகப்பொருட்டுறையிலக்கணத்தை யும் விளக்கிக்காட்டியிருத்தல் புலவர்கள் போற்றத்தக்கதொன்றாம்.

௬௫. க, உ, ௩ சரணங்களிற் கூறியிருக்கும் உபமான உபமேயங்கள் பேரறிவாளர்கள் வியக்கத்தக்கனவாம்.

கக௫. சிங்கனுக்கும் சிங்கிக்கும் சம்வாதத்தில் சிங்கன் சிங்கியணிந்திருக்கும் ஆபரணங்களைப்பற்றி வினவுதல் மிக ஆச்சரியப்படத்தக்கதாம். அவைகளைச் சிறிது விளக்குகின்றேன். 'காலுக்குமேலே பெரிய விரியன் கடித்துக்கிடப்பானேன் சிங்கி' 'சிலம்புக்குமேலே—திருகுமுருகென்னடி', 'நீண்டுகுறுகி யுநாங்கூழுப்போல நெளிந்தநெளிவென்னடி', 'மாண்டதவளையுன் காலிலேகட்டிய மார்க்கமேதது,' 'சுண்டுவிரலிலே குண்டலப் பூச்சி, சுருண்டுகிடப்பானேன்,' மெல்லியபூந்தொடைவாழைக் குருத்தை, விரித்து மடித்ததார்', "ஊருக்குமேக்கேயுயர்ந்த

அரசிலை சாரைப்பாம்பேது' 'மார்பிற்கு மேலேபுடைத்த சிலந்தியிற் கொப்புளங்கொள்வானேன்,' 'எட்டுப்பறவை குழுறுங்கமுகிலே பத்தெட்டுப் பாம்பேதடி' என்ற சொற்றொடர்—வினுக்கள் மிக அழகாகவும் அற்புத உபமானங்களாகவு முள்ளன. அவைகள் படிக்கப் படிக்கக் களிப்பும் வியப்பு முண்டாக்குவனவாம். அவைகட்குச் சிங்கி விடையளித்தல் ஆடையாபரணங்களை விளக்குவனவாம்.

யான் எழுதத்துணிந்தவைகள் இம்மட்டுடன் முற்றுப் பெற்றனவெனினும், அடியேனுடைய சிற்றறிவிற்கு அவ்வாறேயன்றி ஏனைப் பேரறிவாளர்களுக் கெத்தன்மையாகப் பொருள் விரிந்துகாட்டுமோ வென்ற ஐயப்பாடானது அடியேனுக் கொழியவில்லை 'தான்கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு' என்ற முதுமொழிக்கிணங்க அமைதிப்படுத்திக்கொண்டேன்.

நமது புலவர்பெருமானியற்றிய பன்னூல்களினும் இந்நூலானது கற்றறிந்த புலவர்பெருமக்களெல்லாம் உச்சிமேற் போற்றத்தக்கதொன்றாகும். இந்நூல் நாடகவலங்கார உறுப் பக்கணிரம்பி யின்பந்தரத்தக்க நூலாயிருப்பினும், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்குபொருளும் பயக்கத் தக்க நூலாகும். இக்குறவஞ்சிபோற் பிறிதொருகுறவஞ்சி யில்லையென்பதே பேரறிவாளர்கள் துணிபு.

இக்குறவஞ்சியானது முன்னுள்ள பதிப்பின் மிகப் பிழை சண்பலிந்திருந்த தன்மையை நோக்கி இந்நூலாசிரியராகிய நமது புலவர்பெருமானார் வழித்தோன்றலான எனது உண்மை நட்பின் நலவர் உயரிய திருவாளர் ராவ்ஸாஹிப் கே. எஸ். கற்பக விநாயகம்பிள்ளை பி. ஏ. அவர்களின் ஆணையைக்கொண்டு உயரிய திருவாளர் சங்கப்புலவர் மு ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பிழைதிருத்தியும் உலகில் யாவருமே அறியும்படி அரும்பதங் களுக்கெல்லாம் திருத்தமாக வுரையெழுதியும் அளித்த பேருபகாரத்தையும் பெருங்குணத்தையும் நந் தமிழுலகமானது எப்போதும் பாராட்டிப்போற்றற்குரியதேயன்றிப் பிறிதொரு கைம்மாறளித்தற் கிலதாம். இவ்வாறு திருத்திப் பதிப்பித்த புத்தகமுந் தற்போது கிடைப்பதரிதாயிருக்கின்ற தன்மை

யறிந்து இந்நூலின்கணுள்ள இன்பங்களையெல்லாம் நற்றமிழுல கம் அடையும்பொருட்டு இதனை இரண்டாவதுமுறை அச்சிற் பதிப்பிக்க வேண்டுமென்று பெருங்கருணைபுரிந்த எனது நட் பின்றலைவர் உயரியதிருவாளர் ராவ்ஸாஹிப் கே. எஸ். கறபக விநாயகம்பிள்ளை பி. ஏ. அவர்களுக்கு இத்தமிழுலகம் மிகவும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டதாகும்.

இதிலுள்ள பிழைகளைத் தமிழுலகமானது அடியேனுடைய சிற்றறிவை நோக்கிப் பொருத்தருளுமாறு முழுமுதற்கடவு ளாகிய சிவபெருமானது அளக்கொணுத்திருவருளை வேண்டு கின்றேன்.

இங்ஙனம்,

குக. மணிவாசகசரணாலயன்,

செந்தமிழ்ச்சைவத்தொண்டன்.

கல்லல்.

———(-)———

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

# திருக்குற்றாலப்பதிகம்.

பண் — குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வம்பார்குன்றநீடுயர்சாரல்வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக்கோலவண்டியாழ்செய்குற்றால
மம்பானெய்யோடாடலமர்ந்தானலர்கொன்றை
நம்பான்மேயநன்னகர்போலுநமரங்காள்.

பொடிகள்பூசித்தொண்டர்பின்செல்லப்புகழ்விம்மக்
கொடிகளோடுநாள்விழமல்குகுற்றாலங்
கடிகொள்கொன்றைகூவிளமாலைகாதல்செய்
யடிகண்மேயநன்னகர்போலுமடியீர்காள்.

செல்வமல்குசெண்பகம்வேங்கைசென்றேறிக்
கொல்லைமுல்லைமெல்லரும்பீனுங்குற்றாலம்
வில்லினொல்கமும்மதிலெய்துவினைபோக
நல்குநம்பானன்னகர்போலுநமரங்காள்.

பக்கம்வாழைப்பாய்கனியோடுபலவின்றேன்
றொக்கின்கோட்டுப்பைங்கனிதூங்குங்குற்றால
மக்கும்பாம்புமாமையும்பூண்டோரனலேந்தி
நக்கன்மேயநன்னகர்போலுநமரங்காள்.

மலையார்சாரன்மகவுடன்வந்தமடமந்தி
குலையார்வாழைத்தீங்கனிமாந்துங்குற்றால
மிலையார்சூலமேந்தியகையானெயிலெய்த
சிலையான்மேயநன்னகர்போலுஞ்சிறுதொண்டர்.

மைம்மாநீலக்கண்ணியர்சாரன்மணிவாரிக்
கொய்ம்மாவேனலுண்கிளியோப்புங்குற்றாலங்
கைம்மாவேழத்தீருரிபோர்த்தகடவுளெம்
பெம்மான்மேயநன்னகர்போலும்பெரியீர்காள்.

நீலநெய்தல்தண்சுனைசூழ்ந்தநீள்சோலைக்
கோலமஞ்ஞைபேடையொடாடுங்குற்றாலங்
காலன்றன்னைக்காலாற்காய்ந்தகடவுளெஞ்
சூலபாணிநன்னகர்போலுந்தொழுவீர்காள்.

போதும்பொன்னுமுந்தியருவிபுடைசூழக்
கூதன்மாரிநுண்டுளிதூங்குங்குற்றால
மூதூரிலங்கைமுட்டியகோனைமிறைசெய்த
நாதன்மேயநன்னகர்போலுநமரங்காள்.

அரவின்வாயின்முள்ளெயிறேய்ப்பவரும்பீன்று
குரவம்பாவைமுருகமர்சோலைக்குற்றாலம்
பிரமனோடுமாலறியாதபெருமையெம்
பரமன்மேயநன்னகர்போலும்பணிவீர்காள்.

பெருந்தண்சாரல்வாழ்சிறைவண்டுபெடைபுல்கிக்
குருந்தமேறிச்செவ்வழிபாடுங்குற்றால
மிருந்துண்டேருநின்றுண்சமணுமெடுத்தார்ப்ப
வருந்தண்மேயநன்னகர்போலுமடியீர்காள்

மாடவீதிவருபுனற்காழியார்மன்னன்
கோடலீன்றுகொழுமுனைகூம்புங்குற்றால
நாடவல்லநற்றமிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பாடநம்பாவம்பறையுமே.

திருச்சிற்றம்பலம்.



திருக்குறும்பலா.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

# திருக்குறும்பலாப்பதிகம்

பண்—காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வ
ரிருந்தவிடம்வினவிலேலங்கமழ்சோலையினவண்டியாழ்செய்
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. ௧

நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தநம்பானம்மை
யாட்பலவுந்தானுடையவம்மானிடம்போலுமந்தண்சாரற்
கீட்பலவுங்கீண்டுகிளைகிளையன்மந்திபாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவின்றீங்கனியைமாக்கடுவனுண்டுகளுங்குறும்பலாவே. ௨

வாடற்றலைமாலைசூடிப்புலித்தோல்வலித்துவீக்கி
யாடலரவசைத்தவம்மானிடம்போலுமந்தண்சாரற்
பாடற்பெடைவண்டுபோதலர்த்தத்தாதவிழ்ந்துபசும்பொனுந்திக்
கோடன்மணங்கமழுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. ௩

பால்வெண்மதிசூடிப்பாகத்தோர்பெண்கலந்துபாடியாடிக்
காலனுடல்கிழியக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பி
னீலமலர்க்குவளைகண்டிறக்கவண்டரற்றுநெடுந்தண்சாரற்
கோலமடமஞ்ஞைபேடையோடாட்டயருங்குறும்பலாவே. ௪

தலைவாண்மதியங்கதிர்விரியத்தண்புனலைத்தாங்கிதேவி
முலைபாகங்காதலித்தமூர்த்தியிடம்போலுமுதுவேய்சூழ்ந்த
மலைவாயசும்புபசும்பொன்கொழித்திழியுமல்குசாரற்
குலைவாழைத்தீங்கனியுமாங்கனியுந்தேன்பிலிற்றுங்குறும்பலாவே. ௫

நீற்றேறுதுதைந்திலங்குவெண்ணூலர்தண்மதியர்நெற்றிக்கண்ணார்
கூற்றேர்சிதையக்கடிந்தாரிடம்போலுங்குளிர்சூழ்வெற்பில்
ஏற்றேனமேனமிவையோடவைவிரவியிழிபூஞ்சாரல்
கோற்றேனிசைமுரலக்கேளாக்குயில்பயிலுங்குறும்பலாவே. ௬

பொன்னொத்தகொன்றையும்பிள்ளைமதியும்புனலுஞ்சூடிப்
பின்னொத்தவார்சடையெம்பெம்மானிடம்போலும்பிலயந்தாங்கி
மன்றத்துமண்முழவமோங்கிமணிகொழித்துவயிரமுந்திக்
குன்றத்தருவியயலேபுனறதும்புங்குறும்பலாவே. ௭

ஏந்துதிணிதிண்டோளிராவணனைமால்வரைக்கீழடரவூன்றிச்
சாந்தமெனநீறணிந்தசைவரிடம்போலுஞ்சாரற்சாரற்
பூந்தணறுவேங்கைக்கொத்திறுத்துமத்தகத்திற்பொலியவேந்திக்
கூந்தற்பிடியுங்களிறுமுடன்வணங்குங்குறும்பலாவே. ௮

அரவினணையானுநான்முகனுங்காண்பரியவண்ணல்சென்னி
விரவிமதியணிந்தவிகிர்தர்க்கிடம்போலும்விரிபூஞ்சாரன்
மரவமிருகரையுமல்லிகையுஞ்சண்பகமுமலர்ந்துமாந்தக்
குரவமுறுவல்செய்யுங்குன்றிடத்துச்செல்வக்குறும்பலாவே. ௯

மூடியசீவரத்தர்முன்கூறுண்டேறுதலும்பின்கூறுண்டு
காடிதொடுசமணைக்காய்ந்தார்க்கிடம்போலுங்கல்சூழ்வெற்பில்
நீடுயர்வேய்குனியப்பாய்கலைபாய்ந்[illegible]ருத்தக்செய்ய
கூடியவேடுவர்கள்*கூய்விளிபாக்கைமறிக்குங்குறும்பலாவே. ௰

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ணல்
நம்பானடிபரவுநான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
இன்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பால்தீவினைகள்போயகலநல்வினைகளாயவன்றே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

---

* கூய்விளியா என்றும் பாடம்.

திருநாவுக்கரசுசுவாமிகள் அருளிச்செய்த

# திரு அங்கமாலை.

பண்—சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தலையே நீவணங்காய்—தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய். ௧

கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ. ௨

செவிகாள் கேண்மின்களோ—சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பிரான் றிறமெப்போதுஞ்
செவிகாள் கேண்மின்களோ. ௩

மூக்கே நீமுரலாய்—முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீமுரலாய். ௪

வாயே வாழ்த்துகண்டாய்—மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான் றன்னை
வாயே வாழ்த்துகண்டாய். ௫

நெஞ்சே நீநினையாய்—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீநினையாய் ௬

கைகாள் கூப்பித்தொழீர்—கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். ௭

ஆக்கையாற்பயனென் — அரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப்போற்றியென்னாத இவ்
ஆக்கையாற்பயனென். அ

கால்களாற்பயனென் — கறைக்
கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென். கூ

உற்றாராருளரோ — உயிர்
கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறைகூத்தனல்லானமக்
குற்றாராருளரோ. ம

இறுமாந்திருப்பன்கொலோ — ஈசன்
பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன்சேவடிக்கீழ்ச்சென்று
இறுமாந்திருப்பன்கொலோ. கக

தேடிக்கண்டுகொண்டேன் — திரு
மாலொடுநான்முகனுந்
தேடித்தேடொணாத்தேவனையென்னுளே
தேடிக்கண்டுகொண்டேன். கஉ

திருச்சிற்றம்பலம்.

---

## மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம்.

### திருப்புலம்பல்.

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையுங்
குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே.

திருச்சிற்றம்பலம்.

———(o)———

உ

சிவமயம்.

# திருக்குற்றாலக் குறவஞ்சி.

## தற்சிறப்புப்பாயிரம்.

### விநாயகர் துதி.

பூமலி யிதழி மாலை புனைந்தகுற் றாலத் தீசர்
கோமலர்ப் பாதம் போற்றிக் குறவஞ்சித் தமிழைப் பாட
மாமதத் தருவி பாயு மலையென வளர்ந்த மேனிக்
காமலி தருப்போ லைந்து கைவலான் காவ லானே. (1)

### முருகக்கடவுள்.

பன்னிருகை வேல்வாங்கப் பதினொருவர் படைதாங்கப் பத்துத் திக்கும்
நன்னவவீ ரரும்புகழ மலைகளெட்டுங் கடலேழு நாடி யாடிப்
பொன்னின்முடி யாறேந்தி யஞ்சுதலை யெனக்கொழித்துப் புயநான்
மூன்றாச்
சென்னிருதா டருமொருவன் குற்றாலக் குறவஞ்சித் தமிழ்தந் தானே. (2)

---

(அரும்பதவுரை.) (1) மலி-நிறைந்த. இதழி-கொன்றை. கோமலர்-... மதத்தருவி - மதத்தாலாகிய அருவி. கா - காத்தல். தரு-கற்பகவிருக்ஷம். காவலான் - காவலையுடையவன்.

(2) பதினொருவர் படை - பதினொரு உருத்திராகிய ஆயுதங்கள்; அவையாவன: தோமரம், கொடி, வாள், குலிசம், பகழி, அங்குசம், மணி, பங்கயம், தண்டம், வில், மழு. பத்துதிக்கு-கிழக்கு முதலிய நான்கும், ஆகாயமும், பாதாளமும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு ஆகியநான்கும். நவவீரா-உமாதேவியார் திருவடிச்சிலம்பினின் [illegible] தோற்றிய நவசக்திகள் வயிற்றிற் பிறந்த வீரவாகுதேவர் முதலிய ஒன்பதின்மர். மலைகளெட்டு-, அவையாவன: கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலமலை, கந்தமாதனம். கடலேழு-, அவையாவன: நன்னீர், உவர்நீர், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு ஆகிய கடல்கள். ஆடி-திருவிளையாடல்செய்து. அஞ்சுதலை-பயப்படுதலை ஒழித்து-கெடுத்து. இச்செய்யுளில் பன்னிரண்டு முதல் ஒன்றுவரையுள்ள இலெண்களின் பொருள் முறையே வந்திருக்கும் அழகு காண்க.

ஐந்து தருக்கள் – சந்தானம். அரிச்சந்தனம். மந்தாரம்
பாரிசாதம். கற்பகம்.

# திருக்குற்றாலக் குறவஞ்சி.

## அவையடக்கம்.

தாரினை விருப்ப மாகத் தலைதனில் முடிக்குந் தோறும்
நாரினைப் பொல்லா தென்றே ஞாலத்தோர் தள்ளுவாரோ
சீரிய தமிழ்மா லைக்குட் செல்வர்குற் றாலத் தீசர்
பேரினா லெனது சொல்லைப் பெரியவர் தள்ளார் தாமே (9)

---

## நூல்.

### கட்டியக்காரன் வரவு.

தேர்கொண்ட வசந்த வீதிச் செல்வர்குற் றாலத் தீசர்
பார்கொண்ட விடையிலேறும் பவனியெச் சரிக்கை கூற
நேர்கொண்ட புரிநூன் மார்பு நெடியகைப் பிரம்புமாகக்
கார்கொண்ட முகிலே றென்னக் கட்டியக் காரன் வந்தான். (1)

இராகம்—தோடி. தாளம்—சாப்பு.

**கண்ணிகள்.**

(1) பூமேவு மநுவேந்தர் தேவேந்தர் முதலோரைப்
புரந்திடுஞ்செங் கோலான பிரம்புடையான்
(2) மாமேருச் சிலையாளர் வரதர்குற் றாலநாதர்
வாசற் கட்டியக் காரன்வந் தனனே. (2)

### திரிகூடநாதர் பவனிவருதலைக் கட்டியக்காரன் கூறுதல்.

**விருத்தம்.**

மூக்கெழுந்த முத்துடையா ரணிவகுக்கும் நன்னகர மூதூர் வீதி
வாக்கெழுந்த குறுமுனிக்கா மறியெழுந்த கரங்காட்டும் வள்ள லார்சீர்த்

---

(9) தார்-பூமாலை. மாலைக்குள்-மாலைக்குள்ளிருக்கும்.
(1) தேர்கொண்ட- (மன்மதன்) தேராகக்கொண்ட. வசந்தவீதி தென்றற்காற்றுவரும்தெரு;மேல்வருவனவுமது. பார்கொண்ட-பூமிதேவியை மனையாளாகக்கொண்ட. விடை - விஷ்ணுவாகிய இடபவாகனம். பவனி-திருவுலா வருதலை. எச்சரிக்கை-முன் அறிவித்தல். புரி-முறுக்கிய கார்-கருநிறம். முகிலேறு-சிறந்தமேகம். கட்டியக்காரன் - புகழ்கூறுவோ[ன்; மேலும் அது.
(1) மநுவேந்தர்-மனிதர்க்கரசர். புரந்திடும்—காக்கும். செங்கோல்-நீதி.
(2) மூக்கெழுந்த முத்து -மூக்கினிடத்துத்தோன்றிய முத்து; மூக்குத்தி. உடையார்-உடையவராகிய. அணிவகுக்கும் - (மன்மதன்) சேனையைப்பிரித்து நிறுத்தப்படும். வீதி-தெருவில். வாக்குதமது திருவாக்கால். எழுந்த- [இமயமலைவிட்டு] எழுந்துவந்த. மறி—மான். மறியெழுந்த கரங்காட்டலாவது: விஷ்ணுவாயிருந்தவர் சிவபிரானைகத் தரிசனங்காட்டுதல்.

தேக்கெழுந்த மறைநான்குஞ் சிலம்பெழுந்த பாதர்விடைச்
(சிலம்பி லேறி
மேக்கெழுந்த மதிசூடிக் கிழக்கெழுந்த ஞாயிறுபோல் மேவினா
(நே. (3)

தரு. இ-ம் - பந்துவராளி. தாளம் - சாப்பு.

பல்லவி.

பவனி வந்தனரே மழவிடைப் பவனி வந்தனரே.

அநுபல்லவி.

அவனிபோற்றிய குறும்பலாவுறை மவுனநாயகர் எவனநாயகர்
சிவனுமாபதி பயனுமானவர் கவனமால்விடை யதனிலேறியே.
(பவனி)

சரணங்கள்.

(1) அண்டர் கூட்டமு முனிவர் கூட்டமும்
அசுரர் கூட்டமு மனிதராகிய
தொண்டர் கூட்டமும் இமைப்பி லாரெனச்
சூழ்ந்து தனித்தனி மயங்கவே
பண்டை நரரிவர் தேவ ரிவரெனப்
பகுத்து நிறுவிய வேளை தொறுந்தொறும்
மண்ட லீகரை நந்தி பிரம்படி
மகுட கோடியிற் புடைக்கவே. (பவனி)

---

தேக்கு-நிறைவு. சிலம்பு-நூபுரம் (ஆக). விடைச்சிலம்பு-இடபமாகிய மலை. மேக்கெழுந்தமதி-மூன்றாம்பிறைச்சந்திரன். கிழக்கெழுந்தஞாயிறு-உதயகால சூரியன். இக்கவியில் சந்திரனுக்கும் சூரியனுக்கும் திசைகளைப் புணர்த்திக் கூறிய தொருநயம்.

(4) மழவிடை-இளமைதங்கிய இடபவாகனம். மவுனநாயகர்-சாத்துவிக குணமுடைய நாயகர். எவனம் - இளமைப்பருவம். (இடைக்குறை). கவனம் - வேகம்.

(1) இமைப்பிலார் - கண்மூடுதல் இல்லார். பகுத்து - பிரித்து. நிறுவியவேளை - நிறுத்தியகாலம். மண்டலீகரை - பூமியையாளும் அரசரது. கோடி - வரிசை. புடைக்க - அடிக்க. நந்திபிரம்படி மண்டலீகரது மகுட கோடியிற் புடைக்கவெனக் கூட்டுக.

அபயக்கை
வரதக்கை

# திருக்குற்றாலக் குறவஞ்சி.

(2) தடுப்ப தொருகரம் கொடுப்ப தொருகரந்
தரித்த சுடர்மழு விரித்த தொருகரம்
எடுத்த சிறுமறி பிடித்த தொருகரம் மான்
இலங்கப் பணியணி துலங்கவே பாம்பு
யடுத்த வொருபுலி கொடுத்த சோமனும் ஆடை
ஆனை கொடுத்தவி தானச் சேலையும் மேல்போர்வை
உடுத்த திருமருங் கசைய மலரயன் பிரமன்
கொடுத்த பரிகல மிசையவே. (பவனி)
பிரமகபாலம்

(3) தொடரு மொருபெருச் சாளி யேறிய
தோன்றல் செயப்படை தாங்கவே
யடல்கு லாவிய தோகை வாகனத் ஆற்றல்
தரசு வேல்வலம் வாங்கவே
படலை மார்பினிற் கொன்றை மாலிகை விரிந்த
பதக்க மணியொளி தேங்கவே
யுடைய நாயகன் வரவு கண்டுகண்
டுலகெ லாந்தழைத் தோங்கவே. (பவனி)

---

(2) தடுப்பது - அடியார்களுக்கு (பயத்தை வரவொட்டாமல்) தடை செய்வது. தரித்த-தாங்கப்பட்ட. மழு-மழுவாயுதத்தை. விரித்தது-விரித்துக் காட்டியது. மறி - மான். பணியணி - சர்ப்பாபரணம். சோமன-வஸ்திரம். விதானச்சேலை - விரிவுள்ள வஸ்திரம். மருங்கு - இடையில். பரிகலம்- (தலையாகிய) போசனபாத்திரம். இதில் தடுக்குங்கையை அபயக்கை யென்றுங் கொடுக்குங்கையை வரதக்கை யென்றுங் கூறுவர். மழுவும், மானும், புலியும், ஆனையும் ஆகிய நான்கையுந் தாருகாவனத்து ருஷிகள் சிவபிரானைக் கொல்லும்படி விடுத்தபோது அவர் முன்னிரண்டையும் இரண்டு கையிலேபிடித்து வைத்துக்கொண்டு மற்று இரண்டையும் உரித்து, அவ்விரண்டு தோல்களையும் உடையாகத் தரித்துக்கொண்ட சரிதம் கந்தபுராணம் ததீசியுத்தரப் படலத்திற் காண்க.

(3) பெருச்சாளி-கயமுகாசுரனாகிய பெருச்சாளிவாகனம். தோன்றல்-விநாயகர். படை-சேனையை. தாங்க-காக்க. அடல்-வலிமை. தோகை-மயில். வேல்வலம் - வேலாயுதத்தாலாகிய வெற்றியை. வாங்க - கொண்டுவர. படலை - விரிந்த. மாலிகை - மாலை. தேங்க — நிறைய.

(4) இடியின் முழக்கொடு படரு முகிலென
யானைமேற்கன பேரி முழக்கமுந்
துடியின் முழக்கமும் பரந்து திசைக்கரி
துதிக்கை யாற்செவி புதைக்கவே
அடியர் முழக்கிய திருப்ப லாண்டிசை
யடைத்த செவிகளுந் திறக்க மூவர்கள்
வடிசெய் தமிழ்த்திரு முறைக ளொருபுறம்
மறைக ளொருபுறம் வழங்கவே. (பவனி)

(5) கனக தம்புரு கின்ன ரங்களி
யாசை வீணை மிழற்றவே
யனக திருமுத்தின் சிவிகை கவிகைபொ
னால வட்டம் நிழற்றவே
வனிதை மார்பல குஞ்சம் சாமரை
வரிசை விசிறி சுழற்றவே
தனத னிந்திரன் வருணன் முதலிய
சகல தேவரும் வழுத்தவே. (பவனி)

(6) சைவர் மேலிடச் சமணர் கீழிடச்
சகல சமயமு மேற்கவே
கைவ லாழியங் கருணை மாலொடு
கமலத் தோன்புடை காக்கவே

---

(4) படரும் - நடக்கும். முகில் - மேகம். பேரி - முரசவாத்தியம். துடி - குறிஞ்சிநிலவாத்தியம்; இஃதன்றிச் சிவபிரான் கையிலிருக்கும் உடுக்கை யெனலுமாம். குற்றாலம் குறிஞ்சி நிலத்திலுள்ளதாதலால் அந்நில வாத்தியமென்பதே மிகநல்லது. பரந்து - வியாபித்தலால். திசைக்கரி-திக்குயானைகள். புதைக்க - பொத்த; மூட. பல்லாண்டு - மங்கலவாழ்த்தொலி. அடைத்த செவிகளும் - (வாச்சியவோசையால்) அடைக்கப்பட்ட காதுகளையும். மூவர்-திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் முதலிய மூவர். தமிழ்த்திருமுறை - தேவாரப்பதிகங்கள். வழங்க-உலாவிவர.

(5) கனகதம்புரு-தங்கமழுத்திய ஒருவகை வீணை. கின்னரம்-கின்னரப்பறவை. களி ஆசை - மகிழ்கின்ற ஆசையையுடைய. மிழற்ற-ஒலிக்க. அனக - அனந்தம். சிவிகை - தண்டிகை. கவிகை-குடை. ஆலவட்டம்-ஒருவித குடை. நிழற்ற-நிழலைச்செய்ய. குஞ்சம் - வீசுங்குஞ்சம்; அஃதொரு விருது. சுழற்ற - சுற்றிவீச. தனதன் - குபேரன். வழுத்த - துதிக்க. அநேகம் என்பது சந்தநோக்கி அனகமென்றாயிற்று.

(6) ஏற்க - அங்கீகரிக்க. வல் - வலிய. ஆழி - சக்கராயுதம். புடை- (இரண்டு) பக்கத்திலும்.

ஐவர் நாயகன் வந்த னன்பல
    வமரர் நாயகன் வந்தனன்
தெய்வ நாயகன் வந்த னன்னெனச்
    சின்னமெடுத்தெடுத் தார்க்கவே. (பவனி)

(7) சேனைப் பெருக்கமுந் தானைப் பெருக்கமுந்
    தேரின் பெருக்கமுந் தாரின் பெருக்கமும்
ஆனைப் பெருக்கமுங் குதிரைப் பெருக்கமும்
    அவனி முழுதினு நெருங்கவே
மோனைக் கொடிகளின் காடு நெடுவெளி
    மூடி யடங்கலும் ஓடி யிருண்டபின்
ஏனைச் சுடர்விரி யிடப கேதன
    மெழுந்து திசைதிசை விளங்கவே (பவனி)

(8) கொத்து மலர்க்குழற் றெய்வ மங்கையர்
    குரவை பரவையை நெருக்கவே
யொத்த திருச்செவி யிருவர் பாடல்க
    ளூகை மேழையு முருக்கவே
மத்த ளம்புயல் போன்மு ழங்கிட
    மயிலி னார்நடம் பெருக்கவே
சத்தி பயிரவி கௌரி குழன்மொழித்
    தைய லாளிட மிருக்கவே. (பவனி)

---

ஐவர்நாயகன்-பிரமன் முதலிய பஞ்சகர்த்தாக்களுக்குந் தலைமையான வன். எடுத்தெடுத்து - எடுத்துச்சொல்லி. ஆர்க்க - முழங்க.

(7) சேனை-ஆயுதம். தானை-காலாள், (பாரிசேடநியாயம). மோனைக் கொடிகள் - ஆதிக்கொடிகள்; அவையாவன; சிவபிரான் பிரமனுகியும் விஷ்ணுவாகிய பிறந்த காலத்திலுள்ள அன்னக்கொடி, கருடக்கொடிகள். காடு - மிகுதி, மூடி - மூடுதலால், இருண்டபின் - இருளடைந்தபிறகு. ஏனை - மறை. சுடர்விரி - ஒளிமிகுந்த. இடபகேதனம் - ரிஷபக்கொடி. விளங்க - பிரகாசிக்க. நெடுவெளியடங்கலும் ஓடி மூடியெனக் கூட்டுக. ஓடுதல் - பரத்தல்.

(8) கொத்து - பூக்கொத்திலுள்ள. குரவை - நடிக்கின்ற முழக்கம். பரவை - சமுத்திரத்தை. ஒத்த - சமானமாகிய. செவி (திரிகூடநாதர்) காதுகளில் வசிக்கும். இருவர் - ஆகா, ஊகூ வென்னுங் கந்தருவர்கள். புயல - மேகம. இடம் - இடப்பக்கத்தில். மயிலனார் நடமென்பதற்குப் பொருத்தமாக மத்தள ஓசைக்கு மேகமுழக்கத்தை உவமை கூறினர்.

## பவனிகாணப் பெண்கள் வருதல்.

### விருத்தம்.

பாலேறும் விடையில்வருந் திரிகூடப் பெருமானார் பவனி காணக்
காலேறுங் காமனுக்காக் கையேறும் படைப்பவுஞ்சாய்க் கன்னி மார்கள்
சேலேறுங் கலகவிழிக் கணைதீட்டிப் புருவநெடுஞ் சிலைகள் கோட்டி
மாலேறப் பொருதுமென்று மணிச்சிலம்பு முரசறைய வருகின்றாரே. (5)

## பவனி காணவந்த பெண்கள் சொல்லுதல்.

இ-ம் — புன்னாகவராளி. தாளம் — சாப்பு.

### கண்ணிகள்.

(1) ஒருமானைப் பிடித்துவந்த பெருமானைத் தொடர்ந்துவரும்
ஒருகோடி மான்கள்போல் வருகோடி மடவார்

(2) புரிநூலின் மார்பனிவன் அயனென்பார் அயனாகிற்
பொருங்கரவ மேதுதனிச் சங்கமே தென்பார்

(3) விரிகருணை மாலென்பார் மாலாகில் விழியின்மேல்
விழியுண்டோ முடியின்மேல் முடியுண்டோ வென்பார்

(4) இருபாலு நான்முகனுந் திருமாலும் வருகையால்
ஈசனிவன் திரிகூட ராசனே யென்பார்

(5) ஒருகைவளை பூண்டபெண்கள் ஒருகைவளை பூணமறந்
தோடுவார் நகைப்பவரை நாடுவார் கவிழ்வார்

(6) இருதனத்து ரவிக்கைதனை யரையிலுடை தொடுவார்பின்
இந்தவுடை ரவிக்கையெனச் சந்தமுலைக் கிடுவார்.

---

(5) பாலேறும் - வெண்ணிறமிகும். கால் - தென்றற்காற்று. படை - ஆயுதங்களையுடைய. பவுஞ்சு - சேனை. சிலை - வில். கோட்டி - வளைத்து. பொருதும்-போர்செய்வோம். சிலம்பு-பாதசரம், -காலிலணியும் ஆபரணம். முரசு அறைய - முரசு வாத்தியம்போல் முழங்க.

(1) ஒருமான் - தாருகாவனத்து ருஷிகள் விடுத்த ஒப்பற்ற மான். பெருமான் — திரிகூடநாதர்.

(2) புரிநூல் - பூணுநூல். அயன் - பிரமன். தனிச்சங்கம் - ஒப்பற்ற சங்கக்குழை.

(3) விழியின்மேல்விழி - நெற்றிக்கண். முடியின்மேல் முடி - தலை [மேற்சடை.

(5) வளை - வளையல். கவிழ்வார் - தலைகுனிவார்.

(6) உடைதொடுவார் - சேலையாகக் கட்டுவார்.

(7) கருதுமனம் புறம்போக வொருகண்ணுக்கு மையெடுத்த
கையுமா யொருகணிட்ட மையுமாய் வருவார்
(8) திருடனிவன் நன்னகரத் தெருவிலே நெடுநேரம்
நில்லாதே மதனையின்னம் வெல்லாதே வென்பார்
(9) மெய்வளைய மறுவுடைய தெய்வநா யகன்முடித்த
வெண்மதியும் விளங்குதெங்கள் பெண்மதிபோ லென்
(பார்
(10) பைவளைத்துக் கிடக்குமிவன் மெய்வளையும் பாம்புகட்குப்
பசியாதோ தென்றலைத்தான் புசியாதோ வென்பார்
(11) இவ்வளைக்கை தோளழுந்த இவன்மார்பி லழுந்தாமல்
என்னமுலை நமக்கெழுந்த வன்னமுலை யென்பார்
(12) மைவளையுங் குழல்சோரக் கைவளைகொண் டானிதென்ன
மாயமோ சடைதரித்த ஞாயமோ வென்பார். (6)

## வசந்தவல்லி வருதல்.

### விருத்தம்.

நன்னகர்ப் பெருமான் முன்போய் நாணமுங் கலையுந் தோற்ற
கன்னியர் சநுப்போற் காட்டிக் காமவேள் கலக மூட்டிப்

---

(8) திருடன் - திரிகூடராசன்.

(9) தெய்வநாயகன் முடித்த மெய்வளைய மறுவுடைய வெண்மதி யெனக் கூட்டுக. மெய்வளைய மதியென்றது, பிறைச்சந்திரனை. பெண் மதிபோல் விளங்குதென்றது, வெள்ளை ஆதலாலென்க. வெள்ளை-வெண் ணிறம் (அறியாமை).

(10) பை-படம். இவன் மெய்வளையும் பைவளைத்துக்கிடக்கும் பாம் பெனக் கூட்டுக. காற்று, பாம்புக்கு உணவாதலால் தென்றலைத்தான் புசியாதோ என்றாள்.

(11) இவன்மார்பிலழுந்தாமல் நமக்கெழுந்த வன்னமுலை என்ன முலை யெனக்கூட்டுக. நமக்கு - நம்மிடத்து. என்ன - பயனற்ற

(12 மைவளையும் - மேகஞ்சூழும். சடைதரித்த ஞாயமாவது : சடை முடி தரித்த பெரியவர் பிறர் பொருளைத் திருடாதிருத்தல்.

(7) கன்னியர் சநுப்போர் காட்டி - பெண்களுக்கு உதவிபோலத் தன்னைக் காண்பித்து. [சநு - உதவி.] காமவேள்-மன்மதனுக்கு. கலக மூட்டி - சண்டை மூளும்படிசெய்து.

பொன்னணித் திலதந்தீட்டிப் பூமலர் மாலை சூட்டி
வன்னமோ கினியைக் காட்டி வசந்தமோ கினிவந்தாளே. (7)

இ - ம் - கல்யாணி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

(1) வங்காரப் பூஷணம் பூட்டித் திலதந்தீட்டி
மாரனைக்கண் ணாலே மருட்டிச்
சிங்கார மோகனப் பெண்ணாள் வசந்தவல்லி
தெய்வரம்பை போலவே வந்தாள்.

(2) கண்ணுக்குக் கண்ணிணை சொல்லத் திரிகூடக்
கண்ணுதலைப் பார்வையால் வெல்லப்
பெண்ணுக்குப் பெண்மயங்கவே வசந்தவல்லி
பேடையன்னம் போலவே வந்தாள்.

(3) கையாரச் சூடகமிட்டு மின்னாரை வெல்லக்
கண்ணிலொரு நாடக மிட்டு
ஒய்யார மாக நடந்து வசந்தவல்லி
யோவியம் போலவே வந்தாள்.

(4) சல்லாப மாது லீலர் குற்றால நாதர்
சங்கநெடு வீதி தனிலே
உல்லாச மாது ரதிபோல் வசந்தவல்லி
யுருவசியும் நாணவே வந்தாள். (8)

---

மோகினியைக்காட்டி - (திருமாலாகிய) மோகினிப்பெண்ணின் அழகைத் தன்னுடம்பிலே அலங்காரஞ்செய்து காண்பித்து. வசந்தமோகினி-வசந்தவல்லி. பொன்னணித் திலதந்தீட்டிப் பூமலர் மாலை சூட்டி, வன்ன மோகினியைக் காட்டி, கன்னியர் சருப்போராகாட்டிக் காமவேள் கலக மூட்டி வசந்தமோகினி வந்தாளெனக் கூட்டுக.

(1) வங்காரம் - செப்பம்; ஒழுங்குற்ற.

(2) இணை-சமானம். பார்வையால்-பார்த்தலால். பேடை-பெட்டை.

(3) சூடகம்-கைவளை. கண்ணிலொருநாடகம் - கண்பார்வையாலே மருளச்செய்கின்ற ஒப்பற்ற நடனம். ஓவியம் - சித்திரம்.

[4] சல்லாபமாது-சரசகுணத்தையுடைய வுமாதேவியிடத்து.லீலர்-லீலைசெய்கின்றவர். சங்கநெடுவீதி - நீண்ட சங்க வடிவமாகச் செய்யப்பட்ட தெரு; மேல்வருவனவுமது. உல்லாசம் - மகிழ்ச்சி.

இ - ம் - பயிரவி. தாளம் — சாப்பு.

### கண்ணிகள்.

(1) இருண்ட மேகஞ்சுற்றிச் சுருண்டு சுழியெறியுங்
கொண்டையாள் குழை
யேறி யாடிநெஞ்சைச் சூறை யாடும்விழிக்
கெண்டையாள்.
திருந்து பூமுருக்கி னரும்பு போலிருக்கும்
இதழினாள் வரிச்
சிலையைப் போல்வளைந்து பிறையைப் போலிலங்கு
நுதலினாள்.

(2) அரம்பை தேசவில்லும் விரும்பி யாசைசொல்லும்
புருவத்தாள் பிறர்
அறிவை மயக்குமொரு கருவ மிருக்குமங்கைப்
பருவத்தாள்.
கரும்பு போலினித்து மருந்து போல் வடித்த
சொல்லினாள் கடல்
கத்துந் திரைகொழித்த முத்து நிரைபதித்த
பல்லினாள்.

(3) பல்லி னழகையெட்டிப் பார்க்கு மூக்கிலொரு
முத்தினாள் மதி
பழகும் வடிவுதங்கி யழகு குடிகொளுமு
கத்தினாள்.

---

[1] இருண்ட - கரிய. சுருண்டு - வளைந்து. சுழியெறியும் - நெறித்தலைச் செய்யும். குழை-காதில். ஆடி-விளையாடி. நெஞ்சை- [ஆடவர்] மனத்தை. சூறையாடும்-கொள்ளைகொள்ளும். இதழ்-அதரம். வரிச்சிலை-வரிந்துகட்டிய வில்.

[2] அரம்பைதேசவில் - தேவலோகத்து இந்திரதநுசு. மருந்து-அமிழ்தம். வடித்த-தெளித்தெடுத்த. கத்தும்-முழங்கும். நிரை-வரிசை போல.

[3] ஒரு முத்து-மூக்குத்தி. மதிபழகும் வடிவு - சந்திரன் வந்து பழகிக்கொள்ளும் உருவம்.

வில்லுப் பணிபுனைந்து வல்லிக் கமுகைவென்ற
கழுத்தினாள் சகம்
விலையிட் டெழுதியின்ப நிலையிட் டெழுதுந்தொய்யி
லெழுத்தினாள்.

(4) கல்லுப் பதித்ததங்கச் செல்லக் கடகமிட்ட
செங்கையாள் எங்குங்
கச்சுக் கிடக்கினுந் தித் திச்சுக்கிடக்குமிரு
கொங்கையாள்
ஒல்லுங் கருத்தர்மனக் கல்லுஞ் சுழிக்குமெழி
லுந்தியாள் மீதில்
ஒழுங்கு கொண்டுளதை விழுங்கு சிறியரோம
பந்தியாள்.

(5) துடிக்கு ளடங்கியொரு பிடிக்கு ளடங்குஞ்சின்ன
இடையினாள் காமத்
துட்ட னரண்மனைக்குக் கட்டுங் கதலிவாழைத்
தொடையினாள்
அடுக்கு வன்னச்சேலை யெடுத்து நெறிபிடித்த
உடையினாள் மட
அன்ன நடையிலொரு சின்ன நடைபயிலும்
நடையினாள்.

(6) வெடித்த கடலமுதை யெடுத்து வடிவுசெய்த
மேனியாள் ஒரு
வீமப் பாகம்பெற்ற காமப் பாலுக்கொத்த
சீனியாள்

---

வில்லு-ஒளி; இதில் உ-சாரியை. வல்லி - படர்கொடி. சகம்விலையிட்டு-உலகத்தை விலைபேசி. நிலையிட்டு-நிலைநிறுத்தி. தொய்யிலெழுத்து-சந்தனக்குழம்பாலெழுது மெழுத்து.

(4) கச்சு-முலைக்கச்சு; (கைத்து). தித்திச்சு-இனித்து. ஒல்லும்-பொருந்தும். சுழிக்கும்-சுருளும். உந்தி-கொப்பூழ். பந்தி-வரிசை.

(5) துடி-உடுக்கு. பிடி-கைப்பிடி. நெறிபிடித்த-கொய்து பிடித்த. அடுக்குவன்னச்சேலையாகிய உடையினையுடையாள் எனக்கூட்டுக.

(6) வெடித்த-மிகமுழங்கிய. வடிவு-அழகாக. வீமப்பாகம்-வீமன் கையாற்சமைக்கும்பக்குவம்—, அது: நளபாகம்போல்வதொன்று. காமப்பால்-ஆசையாகிய பால்; ஆசைப்பகுப்பு. சீனி-ஒரு மதுரப்பொருள். இங்கே பாலுஞ் சீனியுஞ் சேர்த்த பொருத்தங் காண்க.

பிடித்த சுகந்தவல்லிக் கொடிப்போல் வசந்தவல்லி
பெருக்கமே — சத்தி
பீட வாசர்திரி கூட ராசர்சித்தம்
உருக்குமே.

## வசந்தவல்லி பந்தடித்தல்,

### விருத்தம்.

வித்தகர் திரிகூ டத்தில் வெளிவந்த வசந்த வல்லி
தத்துறு விளையாட் டாலோ தடமுலைப் பணைப்பி னாலோ
நத்தணி கரங்கள் சேப்ப நாலடி முன்னே யோங்கிப்
பத்தடி பின்னே வாங்கிப் பந்தடி பயில்கின் றாளே. (10)

இ-ம்-பயிரவி. தாளம்-சாப்பு

### கண்ணிகள்.

(1) செங்கையில் வண்டு கலின்கலி னென்று செயஞ்செய
மென்றாட — இடை
சங்கத மென்று சிலம்பு புலம்பொடு தண்டை
கலந்தாட — இரு
கொங்கை கொடும்பகை வென்றன மென்று குழைந்து
குழைந்தாட — மலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த சவுந்தரி
பந்தா — பயின்றாளே.

---

சுகந்தம்-நல்ல வாசனையுடைய. பெருக்கம்-(அழகின்) மிகுதி. சத்தி பீடவாசர்-(அறுபத்துநான்குசத்திபீடத்தி லொரு சத்திபீடம் திருக்குற்றாலத்தில் உள்ளது; அந்தச்) சத்திபீடத்தில் வசிப்பவராகிய.

(10) தத்துறு-தாவுகின்ற. பணைப்பு-பருமை. நத்து-சங்கவளையல் (ஆகுபெயர்). சேப்ப-சிவப்ப. முன்னேயோங்கி - முன்னேறிச்சென்று. பயில்கின்றாள்-பழகுகின்றாள்.

(1) வண்டு-வளையல். ஆட-ஒலிக்க. சங்கதம்-சந்தேகம். சிலம்பு-பாதசரம். புலம்பொடு-ஒலித்தலுடனே. பகை- (பந்தாகிய) பகையை. குழைந்து குழைந்து-நெகிழ்ந்து நெகிழ்ந்து. ஆட-அசைய.

(2) பொங்கு கனங்குழை மண்டிய கொண்டை புரண்டு
புரண்டாடக் குழல்
மங்குலில் வண்டு கலைந்தது கண்டு மதன்சிலை
வண்டோட இனி
யிங்கிது கண்டில மென்படு மென்படு மென்றிடை
திண்டாட மலர்ப்
பங்கய மங்கை வசந்த சவுந்தரி
பந்து பயின்றாளே.

(3) சூடக முன்கையில் வால்வளை கண்டிரு தோள்வளை
நின்றாடப் புனை
பாடக முஞ்சிறு பாதமு மங்கொரு பாவனை
கொண்டாட நய
நாடக மாடிய தோகை மயிலென நன்னகர்
வீதியிலே யணி
யாடக வல்லி வசந்த வொய்யாரி
யடர்ந்து பந் தாடினளே.

(4) இந்திரை யோவிவள் சுந்தரி யோதெய்வ ரம்பையோ
மோகினியோ மன
முந்திய தோவிழி முந்திய தோகர முந்திய
தோவெனவே உயர்
சந்திர சூடர் குறும்பல வீசுரர் சங்கணி
வீதியிலே மணிப்
பைந்தொடி நாரி வசந்தவொய் யாரிபொற்
பந்து கொண் டாடினளே. (11)

---

(2) கனங்குழை - கனத்தகாதணியில். மண்டிய - நெருங்கிய. கொண்டை - கண் [ஆகுபெயர்]. குழல் மங்குலில் - கூந்தலாகிய மேகத்தில். மதன்சிலைவண்டு-மன்மதன் கருப்புவில்லிற் கட்டிய கயிறாகியவண்டு என்படும் - என்னபாடுபடும். திண்டாட - கலக்கப்பட.

(3) வால்வளை - வெள்ளியவளையல். தோல்வளை - தோட்காப்பு. பாவனை-சமானம். ஆடகவல்லி-பொன்வல்லிக்கொடி. ஒய்யாரி-அழகுடையவள்.

(4) இந்திரை-இலக்குமி. சுந்தரி-இரதி. சந்திரசூடர்-சந்திரனைத் தரித்தவர்.

## இதுவுமது. விருத்தம்

கொந்தடிப்பூங் குழல்சரிய நன்னகரில் வசந்தவல்லி கொடிய காமன்
முந்தடிபிந் தடியிடைபோய் மூன்றடிநா லடிநடந்து முடுகி மாதர்
சந்தடியிற் றிருகியிட சாரிவல சாரிசுற்றிச் சகிமார் சூழப்
பந்தடிக்கும் பாவனையைப் பார்க்கவய னாயிரங்கண் படைத்திலானே.

## இதுவுமது.

தரு. இ—ம்—காம்போதி. ஆதி தாளம்.

### பல்லவி.

பந்தடித்தனளே வசந்த சுந்தரி விந்தை யாகவே.

### சரணங்கள்.

(1) மந்தர முலைக ளேச லாட மகரக் குழைக ளூச லாடச்
சுந்தர விழிகள் பூச லாடத் தொங்கத் தொங்கத் தொங்கத்
தொம்மெனப். (பந்த)

(2) பொன்னி னொளியில் வந்து தாவிய மின்னி னொளிவுபோல
நன்ன கர்த்திரி கூடம் பாடி நகுர்தத் திகுர்தத் மேவ
தகுர்தத் தொம்மெனப் (பந்த)

## வசந்தவல்லி திரிகூடநாதரைக் காணுதல்.

### விருத்தம்.

வருசங்க வீதி தன்னில் வசந்தபூங் கோதை காலில்
இருபந்து குதிகொண் டாட இருபந்து முலைகொண் டாட

---

(12) கொந்து அடி பூ-பூங்கொத்தினடியிலுள்ள மலர். முந்தடி-முற்பக்கம். பிந்தடி-பிற்பக்கம். இடை-இடத்தில். இடையென்பதனை யிரண்டிடத்துங் கூட்டுக. முடுகி-விரைந்து. சந்தடியில்-கூட்டத்தில். திருகி-திரும்பி. இடசாரி-இடச்சுற்று. வலசாரி-வலச்சுற்று. பாவனை-அலங்காரம் [தாற்பரியம்]. விந்தை-ஆச்சரியம்.

(1) ஏசல் - பழிமொழிக்கிடமாக. ஆட-அசைய. மகரக்குழைகள்-மகர குண்டலங்கள். ஊசலாட - போக்குவரவு செய்ய. பூசலாட-கலகஞ் செய்ய. தொங்க............தொம்மென - ஒலிக்குறிப்பு.

(2) ஒளிவு-பிரகாசம். திரிகூடம்பாடி-திருக்குற்றாலத்தின் கீர்த்தியைப் படித்து. நகுர்த.........தொம்மென-ஒலிக்குறிப்பு.

[14] காலின் குதி இருபந்து கொண்டாட எனக்கூட்டுக. குதி-குதிக்கால். முலை இருபந்து கொண்டாட எனக் கூட்டுக. குதிக்கால்களுக்கும் முலைகளுக்கும் பந்து உவமையாதலா லிங்ஙனங் கூறினர்.

ஒருபந்து கைகொண் டாட ஒருசெப்பி லைந்து பந்துந்
தெரிகொண்டு வித்தை யாடுஞ் சித்தரை யெதிர்கொண்
டாளே. (14)

இ-ம்—அடாணா. ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச் சித்த ராரோ வெகு
விந்தைக் கார ராக விடையி லேறி வந்தார். (இந்தச்)

சரணங்கள்.

(1) நாகம் புயத்திற் கட்டி நஞ்சு கழுத்திற் கட்டிக்
காக மணுகாம லெங்குங் காடு கட்டிப்
பாகந் தனிலொ ருபெண் பச்சைக் கிளிபோல் வைத்து
மோகம் பெறவொ ருபெண் முடியில் வைத்தார். (இந்தச்)

(2) மெய்யிற் சிவப்பழகுங் கையில் மழுவழகும்
மையார் விழியார் கண்டால் மயங்காரோ
செய்ய சடையின் மேலே திங்கட் கொழுந்திருக்கப்
பையை விரிக்கு தம்மா பாம்பு சும்மா. (இந்தச்)

(3) *அருட்கண் பார்வை யாலென் னங்கந் தங்கமாக
உருக்கிப் போட்டார் கண்ட வுடனேதான்

---

ஒரு செப்பில்-ஒன்றாகிய மாயை யென்கிற செப்பினுள்ளே. மறைத்தலைச்செய்தலால் மாயையைச் செப்பாக உருவகித்தார். ஐந்துபந்தாவன-நிலம், நீர், தீ, காற்று, ஆகாயமென்பன. தெரிகொண்டு-தெரிந்துகொண்டு. வித்தையாடும்-(மேற்கூறிய செப்பினுள்ளே மறைத்தும் வெளிப்படுத்தியும் விநோத) விளையாடலைச்செய்யும். மறைத்தல் - ஒடுக்குதல். வெளிப்படுத்தல் - மீளச்சிருட்டி செய்தல். நிலமுதலியவை ஒன்றோடொன்று தொடர்புடையன ஆதலால் அவற்றைப் பந்து ஆக உருவகித்தார்.

(1) காடுகட்டி,—காடுகட்டலாவது: குறிக்கப்பட்ட இடத்தில் மிருகம் பறவைகள் வராமல் தடைசெய்தல். பெண்-குழல்வாய்மொழியம்மை. பெண்-கங்கை.

(2) திங்கட்கொழுந்து-பிறைச்சந்திரன். இருக்க-உயிரோடிருக்க. (அதையுண்ணாமல்) பையை-படத்தை.

(3) பார்வையால் - பார்த்தலால்.

---

* அரிக்கண்பார்வையாலே யனங்கன் றங்கமாக என்றும் பாடம்.

பெருக்கம் பார்க்கி லெங்கள் திருக்குற் றாலர் போலே
யிருக்கு திவர்செய் மாயம் ஒருக்காலே. (இந்தச்) (15)

## தோழிமார் சொல்லைக்கேட்டு வசந்தவல்லி மோகங்கொள்ளுதல்

### விருத்தம்.

திங்களை முடித்தார் கண்டாய் திரிகூடச் செல்வர் கண்டாய்
எங்குள சித்துக் கெல்லாம் இறையவ ரிவரே யென்று
நங்கைமார் பலருங் கூற நன்மொழித் தேறல் மாந்தி
மங்கையாம் வசந்தவல்லி மனங்கொண்டாள் மயல்கொண்டாளே.
(16)

இ—ம்—புன்னாகவராளி. ரூபகதாளம்.

### கண்ணிகள்.

(1) முனிபரவு மினியானே (வேத) முழுப்பலவின் கனிதானே
கனியில்வைத்த செந்தேனே (பெண்கள்) கருத்துருக்க வந்தானே
தினகரன்போற் சிவப்பழகும் (அவன்) திருமிடற்றிற் கறுப்பழகும்
பனகமணி யிருகாதும் (கண்டால்) பாவையுந்தா னுருகாதோ.

(2) வாகனைக்கண் டுருகுதையோ (ஒரு) மயக்கமதாய் வருகுதையோ
மோகமென்ப திதுதானோ (இதை) முன்னமேநா னறிவேனோ
ஆகமெல்லாம் பசந்தேனே (பெற்ற) அன்னைசொல்லுங் கசந்தேனே
தாகமின்றிப் பூணேனே (கையில்) சரிவளையுங் காணேனே. (17)

## தோழிமார் புலம்பல்

### விருத்தம்.

நடைகண்டா லன்னந் தோற்கு நன்னகர் வசந்தவல்லி
விடைகொண்டா னெதிர்போய்ச் சங்க வீதியிற் சங்கந் தோற்றாள்

(16) சித்து-மாயவித்தை. மொழிநதேறல் - சொல்லாகியதேனை. மாந்தி-உண்டு.

(1) முனி - அகத்தியமுனிவன். தினகரன் - சூரியன். மிடறு-கழுத்து. பனகம்-பாம்பு (இடைக்குறை).

(2) வாகன்-அழகுடையவன். ஆகம்-உடல். பூணேன்-பொருந்தேன். சரிவளை-சரியாகிய வளையல் ( இருபெயரொட்டு ).

(18) விடை-இடபவாகனம், சங்கம்-வளையல்.

சடைகொண்டா னுடைதான் கொண்டு தன்னுடை கொடுத்தா ளையன்
உடைகொண்ட வழக்குத் தானோ ஊர்கின்ற தேர்கொண் டாளே. (18)

இ-ம்-தோடி. தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(1) ஆசைகொண்டு பாரில் வீழ்ந்தாள் நேசமா னென்பார் விளை
யாடாள் பாடாள் வாடா மாலை சூடாள்கா ணென்பார்
பேசிடாத மோசமென்ன மோசமோ வென்பார் காமப்
பேயோ வென்பார் பிச்சோ வென்பார் மாயமோ வென்பார்.

(2) *ஐயோ என்ன செய்வமென்பார் தெய்வமே யென்பார் களைப்
பாச்சோ வென்பார் மூச்சே தென்பார் பேச்சே தோவென்பார்
கையிற்றிரு நீறெடுப்பார் தையலா ரெல்லாஞ் சூலக்
கையா திரிகூடநாதா கண்பாரா யென்பார். (19)

## வசந்தவல்லியைப் பாங்கிகள் உபசரித்தல்.

விருத்தம்.

வானவர் திருக்குற் றாலர் மையலால் வசந்த வல்லி
தானுடல் சோர்ந்தா ளென்று தமனிய மாடஞ் சேர்த்து
மேனியா ரழகு தோற்ற மின்னனார் விழுந்த பேரைக்
கூனைகொண் டமிழ்த்து வார்போற் குளிர்ச்சியால் வெதுப்புவா
(ரே. (20)

---

சடைகொண்டான் உடை - சடாதரராகிய திரிகூடநாதரது வஸ்திரம்; அஃதாவது: திகம்பரம்; திருவாணம். தன்னுடைகொடுத்தாள். (வசந்தவல்லி) தன்னுடைய சேலையைக் கொடுத்தனள் ஆகி; அஃதாவது: சேலையை யிழந்தாளென்றபடி. ஐயன் - [அத] திரிகூடநாதர். உடைகொண்ட வழக்குத்தானோ- (தன்) சேலையைக் கவர்ந்துகொண்ட முறையினாலோ. ஊர்கின்ற தேர்கொண்டாள்- [அவர்] நடத்துகின்ற ரதமாகிய பூமியைக் கைப்பற்றிக்கொண்டாள்; அஃதாவது; விரகத்தாலே சேலையவிழ்ந்துபோய்விட்டபடியால் நாணததால் மானத்தைக் காப்பாற்றும் பொருட்டுப் பூமியிற் குப்புற விழுந்தாளென்பது.

(1) நேசமான் - அன்புடைய வசந்தவல்லி. வாடாமாலை - இரத்நாபரணம். பிச்சு - பித்து; பயித்தியம்.

(2) களைப்பு - சோர்வு.

(20) தமனியம்-பொன். அழகுதோற்றம்- அழகின் பொலிவுடைய. கூனைகொண்டு - நீரிறைக்குஞ்சாலால். அமிழ்த்துவார் - [நீரினுள்ளே] அழுத்துவார்.

இ-ம்—கல்யாணி. தாளம்--சாப்பு.

**கண்ணிகள்.**

(1) முருகு சந்தனக் குழம்பு பூசுவார் விரசத்தீயை
மூட்டி மூட்டி விசிறி வீசுவார்
கருகு தேயுட லுருகு தேயென்பார் விரித்த பூவுங்
கரியு தேமுத்தம் பொரியு தேயென்பார்.

(2) அருகி லிருந்து கதைகள் நடத்துவார் எடுத்து மாதர்
அணைத்து வாழைக் குருத்திற் கிடத்துவார்
பெருகு நன்னகர்க் குறும்ப லாவினுர் வசந்த மோகினி
பெருநி லாவி னொடுக லாவினுள். (21)

வசந்தவல்லி சந்திரனை நிந்தித்தல்.

**விருத்தம்.**

பெண்ணிலே குழன்மொழிக்கோர் பங்குகொடுத்
தவர்கொடுத்த பிரமை யாலே
மண்ணிலே மதிமயங்கிக் கிடக்கின்றே
னுனக்குமதி மயக்கந் தானே
கண்ணிலே நெருப்பைவைத்துக் காந்துவா
ருடன்கூடிக் காந்திக் காந்தி
விண்ணிலே நெருப்பைவைத்தாய் தண்ணிலாக்
கொடும்பாவி வெண்ணி லாவே. (22)

இ-ம்—வராளி. ஆதிதாளம்.

**கண்ணிகள்.**

(1) தண்ணமு துடன்பிறந்தாய் வெண்ணிலாவே யந்தத்
தண்ணளியை யேன்மறந்தாய் வெண்ணிலாவே

---

[1] முருகு - வாசனை.

[2] அருகில் - பக்கத்தில். நடத்துவார் - தொடர்ந்து சொல்லுவார். குறும்பலாவினுர் பெருநிலாவினொடு வசநதமோகினி கலாவினளெனக் கூட்டுக. நிலாவினொடு-சந்திரனிடத்தில். கலாவினள் - கோபங் கொண்டாள்.

[22] பெண்ணிலே - பெண்களுக்குள்ளே. பிரமை - மயக்கம். மதி மயக்கம்-அறிவுமயக்கம். காந்துவார்-சுடுகின்ற திரிகூடநாதர். தண் இலா-குளிர்ச்சியில்லாத.

[1] தண் அளி - குளிர்ந்த குணம்.

பெண்ணுடன் பிறந்ததுண்டே வெண்ணிலாவே யென்றன்
பெண்மைகண்டுங் காயலாமோ வெண்ணிலாவே.

(2) விண்ணிலே பிறந்ததற்கோ வெண்ணிலாவே எரு
விட்டுநா னெறிந்ததற்கோ வெண்ணிலாவே
கண்ணில்விழி யாதவர்போல் வெண்ணிலாவே மெத்தக்
காந்தியாட்டம் ஆடுகிறாய் வெண்ணிலாவே.

(3) ஆகடியஞ் செய்தல்லவோ வெண்ணிலாவே நீதான்
ஆட்கடியன் போற்குறைந்தாய் வெண்ணிலாவே
மோகன்வரக் காணேனென்றால் வெண்ணிலாவே யிந்த
வேகமுனக் கானதென்ன வெண்ணிலாவே.

(4) நாகமென்றே யெண்ணவேண்டாம் வெண்ணிலாவே யிது
வாகுகுழற் பின்னல்கண்டாய் வெண்ணிலாவே
கோகனக வீறழித்தாய் வெண்ணிலாவே திரி
கூடலிங்கர் முன்போய்க்காய்வாய் வெண்ணிலாவே (23)

## வசந்தவல்லி மன்மதனை நிந்தித்தல்
### விருத்தம்

தண்ணிலா மௌலிதந்த மையலா னதையறிந் தையய லார்கள் (மோ
எண்ணிலாப் பகையெடுத்தா ரிந்நகரை நன்னகரென் றெவர் சொன்னூ

பெண் - இலக்குமியாகியபெண். உண்டே - உண்டல்லவா.

(2) விண்ணிலே பிறந்ததற்கோ சுடுகிறாய் என்றது, மண்ணிலே பிறந்திருந்தால் இட ஒற்றுமையினாலாவது சுடாதிருப்பா யென்றபடி. எருவிட்டு நானெறிந்ததற்கோ என்றது, நல்ல நாயகன் கிடைக்கவேண்டு மென்று சிறு பிராயத்தில் நான் உன்னைப் பூசிக்கும்போது எருவை விட்டெறிந்ததனாலோ என்பது ; அஃதாவது: கன்னிப்பெண்கள் பிறைச் சந்திரனை நல்ல நாயகன் கிடைக்கவேண்டுமென்று எருப்பொடியைத் தூவிப்பூசித்து வணங்குதல் பண்டைக்காலத்து வழக்கு ; இதுபற்றியே கோவைத்துறைகளிற் பிறை தொழுகென்றலென்னு மொரு துறையு முண்டு. காந்தியாட்டம்—குட்டுவிளையாட்டு. ஆடுகிறாய்—விளையாடுகிறாய்.

(3) ஆகடியம் - அநியாயம். ஆட்கடியன் — மனிதனுக்கு அடிமைக்காரன். இஃதன்றி, நெடுநாட்சென்ற பாம்பென்பாருமுளர்; அது: உடல் மிகக்குறுகியுள்ளது. மோகன்-மோகத்தையுண்டுபண்ணிய திரிகூடநாதர், வேகம்-கோபம்;

(4) வாகு-அழகு. குழற்பின்னல் கூந்தலைப் பின்னிவிட்ட சடை; அது: பார்வைக்குக் கரும்பாம்புபோலிருக்கும். கோகனகவீறு - தாமரை மலரின் பெருமையை. அழித்தாய் - கெடுத்தவனே. காய்வாய்-சுடுவாய்

(24) மௌலி - சடையையுடைய திரிகூடநாதர். இந்நகரை—இந்த அநியாயத்தையுடைய ஊரை. நன்னகரென்று - நல்லூரென்று.

அண்ணலார் திரிகூட நாதரென்ப தென்னளவு *மமைந்தி டாரோ
வெண்ணிலாக் குடைப்பிடித்து மீனகே தனம் பிடித்தவேனி லானே (24)

இ-ம்—எதுகுலகாம்போதி. தாளம்-சாப்பு

**கண்ணிகள்**

(1) **கைக்கரும் பென்னகணையென்ன நீயென்ன மன்மதா-இந்தச்**
செக்கரும் பாவி நிலாவுமே போதாதோ மன்மதா
மைக்கருங் கண்ணு ளிரதிக்கு மால்கொண்ட மன்மதா-விடை
வல்லார்க்கு மால்கொண்டாற் பொல்லாப்பென் மேலுண்டோ [மன்மதா.

(2) திக்கெல்லாந் தென்றற் புலிவந்து பாயுதே மன்மதா—குயிற்
சின்னம் பிடித்தபின் அன்னம் பிடியாதே மன்மதா
அக்கா ளனுஞ்சகி வெட்காம லேசுவாள் மன்மதா-அவள்
அல்லாமற் றூயொரு பொல்லாத நீலிகாண் மன்மதா.

(3) நேரிழை யாரையு மூரையும் பாரடா மன்மதா—கண்ணில்
நித்திரை தானொரு சத்துரு வாச்சுதே மன்மதா.
பேரிகை யேயன்றிப் பூரிகை யேன்பிள்ளாய் மன்மதா-சிறு
பெண்பிள்ளை மேற்பொரு தாண்பிள்ளை யாவையோ மன்மதா.

---

திரிகூடநாதர் - பெண்களைச்சேரத் தலைவராயுள்ளவர். என்னளவும்-என்மட்டிலும். அமைந்திடாரோ - பொருந்தமாட்டாரோ. கேதனம் - கொடி. வேனிலானே - வேனிற்காலத்துக்குரிய மன்மதனே.

(1) என்ன என்பது, எதற்கென்னும் பொருளில் வந்தது. செக்கரும் - செவ்வானமும். மால் - ஆசை. பொல்லாப்பு - குற்றம்.

(2) சின்னம் - எக்காளம். பிடித்த — கைப்பற்றிய. பிடியாது - எற்காது. வெட்காமல் — நாணுமல்.

(3) நேரிழையாரையும் ஊரையும் பாரடா என்றது, பெண்களும் ஊரிலுள்ள மற்றவர்களும் எனக்காக வருந்துகின்றார்கள்; அவர்கள் பொருட்டாவது எனக்கிரக்கஞ்செய்யென்பது. பேரிகை - கடலாகிய முரசு. பூரிகையே[illegible] - ஊது குழல் எதற்கு. பிள்ளாய் - சிறுவனே.

---

* அயர்த்திட்டாரோ என்றும் பாடம். அயர்த்தல் - மறத்தல்.

(4) வார்சடையீதல்ல கார்குழற் பின்னல்காண் மன்மதா—நெற்றி
வந்தது கண்ணல்ல சிந்தூர ரேகைபார் மன்மதா
நாரியங் காளர்தென் னாரிய நாட்டினர் மன்மதா—எங்கள்
நன்னகர்க் குற்றாலர் முன்னமே செல்லுவாய் மன்மதா. (25)

## வசந்தவல்லியைப் பாங்கி வினவுதல்.

### விருத்தம்.

படியேழு முடையார் திரிகூடப் படைமா மதனைப் பயிற்றியசொல்
அடியேன் சகியா யிருக்கையிலே யதுநான் பயின்றா லாகாதோ
கொடியே மதூரம் பழுத்தொழுகு கொம்பே வம்பு பொருதமுலைப்
பிடியே யெமது குடிக்கொருபெண் பிள்ளாய் கருத்து விள்ளாயே. (26)

## வசந்தவல்லி பாங்கிக்குச் சொல்லுதல்.

இ-ம்-கல்யாணி தாளம்-சாப்பு.

### கண்ணிகள்

(1) மெய்யர்க்கு மெய்யர் திரிகூட நாயகர் மீதில் மெத்த
மையல்கொண் டேனந்தச் செய்தியைக் கேளாய் நீ பாங்கி
செய்ய சடையுந் திருக்கொன்றை மாலை யழகும் அவர்
கையில் மழுவுமென் கண்ணை விட் டேயக லாவே.

(2) கங்கைக் கொழுந்தணி தெய்வக் கொழுந்தைநான் கண்டுகுளிர்
திங்கட் கொழுந்தையுந் தீக்கொழுந் தாக்கிக்கொண் டேனே

---

(4) வார் - நீண்ட. குழற்பின்னல் - சடை. சிந்தூரரேகை - சிந்தூரப் பொட்டு. ஆரியநாடு-பாண்டிநாட்டில்உட்பிரிவாயுள்ளநாடுகளிலொன்று. குற்றாலர் முன்னமே செல்லுவாய் என்றது, அவர்தான் உனக்குப் பகைவர்; அவரிடம்போய்ச் சண்டைசெய்யென்பது

(26) படிஏழு - ஏழுலகம். படை-சேனை. பயிற்றியசொல்-படிப்பித்த வார்த்தை. சகியாய் — தோழியாகி, பயின்றால் - படித்துக்கொண்டால். (பயிற்றிய சொல்லது எனக்கூட்டுக).அது: பகுதிப்பொருள் விகுதி. வம்பு-கச்சினை. பொருத - மோதிய. பிள்ளாய் - பிள்ளையே. விள்ளாய் - சொல்லுவாய்.

(1) செய்ய - சிவந்த.

(2) கங்கைக்கொழுந்து -இளம்பருவக் கங்கை. தெய்வக்கொழுந்து- தேவதைகளுக்கெல்லாக் தலைமையாயுள்ளவன். திங்கட்கொழுந்து - பிறைச்சந்திரன், தீக்கொழுந்து - கொடிய அக்கினிச்சுவாலை.

சங்கக் குழையாரைச் சங்க மறுகினிற் கண்டு இரு
செங்கைகளுட் சங்கமுஞ் சிந்தி மறுகிவிட் டேனே.

(3) மன்றற் குழவி மதியம் புனைந்தாரைக் கண்டு சிறு
தென்றற் குளவி தினங்கொட்டக் கொட்டநொந் தேனே
குன்றச் சிலையாளர் குற்றால நாதர்முன் போனேன் மதன்
வென்றிச் சிலைகொடு மெல்லமெல் லப்பொரு தானே.

(4) பெம்மானை நன்னகர்ப் பேராஜ வீதியிற் கண்டு அவர்
கைம்மானைக் கண்டு கலையை நெகிழவிட் டேனே
செம்மேனி தன்னிற் சிறுகறுப் பாரைநான் கண்டு இப்போ
தம்மாவென் மேனி யடங்கலு மேகறுத் தேனே.

(5) வெள்ளி விடையில் வியாளம் புனைந்தாரைக் கண்டு சிந்தை
நள்ளிய திங்களை ஞாயிறு போலக்கண் டேனே
எள்ளள வூணு முறக்கமு மில்லாரைக் கண்டு நானும்
ஒள்ளிய வூணு முறக்கமு மற்றுவிட் டேனே, (27)

வசந்தவல்லியைப் பாங்கி பழித்தல்.

விருத்தம்.

தரைப்பெண்ணுக் கணிபோல் வந்த தமனியக்கொடியே மாதர்
துரைப்பெண்ணே வசந்த வல்லி சொன்னபே தைமைக்கென் சொல்வே
வரைப்பெண்ணுக் காசை பூண்டு வளர்சங்க மறுகி னூடே (ன்
நரைத்தமா டேறு வார்க்கோ நங்கைநீ மயல்கொண் டாயே. (28)

---

சங்கமும் - வளையலும்.

(3) மன்றல் - மணம். குழவி - இளமை. குளவி - ஒரு விஷசெந்து
குன்றச்சிலையாளர் - மலைவில்லை யாளுந்தலையுடையவர்.

(4) பெம்மான் - சிவபெருமான். பேர் - பெரிய, கலை - சேலை,
ஆண்மான். சிறுகறுப்பு - (கழுத்திலுள்ள விஷமாகிய) சிறிய கருநிறம்.

(5) வெள்ளி - வெண்மையுடையதாகிய. வியாளம்- பாம்பு, நள்ளிய-
சிநேகித்த. திங்களை - சந்திரனை. ஞாயிறு - சூரியன். இதில், வெள்ளி
முதலிய நான்கு வாரங்களையும் ஒழுங்குபடுத்திக்கூறிய வியல்பு
காண்க. ஒள்ளிய - மேன்மையுடைய.

(28) அணி - ஆபரணம். தமனியம் - பொன். மாதர்துரைப்பெண்
ணே-பெண்ணரசியே. பேதைமை - அறியாமை. வரை - மலை. நரைத்த-
வெளுத்த.

வசந்தவல்லி திரிகூடநாதரைப் புகழ்ந்து பாங்கிக்குக் கூறுதல்.

இ-ம்-சௌராஷ்டிரம். ரூபகதாளம்.

கண்ணிகள்

(1) மன்னவர்குற் றாலர்செய்தி யின்னமின்னங்
கேளாயோ மானே அவர்
வாகனத்தின் மால்விடைக்கு லோகமொக்க
வேரடிகாண் மானே
சன்னிதியின் பேறல்லவோ பொன்னுலகிற்
றேவர்செல்வ மானே தினஞ்
சந்திரருஞ் சூரியரும் வந்திறங்கும்
வாசல்கண்டாய் மானே.

(2) நன்னகரி லீசருக்கு நான்றானே
ஆசைகொண்டேன் மானே பல
கன்னியரு மாசைகொண்டார் பன்னியரு
மாசைகொண்டார் மானே
தென்னிலங்கை வாழுமொரு கன்னிகைமண்
டோதரியாள் மானே அவர்
பொன்னடியிற் சேர்ந்தணைய என்னதவஞ்
செய்தாளோ மானே. (29)

---

(1) வாகனத்தின் - வாகனங்களுக்குள். மால்விடைக்கு-விஷ்ணுவாகிய இடபவாகனத்துக்கு. ஒக்க - முழுதும். பேறு - விசேடம். கண்டு பார்த்து. ஆய் - (அவரது பெருமையை) ஆராய்வாய்.

(2) பன்னியர் - (தாருகாவனத்து, ருஷி) பத்தினிகள். மண்டோதரி-இராவணன் மனைவி; இவள் பஞ்சகன்னியரிலொருத்தி. பொன்னடி-பொன்போலுந் திருவடி. மண்டோதரி பொன்னடியிற் சேர்ந்தணைந்த சரிதமாவது: பூருவமொருகாலத்தில் திருவுத்தரகோசமங்கையில் அநேக சிவனடியார்களுக்குச் சிவபிரான் சிவஞானபோதம் உபதேசித்துக்கொண்டிருக்கும்போது இலங்கையில் மண்டோதரி சிவபிரானை வரும்படி நினைத்தனள்; அதுதெரிந்த சிவபிரான் சிவனடியார்களை நோக்கித் தற்சமயம் மண்டோதரி யென்னை வரும்படி நினைக்கின்றாள். நான் போகாதிருந்தால் அக்கினியில் மூழ்கிவிடுவாள். நான் அங்கே போய்ச் சேர்ந்தவுடன் என்னுடைய பாதத்தை யவள் பரிசிக்கும்போது இந்தத் தீர்த்தத்தில் அக்கினியுண்டாமென்று சொல்லிச் சிவஞானபோதச் சுவடியை

## இதுவுமது, விருத்தம்.

வேரிலே பழம்பழுத்துத் தூரிலே சுளைவெடித்து வெடித்த தீந்தேன்
பாரிலே பாதாள கங்கைவந்த தெனக்குதித்துப் பசுந்தேன் கங்கை
*நீரிலே பெருகுகுறும் பலாவிலே கொலுவிருக்கு நிமல மூர்த்தி
பேரிலே பிரமைகொண்ட பெண்களிலே நானுமொரு பெண்கண்டாயே.

## பாங்கி வசந்தவல்லியை நியாயம் வினவுதல்

### விருத்தம்.

வசந்தவுல் லாச வல்லி வல்லிக்கு வல்லிபேசி
பசந்ததோர் பசப்புங் கண்டாய் பரமர்மே லாசை கொண்டாய்
நிசந்தருந் திருக்குற் றால நிரந்தர மூர்த்தி புணரா
விசைந்திடக் கரும மேதோ இசையநீ யிசைத்தி டாயே. (31)

## வசந்தவல்லி வருந்திக் கூறுதல்

இ-ம்—நாதநாமக்கிரியை. ஆதிதாளம்

### கண்ணிகள்.

(1) புரத்து நெருப்பை மூவர்க் கவித்தவர் மையல் கொண்டவெ
ன்னுருத்தி காம நெருப்பை யவிக்கிலார் (ன்

---

யொரு சிவனடியார் கையிற் கொடுத்துவிட்டு மண்டோதரி யிருப்பிடத்துக் கெழுந்தருளினர்; அவள் சிவபிரானை வணங்கிச் சுவாமீ யிதுவரை நீரெழுந்தருளத் தாமதித்ததற்கென்ன அபாரதஞ் செய்தேனென்று அவரது திருவடியைத் தீண்டி ஆலிங்கனஞ் செய்துகொண்டாளென்பது; மேலே கூறிய தீர்த்தந்தான் திருவுத்தரகோசமங்கையி லிப்போது அக்கினி தீர்த்தமென்று சொல்லப்பட்டது. இவை: திருவுத்தரகோசமங்கைப் புராணத்திற் கண்டவை.

(30) பாரிலே – பூமிமேலே. தேன்கங்கை நீரிலே பெருகு-சிவமது கங்கை நீரினிடத்து (வந்து) பெருகப்படுகின்ற. பிரமை-மயக்கம.

(31) வல்-வலிய. இக்கு - கரும்பின். வல்லி - அளவு. பேசி - பேசுதலுடையவளே. பசந்ததோர் பசப்பு - மிகுந்த பசலைநிறம். கண்டாய்-உண்டுபண்ணிக் கொண்டாய். நிரந்தரமூர்த்தி - சதாசிவன். இசைந்திட-பொருந்துதற்கு. கருமம் - நியாயம்.

(1) புரத்துநெருப்பை - திரிபுரத்தில் எரியுந் தீயை. மூவர்க்கு - சுதன்மன், சுசீலன், சுபுத்திஎன்னும் மூன்றசுரருக்கு; (இம்மூவரும் சிவபிரான் திருவாயிற்காவலராக இருக்கின்றனர்). அவித்தவர் -கெடுத்தவர்.

---

*நீரிலே சுளைபெருகு குறும்பலாக் கொலுவென்றும் பாடம்.

பருத்த மலையைக்கையி லிணைக்கினார் கொங்கை யான
பருவ மலையைக் கையி லிணைக்கிலார்.

(2) அஞ்சு தலைக்கு ளாறு தலைவைத்தார் எனது மனதில்
அஞ்சு தலைக்கொ ராறு தலைவையார்
நஞ்சு பருகி யமுதங் கொடுத்தவர் எனது வாள்விழி
நஞ்சு பருகி யமுதங் கொடுக்கிலார்.

(3) தேவர் துரைதன் சாபந் தீர்த்தவர் வன்ன மாங்குயிற்
சின்னத் துரைதன் சாபந் தீர்க்கிலார்
ஏவ ரும்புகழ் திருக்குற் றாலர்தாம் சகல பேர்க்கும்
இரங்கு வாரெனக் கிரங்கிலார் பெண்ணே. (32)

## பாங்கி வசந்தவல்லிக்குப் புத்தி கூறுதல்.

### விருத்தம்.

நன்னகர்த் திருக்குற் றால நாதர்மே லாசை பூண்டு
சொன்னவர்க் கிணங்க வார்த்தை சொலவும் படித்துக்கொண்
(டாய்

---

பருத்தமலை - மகாமேருமலை. இணைக்கினார் - வசப்படுத்திக்கொண்
(டார்.

(2) தலைக்குள்-தலையினிடத்து. ஆறு-கங்கைநதி. தலை-முதன்மை (யாக). அஞ்சுதலைக்கு-பயப்படுதலினிடத்து. ஆறுதலை-பயந்தணிதலை. அஞ்சுதலை யென்பதில், ஐ சாரியை. பருகி - (தாம்) உண்டு. அமுதங் கொடுத்தவர் - (தேவர்களுக்கு) அமிழ்தத்தைக் கொடுத்தவர் விழிநஞ்சு-கண்ணாகியவிடத்தை. பருகி - அங்கீகரித்து (தாற்பரியம்). அமுதம் — (அதரபானமாகிய) அமுதம். இதில், அஞ்சு ஆறு நஞ்சு அமுதம் என்னும் முரணலங்காரங் காண்க.

(3) தேவர்துரை-இந்திரன். சாபம்-தக்கன்யாகத்தில் முனிவரிட்ட சாபம். வன்னம்-நிறமுள்ள. மாங்குயிற் சின்னத்துரை-மாமரத்திலுள்ள குயிலாகிய எக்காளத்தையுடைய அரசனாகிய மன்மதன். சாபம் - கருப்பு வில்லை. தீர்க்கிலார்—ஒடிக்கின்றாரில்லை.

(33) சொன்னவர்க்கு - (நீ மயல்கொண்டது குற்றமென்று) கூறிய வர்களுக்கு. இணங்க — பொருத்தமாக.

சன்னிதி விசேஷஞ் சொல்லத் தக்கதோ மிக்க தோகாய்
என்னிலா னதுநான் சொன்னே னினியுன திச்சை தானே. (33)

வசந்தவல்லி பாங்கியைத் தூதனுப்புதல்.

இ-ம்-காம்போதி. ஆதிதாளம்.

பல்லவி.

தூதுநீ சொல்லி வாராய் பெண்ணே குற்றாலர் முன்போய்த்
தூதுநீ சொல்லி வாராய்.

அநுபல்லவி.

ஆதிநாட் சுந்தரர்க்குத் தூதுபோனவர் முன்னே (தூதுநீ)

சரணங்கள்.

(1) உறங்க உறக்கமும் வாராது மாயஞ் செய்தாரை
மறந்தால் மறக்கவுங் கூடாது பெண்செனம மென்று
பிறந்தாலும் பேராசை யாகா தலைத றிந்துஞ்
சலுகைக் காரர்க் காசை யானே னிப்பொழுதே. (தூதுநீ)

(2) நேற்றைக்கெல் லாங்குளிர்ந்து காட்டி யின்று கொதிக்கும்
நித்திரா பாவிக்கென்ன போட்டி நடுவே யிந்தக்
காற்றுக்கு வந்ததொரு கோட்டி விரக நோய்க்கு
மாற்று மருந்து முக்கண் மருந்தென்று பரஞ்சாட்டி.
(தூதுநீ)

(3) வந்தாலிந் நேரம்வரச் சொல்லு வராதி ருந்தால்
மாலையா கிலுந்தரச் சொல்லு குற்றால நாதர்

---

மிக்க - உயர்ந்த. தோகாய் - மயில்போலும் பெண்ணே. என்னில்—என்றால்.

(1) மாயம்-வஞ்சனை. சலுகைக்காரர்க்கு-பெருமையுடைய திரிகூடநாதரிடத்தில்.

(2) கொதிக்கும்-சுடும். நித்திராபாவி-உறக்கமாகிய பாவி. போட்டி-விரோதம். நடுவே-(இந்த நித்திரையின்) மத்தியில். காற்றுக்கு-தென்றலுக்கு. கோட்டி-குணக்கேடு. முக்கண்மருந்து -திரிநேத்திரபார்வையாகிய அமுதம். பரஞ்சாட்டி-பொறுப்புக்கட்டி; அஃதாவது: கடமை கூறுதல்.

தந்தாலென் னெஞ்சைத் தரச்சொல்லு தாரா திருந்தால்
தான்பெண்ணா கியபெண்ணை நான்விடே னென்று.
(தூது) (34)

வசந்தவல்லி திரிகூடநாதர்சமயத்தைப் பாங்கிக்குச் சொல்லுதல்.

விருத்தம்.

செவவேளை யீன்றருள்வார் சிலைவேளை வென்றருள்வார் திரும்பத் தாமே
யவவேளை யழைத்தருள்வா ரகங்கார மிகுதலா லறவ ரேவுங்
கைவேழ முரித்தவர்குற் றாலர்கொலு வமாருக்குங் காணொ ணாதால்
வெவவேளை பலவுமுண்டு வியல்வேளை நான்சொலக்கேள் மின்ன னாளே.

இ-ம்—பியாகடை. ஆதிதாளம்.

கண்ணிகள்

(1) திரிகூட ராசருக்குத் திருவனந்தல் முதலாகத்
தினமுமொன் பதுகாலங் கொலுவிற் சகியே.

(2) பெரிதான அபிஷேக மேழுகா லமுமொருவர்
பேசுதற்குச் சமயமல்ல கண்டாய் சகியே.

---

நெஞ்சு - மனம். தான் பெண்ணாகிய பெண்ணை - தான் ஆணாயிருந்து மோகினியாகிய அத்திரிகூடநாதரது மனைவியை; அஃதாவது: மோகினியாகிய பெண்மால் ஆதலால் அந்தமாலென்பது, சிலேடைவகையால் மாலென்பது இங்கே ஆசையெனக் கண்டுகொள்க.

(35) சிலை வேளை - கரும்புவில்லையுடைய மன்மதனை. அவ்வேளை- அந்த மன்மதனை. அழைத்து- [அருவமாக] வரவழைத்து. அறவர்-தாருகாவனத்து முனிவர். கைவேழம்-துதிக்கையுடைய யானை. காணொணாது- பார்க்க முடியாது. வெவ்வேளை - கொடிய வேளை; காலமல்லாத காலம். வியல்வேளை - விரிவான வேளை; கூட்டமில்லாத சமயம்.

(1) ஒன்பதுகாலம் - திருவனந்தல், உதயமார்த்தாண்டம், விபூரபூசை, சிறுகாலசந்தி, காலசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, அர்த்தசாமம், ஏகாந்தம்; இவற்றுள் முன்னைய ஆறும் பகற்காலம். பின்னைய மூன்றும் இராக்காலம்.

(2) ஏழுகாலம்: மேற்கூறியவற்றுள் திருவனந்தலும் ஏகாந்தமு மல்லாத காலங்கள். கண்டாய்-காண் என்னும் அசைச்சொல்லின் மரூஉ; இஃதன்றிப் பார்த்தறிந்துகொள்வாய் எனப் பொருள் கூறினும் பொருந்தும். தெரிந்திருக்கிறாய் என்பதுமாம்.

(3) வருநாளி லொருமூன்று திருநாளும் வசந்தனும்
மாதவழி வருஷவழிச் சிறப்புஞ் சகியே.

(4) ஒருநாளுக் கொருநாளில் வியனாகக் குழன்மொழிப்பெண்
உகந்திருக்குங் கொலுவேளை கண்டாய் சகியே.

(5) பெத்தரிக்க மிகுந்த திருக் குற்றால நாதலிங்கர்
பெருங்கொலுவிற் சமயமறி யாமற் சகியே.

(6) சித்தரொடு தேவகணஞ் சிவகணங்கள் தடைசெய்யத்
திருவாசற் கடைநிற்பார் சிலபேர் சகியே.

(7) அத்தலையிற் கடந்தவர்கள் நந்திபிரம் படிக்கொதுங்கி
ஆட்கொண்டார் குறட்டில்நிற்பார் சிலபேர் சகியே.

(8) மைக்கருங்கண் மாதர்விட்ட வண்டுகளுங் கிள்ளைகளும்
வாசல்தொறுங் காத்திருக்குங் கண்டாய் சகியே.

(9) கோலமகு டாகமசங் கரவிசுவ நாதனருள்
குற்றாலச் சிவராம நம்பிசெயுஞ் சகியே.

---

(3) வருநாளில் - வரப்பட்ட தினங்களுக்குள். மூன்று திருநாள் - பங்குனிமாதத்திருவிழா, புரட்டாசிமாதத் திருவிழா; மார்கழி மாதம் திருவாதிரைத் திருவிழா. வசந்தன்-சித்திரைமாதம் வசந்தோற்சவம். மாதவழிச்சிறப்பு-பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி. வருஷவழிச் சிறப்பு-கார்த்திகைமாதம் பவுத்திர உற்சவம், ஆடிமாதம் சோதி, சித்திரைச் சதயம், புரட்டாசி நவராத்திரி, வைகாசி மூலம், விசாகம்; தைப் பூசம் முதலிய விசேட பூசைகள்.

(4) வியனாக-அதிகமாக. உகந்து-மகிழ்ந்து.

(5) பெத்தரிக்கம்-கருவம்; அஃதாவது: தமக்குமே லொருவரில்லாமை.

(6) கடை - இடத்தில்.

(7) ஆட்கொண்டார் குறடு - திருநந்திதேவ ரிருப்பிடத்துக்குப் பக்கத்திலுள்ளது.

(8) விட்ட - (தூதாகச்) செலுத்திய. கிள்ளை - கிளி.

(9) மகுடாகமம்-சைவாகமமிருபத்தெட்டினொன்று; இவ்வாகமப் படியே திருக்குற்றாலத்து ஆலயமும் பூசையு மிருக்கின்றன. நம்பி-அருச்சகன்; பூசைசெய்வோன்.

(10) பாலாறு நெய்யாறா யபிஷேக நைவேத்யம்
பணிமாறு காலமுங்கொண் டருளிச் சகியே.

(11) நாலுமறைப் பழம்பாட்டு மூவர்சொன்ன திருப்பாட்டும்
நாலுகவிப் புலவர்புதுப் பாட்டுஞ் சகியே.

(12) நீலகண்டர் குற்றாலர் கொண்டருளு நிறைகொலுவில்
நீக்கமிலை யெல்லார்க்கும் பொதுக்காண் சகியே.

(13) அப்பொழுது குற்றாலர் தேவியுடன் கொலுவிருப்பார்
ஆசைசொலக் கூடாது கண்டாய் சகியே.

(14) முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் வந்துநின்று
முயற்சிசெயுந் திருவனந்தல் கூடிச் சகியே

(15) கொப்பழகு குழையடந்தை பள்ளியறை தனிலிருந்து
கோயில்புகு மேகாந்த சமயஞ் சகியே.

(16) மைப்பழகு விழியாயென் பெருமாலை நீசொல்லி
மருமாலை வாங்கியே வாராய் சகியே. (36)

## வசந்தவல்லி கூடலிழைத்தல்.

### கொச்சகம்.

தெண்ணீர் வடவருவித் தீர்த்தத்தார் செஞ்சடைமேல்
விண்ணீர் புனைந்தார் விரகவெம்மைக் காற்றமற்

---

(10) பணிமாறுகாலம்-அபிஷேக நைவேத்தியங்களை மாறிமாறிச் செய்யுங்காலம்.

(11) மறை - வேதம். மூவர் - திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவர். திருப்பாட்டு-தேவாரம்; பண்டைக்காலத்தில் தேவாரம் திருப்பாட்டென்றே வழங்கப்பட்டிருக்கிறது. நாலுகவி-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.

(12) நீக்கம் - விலக்கம்.

(14) முப்பொழுது - காலை, உச்சி, மாலையாகிய திரிகாலம்; மற்றைக்காலங்களெல்லாம் இம்மூன்றினுளடக்கம். திருமேனிதீண்டுவார்-ஆதி சைவப் பிராமணர். முயற்சி-தொழில்.

(15) குழை-காதையுடைய. ஏகாந்தசமயம் - தனிச்சமயம்.

(16) மைப்பழகு - மையினிடத்துப் பழகுகின்ற. மாலை-ஆசையை. மருமாலை-மணக்கின்ற (கொன்றை) மாலை. வாராய் - வருவாயாக.

(37) ஆற்றமல் - ஆற்றமாட்டாமல்; வருத்தமுற்று.

கண்ணீர் நறும்புனலாக் கைவளையே செய்கரையா
உண்ணீரிற் கூட லுரைக்கிணறு செய்வாளே. (37)

சிந்து.

இ-ம்—பந்துவராளி. தாளம்—திரிபுடை.

கண்ணிகள்.

(1) பாடியமறை தேடிய நாயகர் பன்னகர்பணி நன்னகர் நாயகர்
பாவலர்மனுக் காவலர் நாயகர் பதஞ்சலி பணிதாளர்

(2) கோடியமதி சூடிய நாயகர் குழல்மொழிபுணா ரழகிய நாயகர்
குறும்ப லாவினிற் கூடுவ ராமெனிற் கூடலேநீ கூடாய்

(3) கஞ்சனை முகில்மஞ்சனை நொடித்தவர் காமனைச் சிறு
(சோமனை முடித்தவர்
காரணமறை யாரணம் படித்தவர் கருதிய பெருமானூர்

நறும் - நல்ல. வளையே-வளையலே. செய்கரையா - செய்யப்பட்ட கரையாக. உண்ணீரில் - உள்ளே யிருக்கும் (காமக்) குணத்தால். கூடல்- கூடலிழைத்தலால். கூடலிழைத்தலாவது: விகாரங்கொண்ட பெண்கள் பூமியில் மணலைப் பரப்பிக் கண்களை மூடிக்கொண்டு தம்முடைய நான்கு விரல்களையுமடக்கிச் சுட்டுவிரலால் வட்டமாகக் கீறிக், கீறும்போது ஊன்றிய இடத்தில் சுட்டுவிரல் நுனிவந்து பொருந்தியதாவென்று பார்த்தல். அங்ஙனம் பொருந்துவது, நாயகன் வருவானென்பதற்கும் பொருந்தாதது, வரமாட்டானென்பதற்கும் அறிந்துகொள்ளும் குறி. உரைக்கிணறு- உரையடுக்கி வட்டமாகக் கட்டப்பட்ட கிணறு. இங்கே வசந்தவல்லி செய்த உரைக்கிணறாவது: மணலில் வட்டமாகக் கீறும்போது கைவளையல்கள் ஒன்றின்மேலொன்று வீழ்ந்து கரையாக அக்கரை நடுவினில் கண்ணீர் வீழ்ந்து நல்ல தண்ணீராகப் பெருகச் செய்தது.

(1) பன்னகர்-பாதாளவுலகத்தார். நன்னகர்-திருக்குற்றாலம். மநுக் காவலர் — மனுநீதியையுடைய அரசர். பதஞ்சலி — ஒருமுனிவர்.

(2) கோடிய-வளைந்த. கூடுவராமெனில் - சேர்வாரானால். கூடலே- கூடற்குறியே. கூடாய் - மேற்கூறியபடி ஒன்றுசேர்வாயாக. ஒன்றுசேர்தலாவது: மேலேகூறியபடி யல்லாமல் இரண்டு கையையும் தரையிலே பதித்து முகங்கவிழ்ந்து பார்த்துக்கொண்டிருந்தால் இரண்டுகையுஞ் சிறிது சிறிதாக நெருங்கிவந்து பொருந்துத லென்பாருமுளர்; எனவே, கூடற்குறி யிரண்டுவிதமாதல் காண்க.

(3) கஞ்சனை - பிரமனை. முகில்மஞ்சனை -மேகம்போலுங் கரிய அழகுடைய இராவணனை. நொடித்தவர் - அழித்தவர்; அழித்தலாவது: பிரமன் தலை யொன்றைக் கிள்ளுதலும், இராவணன் றலை பத்தையும் பூமியிலேயழுத்தி வருத்துதலுமாம். காமனை - மன்மதனை. சோமனை-சந்திரனை. முடித்தவர் - அழித்தவர், தரித்தவர். மறையாரணம் - மறையாகிய வேதம். படித்தவர் — பூமியிலுள்ள முனிவர்.

(4) குஞ்சரமுதற் பூசித்த நாயகர் குறுமுனிதமிழ் நேசித்த நாயகர்
குறும்ப லாவினிற் கூடுவ ராமெனிற் கூடலேநீ கூடாய். (38)

## குறிசொல்லுங் குறத்தி வருதல்.

### விருத்தம்.

ஆடல்வளை வீதியிலே யங்கணார்முன் போட்டசங்க மாங்கு வீட்டில்
தேடல்வளைக்குங் குறிபோற் கூடல்வளைத்திருந்துவல்லியியங்கும்போதிற்
கூடல்வளைக் காமசைய மாத்திரைக்கோ லேந்திமணிக் கூடை தாங்கி
மாடமறு கூடுதிரி கூடமலைக் குறவஞ்சி வருகின் றாளே. [39]

### இதுவுமது. ஆசிரியப்பா.

சைவமுத் திரையை வானின்மேற் றரிக்குந்
தெய்வமுத் தலைசேர் திரிகூட மலையான்
வான்புனல் குதட்டு மடக்குரு கினுக்குத்
தேன்புரை யேறுஞ் சித்திரா நதியான்
ஏரிநீர் செழிக்க வாரிநீர் கொழிக்கு
மாரிநீர் வளர்தென் னாரிய நாட்டான்
கன்னிமாப் பழுத்துக் கதலிதேன் கொழித்துச்
செந்நெல்காத் தளிக்கு நன்னகர்ப் பதியான்
ஓரா யிரமறை யோங்கிய பரியான்
ஈரா யிரமருப் பேந்திய யானையான்

---

[4] குஞ்சரமுதல் - ஆனைமுதலிய மிருகம் பறவைகள்.

[39] ஆடல்-வெற்றி. வளைவீதி-சங்கவீதி. போட்டசங்கம் - கீழே தவறவிட்ட வளையல்களை. தேடல்-தேடுதற்காக. வளைக்குங் குறிபோல்-வளைவுசெய்யப்படும் அடையாளம்போல. கூடல் வளைத்து-கூடற்குறியை வட்டமாகச்செய்து. வல்லி-வசந்தவல்லி. கூடல்-சேர்தலையுடைய: மாடம்-மாளிகைகளையுடைய. மறுகூடு-வீதியின் நடுவிலே. குறவஞ்சி-குறச் சாதிப்பெண்.

[40] 1–5 சைவமுத்திரை-சூலக்குறி. தெய்வம்-தெய்வத்தன்மை. மடக்குருகு-இளநாரை. தேன்புரையேறுஞ் சித்திராநதியென்றது, தேனருவி சித்திராநதியிற் கலந்துவருதலா லென்க. ஏரி-குளம். வாரிநீர் - கடற்சலத்தை. கொழிக்கும்–[கொண்டுவந்து] கொட்டும்.

6–10. மாரிநீர்-மேகத்தின் குணம். கன்னிமா-இளமாமரம். ஓங்கிய மறைப்பரியானெனக்கூட்டுக. மறைப்பரி-வேதக்குதிரை. மருப்பு-கொம்பு யானை-அயிராவணமாகிய யானை.

சேவக விருது செயவிடைக் கொடியான்
மூவகை முரசு முழங்குமண் டபத்தான்
அண்டகோ டிகளை யாணையா லடக்கிக்
கொண்டல்போற் கவிக்குங் கொற்றவெண் குடையான்
வாலசுந் தரிகுழல் வாய்மொழி யருட்கட்
கோலவண் டிணங்குங் கொன்றைமா லிகையான்
பூவளர் செண்பகக் காவளர் தம்பிரான்
தேவர்கள் தம்பிரான் றிருவருள் பாடி
யிலகுநீ றணிந்து திலகமு மெழுதிக்
குலமணிப் பாசியுங் குன்றியும் புனைந்து
சலவைசேர் மருங்கிற் சாத்தியகூடையும்
வலதுகைப் பிடித்த மாத்திரைக் கோலு
மொழிக்கொரு பசப்பு முலைக்கொரு குலுக்கும்
விழிக்கொரு சிமிட்டும் வெளிக்கொரு பகட்டுமா
யுருவசி யரம்பை கருவமு மடங்கச்
சமனிக்கு முறையாற் சபையெலா மடங்கக்
கொட்டிய வுடுக்குகோ டாங்கிக் குறிமுதன
மட்டிலாக் குறிகளுங் கட்டுமு லடக்கிக்
கொங்கண மாரியங் குச்சலர் தேசமுங்
செங்கைமாத் திரைக்கோற் செங்கோல் நடாத்திக்
கன்னடந் தெலுங்கு கலிங்கராச் சியமுந்
தென்னவர் தமிழாற் செயத்தம்ப நாட்டி
மன்னவர் தமக்கு வலதுகை நோக்கி

---

12–14. மூவகை முரசு-படைமுரசு, கொடை முரசு, விவாகமுரசு. கவிக்கும்-உள்ளடக்கிக்காக்கும்.

16–20. இணங்கும்-பொருந்தும். தம்பிரான்-திரிகூடநாதர். திலகமுமெழுதி-பொட்டுமிட்டு. குலம்- [தன்] குலத்துக்குரிய.

21–23. சலவை-வெளுப்புச்சேலை. மொழிக்கு-பேச்சுக்கு. பசப்பு-சாரம், நயம்.

26–28, சமனிக்கும்-சமப்படுத்திப்பேசும். கட்டு-ஒருவகைக்குறி.

[30] மாத்திரைக்கோற் செங்கோல்-மாத்திரைக்கோலாகிய செங்கோல்.

யின்னகை மடவார்க் கிடுதுகை பார்த்துக்
(35) காலமுன் போங்குறி கைப்பல னுங்குறி
மேலினி வருங்குறி வேண்டுவார் மனக்குறி
மெய்க்குறி கைக்குறி விழிக்குறி மொழிக்குறி
யெக்குறி யாயினு மிமைப்பினி லுரைக்கு
மைக்குறி விழிக்குற வஞ்சிவந் தனளே. (40)

இதுவுமது.

விருத்தம்.

சிலைநுதலிற் கஸ்தூரித் திலதமிட்டு நறுங்குழலிற் செச்சை சூடிக்
கொலைமதர்க்கண்மையெழுதிமாத்திரைக்கோல்வாங்கிமணிக்கூடை தாங்கி
முலைமுகத்திற் குன்றிமணி வடம்பூண்டு திரிகூட முதல்வர் சாரல்
மலைதனிற்பொன் வஞ்சிகுற வஞ்சியப ரஞ்சிகொஞ்சி வருகின் றாளே. (41)

இதுவுமது.

இ-ம்—தோடி. தாளம்—சாப்பு.

பல்லவி

வஞ்சி வந்தனளே மலைக்குற வஞ்சி வந்தனளே.

அநுபல்லவி.

வஞ்சி யெழிலப ரஞ்சி வரிவிழி நஞ்சி முழுமற நெஞ்சி பரவினி
லஞ்சசடைமுடிவிஞ்சையமலனைநெஞ்சில்நினைவொடுமிஞ்சகுறிசொல —
வஞ்சிவந்தனளே மலைக்குற வஞ்சிவந்தனளே.

---

[41] நறும்-நல்ல. செச்சை—வெட்சிப்பூ; அது குறிஞ்சிநிலப்பூ. வாங்கி—கொண்டு. பொன்-அழகு. அபரஞ்சி-உருக்கியோடவிட்ட பொன் போன்றவள்.

[42] விழிநஞ்சி - கண்ணாகிய நஞ்சுடையவள். மறநெஞ்சி - வீர மனமுடையவள். விஞ்சை - அறிவுருவாகிய. மிஞ்சகுறி - அதிகக்குறி.

சரணங்கள்.

(1) மும்மையுல கெங்கும் வெல்லக் கொம்மைமுலை யார்க்குநல்ல
செம்மையாக்கு றிகள்சொல்ல அம்மேயம்மேயென்று
செல்ல (வஞ்சி)

(2) சோலையில் வசந்த காலம் வாலகோ கிலம்வந் தாற்போற்
கோலமலை வில்லியார்குற் றாலமலை வாழுங்குற (வஞ்சி)

(3) மாத்திரைக்கோலது துன்னச் சாத்திரக்கண் பார்வை
பன்னத்
தோத்திரவடிவமின்னப்பூத்தமலர்க்கொடியென்ன (வஞ்சி)

## வசந்தவல்லி குறத்தியைக்கண்டு மலைவளங் கேட்குதல்.

விருத்தம்.

அந்தரதுந் துபிமுழங்கு நன்னகர்க்குற் றாலலிங்க ரருளைப் பாடி
வந்தகுற வஞ்சிதனை வசந்தவல்லி கண்டுமன மகிழ்ச்சி கொண்டு
சந்தமுலைத் துவளுமிடைத்தவளநகைப்பவளவிதழ்த்தையலேயுன்
சொந்தமலை யெந்தமலை யந்தமலை வளமெனக்குச் சொல்லென்
றாளே. (43)

## குறத்தி மலைவளங் கூறுதல்.

இ-ம்-புன்னாகவராளி; ஆதிதாளம்,

கண்ணிகள்.

(1) வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

---

[1] மும்மை-மூன்று. கொம்மை-இளமை. செல்லவஞ்சி-அருமையுடைய வஞ்சிக்கொடிபோன்றவள்.

[2] கோகிலம்-குயில்.

[3] துன்ன-நெருங்க, கண்சாத்திரப்பார்வைபன்ன எனக்கூட்டுக. சாத்திரப்பார்வை-குறிபார்க்கும் பார்வையை. பன்ன-தேர்ந்துவர.

[43] துந்துபி-தேவவாத்தியம். துவளும்-அசையும். தவளம்-வெண்மை

[1] மந்தி-பெண்குரங்கு, வான்கவிகள்-வானுலகத்திலுள்ள புலவர்கள்

(2) கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்

(3) தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்

(4) கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

(5) முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண்
(டோடும்

(6) கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடப்போம்
கிம்புரியின் கொம்பொடித்துவெம்புதினையிடிப்போம்

(7) செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்

(8) வழங்குகொடை மகராசர் குறும்பலாவீ சர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே.

(9) ஆடுமர வீனுமணி கோடிவெயி லெறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்

(10) வேடுவர்கள் தினைவிதைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தையகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்

---

(2) கானவர்கள் - வேடர்கள். விழியெறிந்து - கண்பார்வையைச் செலுத்தி. கவன சித்தர் - ஆகாயமார்க்கம் நடக்குஞ்சித்தர். காயசித்தி- சரீரம் மருந்துகளினாற் பலமாயிருக்குஞ் செயல்.

(3) பரிக்கால்-குதிரைக்கால்.

(4) கூனல்-வளைவு. வேணி-சடை.

(5) கழங்கென-கழற்சிக்காயென்று. முத்தாடும்-முத்தையெறிந்து விளையாடும். (இதுவன்றியும்) சிற்றிலை-சிறுவீட்டை.

(6) கிம்புரியின்-பூண்களையுடைய. கொம்பு-யானைத்தந்தம்.

(7) வெடிக்கும்-தூரஞ்சென்று மணக்கும்.

(8) வழங்கு-கொடுக்கின்ற.

(9) அம்புலி-சந்திரன். கவளம் - யானையினுணவாகிய உண்டை. தும்பி-யானை.

(10) விந்தை-ஆச்சரியம். நாறும்-மணக்கும்.

(11) காடுதொறு மோடிவரை யாடுகுதி பாயுங்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்

(12) நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்குந் திரிகூட மலையெங்கள் மலையே.

(13) கயிலைமெனும் வடமலைக்குத் தெற்குமலை யம்மே
கனகமகா மேருவென நிற்குமலை யம்மே

(14) சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை யம்மே
சகலமலை யுந்தனக்கு ளடக்குமலை யம்மே

(15) வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை யம்மே
வானிரவி முழைகடொறு நுழையுமலை யம்மே

(16) துயிலுமவர் விழிப்பாகி யகிலமெங்குந் தேடுந்
துங்கர்திரி கூடமலை யெங்கள்மலை யம்மே.

(17) கொல்லிமலை யெனக்கிளைய செல்லிமலை யம்மே.
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை யம்மே

(18) யெல்லுலவும் விந்தைமலை யெந்தமலை யம்மே
யிமயமலை யென்னுடைய தமயன்மலை யம்மே

(19) சொல்லரிய சாமிமலை மாமிமலை யம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை யம்மே

(20) செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்க ளாடுந்
திரிகூட மலையெங்கள் செல்வமலை யம்மே.

(21) ஒருகுலத்திற் பெண்கள்கொடோம் ஒருகுலத்திற்
கொள்ளோம்
உறவுபிடித் தாலும்விடோங் குறவர்குலம் நாங்கள்

---

(11) வரையாடு-மலையாடு. காகம் அணுகா-காகமும் பறவாத; மிக உன்னதமானதென்றபடி; மேலும் அதுவே. நிரை-வரிசை.

(14) சயிலமலை-சிவசயிலமலை. தென்மலை-பொதியமலை. அடக்கும்-அடக்கிவைத்துக்கொள்ளும்.

(15) முழை-குகை.

(16) துயிலுமவர்-அறிதுயில் செய்பவராகிய விஷ்ணு. அகிலம் — உலகம்.

(17) கொழுநன்-எப்பொருட்கு மிறைவனாகிய குமாரக்கடவுள்.

(18) எல் - பிரகாசம்.

(20) செல்லினம்-மேகக்கூட்டங்கள். முழவுகொட்ட - மிருதங்கம் போலொலிக்க.

(22) வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில்மறைத்தபாங்குதனைக்குறித்தே த

(23) அருளிலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்
ஆதினத்து மலைகளெல்லாஞ் சீதனமாக் கொடுத்தோம்

(24) பரிதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக்கொடுத்தோம்
பரமர்திரி கூடமலை பழயமலை யம்மே. (44)

## வசந்தவல்லிகுறத்தியினது நாட்டுவளமும் நகர்வளமும்வினவுதல்.

### விருத்தம்.

கோட்டுவள முலைகாட்டுங் கொடியின்வள மிடைகாட்டுங் குறிஞ்சி பூத்த
காட்டுவளங் குழல்காட்டு மலைவளந்தா னீயுரைத்துக் காட்டு வானேன்
தோட்டுவளம் புரிகாதர் குற்றால மலைவளருந் தோகை யேயுன்
னாட்டுவள மெனக்குரைத்துக் குற்றாலத் தலவளமு நவிலு வாயே. (45)

### குறத்தி நாட்டுவளங் கூறுதல்.

இ-ம்—கேதாரகௌளம். தாளம்-சாப்பு.

### கண்ணிகள்.

(1) சூர மாங்குயிற் சின்னங்கள் காமத்
துரைவந் தான்றுரை வந்தானென் றூத
ஆர மாமுலை மின்னா ரவரவ
ரல்குற் றேர்க ளலங்காரஞ் செய்யப்

---

(22) வெருவி-(நாங்கள்) பயந்து. பெருமிருகம்-யானையை. வேங்கையாய்-வேங்கைமரமாகி. பாங்கு-(உதவியாகிய) அழகு. யானையை விலக்கிவேங்கைமரமாய் நின்ற சரித்திரம் கந்தபுராணத்தில் விரிவாகக்காண்க

(23) ஆதினம்=ஆதீனம் - [எங்கள்] இடம்.

(24) பரிதி மதி சூழ்மலை - சூரிய சந்திரர்கள் சூழ்ந்துவரப்பட்ட மகா மேருமலை. துருவன்-துருவசக்கரத்தையுடைய அரசன்; இவன் உத்தானபாதமகாராஜன் புத்திரன்.

[45] கோட்டுவளம்-யானைக்கொம்பினது அழகு. குறிஞ்சிபூத்த காட்டுவளங் குழல் காட்டும் என்றது-குறிஞ்சிநிலத்திற்பூத்த பூக்களெல்லாங் கூந்தலி லணிந்திருக்கிறாளென்பது. தோட்டுவளம் - [காதுக்] குழையினழகை. புரி-செய்கின்ற.

[1] சூரம்-வீரம். ஆரம்—முத்துமாலை. அல்குற்றேர்க ளலங்காரஞ் செய்யவென்றது -மேகலாபரணந்தரித்தலை.

பார மாமதி வெண்குடை மிஞ்சப்
பறக்குங் கிள்ளைப் பரிகள்முன் கொஞ்சத்
தேரின் மாரன் வசந்த னுலாவுந்
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே.

(2) காரைச் சேர்ந்த குழலார்க்கு நாணிக்
கடலைச் சேர்ந்த கறுப்பான மேகம்
வாரைச் சேர்ந்த முலைக்கிணை யாகு
மலையைச் சேர்ந்து சிலையொன்று வாங்கி
நீரைச் சேர்ந்த மழைத்தாரை யம்பொடு
நீளக் கொண்டலங் தேரேறி வெய்யவன்
தேரைச் சூழ்ந்திடக் கார்காலம் வெல்லுந்
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே.

(3) சூழ மேதி யிறங்குந் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற் றாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போற்
றாழை சோறிட வாழை குறித்திடுஞ்
சந்த்ர சூடர்தென் னாரிய நாடே.

(4) அந்த லார்மொழி தன்னைப் பழித்ததென்
றாடவர் மண்ணில் மூடுங் கரும்பு
துன்னி மீள வளர்ந்து மடந்தையர்
தோளை வென்று சுடர்முத்த மீன்று.

---

மிஞ்ச-மேற்பட்டுவிளங்க; [தாற்பரியம்]. கொஞ்ச-கொஞ்சிப்பேச. மாரன் வசந்தன்-மன்மதனுகிய வசந்தன்.

(2) காரை -கருநிறத்தை. சிலை - இந்திரதநுசு. வாங்கி - வளைத்து. நீரை-குணத்தை. அமபு - நீர்; [பாணம்]. கொண்டல் - கீழ்காற்றுகிய.

[3] மேதி-எருமை. துறை-நீர்த்துறை. வாளை—வாளைமீன், வாசக் கூழைப்பலா எனக்கூட்டுக. கூழைப்பலா-ஒருவகைப் பலாமரம். தாக்க - மோத. தாழை - தாழம்பூ, சோறிட - சோறுபோல மகரந்தப் பொடியை யிறைக்க.

[4] அந்தலார் - அழகியபெண்கள். துன்னி - நெருங்கி. தோளை - கையை.

பின்னு மாங்கவர் முரலை வென்று
பிரியுங் காலத்திற் பெண்மையை வெல்லக்
கன்னல் வேளுக்கு வில்லாக வோங்குங்
கடவு ளாரிய நாடெங்கள் நாடே.

(5) தக்க பூமிக்கு முன்புள்ள நாடு
சகல தேவர்க்கு மன்புள்ள நாடு
திக்கெ லாம்வளர்ந் தோங்கிய நாடு
சிவத்து ரோகமு நீங்கிய நாடு
முக்க ணான்விளை யாடிய நாடு
முதிய நான்மறை பாடிய நாடு
மைக்க ணாள்குழல் வாய்மொழி பாகர்
வசந்த வாரிய நாடெங்கள் நாடே.

(6) அஞ்சு நூறு மகங்கொண்ட நாடு
அநேக கோடி யுகங்கண்ட நாடு
கஞ்ச யோனி யுதிக்கின்ற நாடு
கமலை வாணி துதிக்கின்ற நாடு
செஞ்சொல் மாமுனி யேகிய நாடு
செங்கண் மால்சிவ னாகிய நாடு
வஞ்சி பாகர் திரிகூட நாதர்
வசந்த வாரிய நாடெங்கள் நாடே.

(7) மாத மூன்று மழையுள்ள நாடு
வருஷ மூன்று விளைவுள்ள நாடு
வேத மூன்றும் பலாவுள்ள நாடு
விசேஷ மூன்றுங் குலாவுள்ள நாடு

---

முரலை-பல்லை. பிரியும்-[நாயகனை] நீங்கும். பெண்மையை வெல்ல-பெண்தன்மையைக் கெடுக்க; பெண்தன்மை கெடுதலாவது: முற்றும அழகு நலனழிந்து வருந்தி யிருத்தல். கன்னல்-கற்கின்ற நல்ல. கடவுள்-தெய்வத்தன்மை.

[5] விளையாடிய - திருநடனஞ் செய்த. முதிய-பழைய. வளர்ந்து-[எல்லா வளமும்] விருத்தியாகி. வசந்தம் - தென்றல்.

[6] அஞ்சுநூறு மகம்- [அகத்தியர் செய்த] ஐந்நூறு யாகம்; தி. பு. குறுமுனி வழிபடுசருக்கம் 243-ம் கவியிற் காண்க. கஞ்சயோனி-பிரமன். ஏகிய - வந்த; [தாற்பரியம்.]

[7] பலா—பலாமரமாக. விசேஷமூன்று - நித்தியம், நைமித்தியம், காமியமாகிய பூசைகள். குலாவு - விளங்குதல்.

போத மூன்று நலஞ்செயு நாடு
புவன மூன்றும் வலஞ்செயு நாடு
நாத மூன்றுரு வானகுற் றால
நாத ராரிய நாடெங்கள் நாடே

(8) நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து
வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை
வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை
யேங்கக் காண்பது மங்கல பேரிகை
யீச ராரிய நாடெங்கள நாடே.

(9) ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்கு
வருந்தக் காண்பது சூலுளை சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறங் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே. (46)

## வசந்தவல்லிக்குக் குறத்தி தலமகிமை கூறுதல்.

### விருத்தம்.

அரிகூட அயன்கூட மறைகூடத் தினந்தேட அரிதாய் நின்ற
திரிகூடப் பதியிருக்குந் திருநாட்டு வளமுரைக்கத் தெவிட்டா தம்மே

---

போதம்-ஞானம். ஊன்று-பதியும். நாதம்-சிவதத்துவம். மூன்றுரு-பிரமா, விஷ்ணு, சிவபிரான் வடிவம்.

(8) கன்னலில் - கரும்பினிடத்து. சுழல - சுழற்சியடைய. வெடிக்க-மலர. கொல்லை - முல்லைநிலம். ஏங்க - ஒலிக்க.

(9) மருங்கு - இடை. சூலுளை - கருவுயிர்க்கும் பருவத்தையுடைய. புலம்ப - ஒலிக்க. கிண்கிணிக்கொத்து - சதங்கைக்கூட்டம். அறங்கீர்த்தி-தருமத்தால் வந்த புகழ்.

(47) அரிகூட - விஷ்ணுவுடன். அரிதாய்நின்ற - அருமையுடையதாயிருந்த. தெவிட்டாத-போதுமென்று சொல்ல முடியாது.

கரிகூடப் பிடிதிரியுஞ் சாரலிலே யொருவேடன் கைவில் லேந்தி
நரிகூடக் கயிலைசென்ற திரிகூடத் தலமகிமை நவிலக் கேளே. [47]

இ-ம்-பிலகரி. தாளம்-ஜம்பை.

கண்ணிகள்.

(1) ஞானிகளு மறியார்கள் சித்ரநதி மூலம்
நானறிந்த வகைசிறிது பேசக்கேள் அம்மே

(2) மேன்மை பெறுந் திரிகூடத் தேனருவித் துறைக்கே
மேவுமொரு சிவலிங்கந் தேவரகசியமாய்

(3) ஆன துறை யயனுரைத்த தானமறி யாமல்
அருந்தவத்துக் காய்த்தேடி திரிந்தலையுங் காலம்

(4) மோனவா னவர்க்கெங்கள் கானவர்கள் காட்டு
முதுகங்கை யாறுசிவ மதுகங்கை யாறே.

(5) சிவமதுகங் கையின்மகிமை புவனமெங்கும் புகழுஞ்
செண்பகா டவித்துறையின் பண்புசொல்லக் கேளாய்

(6) தவமுனிவர் கூட்டரவும் அவரிருக்குங் குகையுஞ்
சஞ்சீவி முதலான விஞ்சைமூ லிகையும்

(7) கவனசித்த ராதியரும் மவுனயோ கியருங்
கத்திருக்குங் கயிலாயம் ஒத்திருக்கும் அம்மே

---

கரிகூட-யானையோடு. சாரல்-மலைப்பக்கம். வேடன் நரிகூடக் கயிலை சென்ற சரிதம்; தி-புராணம், வேடன் வலம்வந்த சருக்கத்திற் காண்க.

[1] மூலம் - காரணம். அம்மே-தாயே; மேல்வருவனவு மது.

[2] துறைக்கே - துறையினிடத்தே.

[3] துறை- (அந்தத்) துறை. தானம்-இடம். அறியாமல் (அதைத்) தெரியாமல். தவத்துக்காய் - தவஞ்செய்தற்காக.

(4) மோனம் - சாத்வீக குணத்தையுடைய. கானவர்கள்-வேடர்கள். முது - பழைய.

(5) செண்பகாடவித்துறை-சிவமதுகங்கையிலுள்ள ஸ்நானஞ் செய்யும் ஒரு இடம்.

(6) கூட்டரவு-கூட்டம். விஞ்சைமூலிகை-மந்திரசத்தியைத் தரும் பச்சிலை.

(7) கவனசித்தர் - ஆகாயமார்க்கஞ் செல்லும் ஞானிகள். கத்து - முழங்குகின்ற. இருக்கும்-வேதமும். இருத்தலால் என ஒருசொல் வருவித்து முடித்துக்கொள்க. ஒதது ஒப்ப என்னும் பொருளில் வந்தது.

(8) நவநிதியும் விளையுமிடம் அவிடமது கடந்தால்
நங்கைமார் குரவையொலிப் பொங்குமா கடலே.

(9) பொங்குகடல் திரிவேணி சங்கமெனச் செழிக்கும்
பொருந்துசித்ரநதித்துறைகள்பொன்னுமுத்துங்கொழிக்கும்

(10) கங்கையெனும் வடவருவி தங்குமிந்தர சாபங்
கலந்தாடிற் கழுநீராய்த் தொலைந்தோடும் பாபம்

(11) சங்கவீதியிற்பரந்து சங்கினங்கள் மேயுந்
தழைத்தமதிட் சிகரமெங்குங் கொழுத்தகயல் பாயும்

(12) கொங்கலர்சேண் பகச்சோலைக் குறும்பலாவீசர்
குற்றாலத் திரிகூடத் தலமெங்கள் தலமே.

(13) மன்றுதனிற் றெய்வமுரசென்றுமேல் முழங்கும்
வளமைபெறுஞ் சதுரயுகங் கிழமைபோல் வழங்கும்

(14) நின்றுமத கரிபூசை யன்றுசெய்த தலமே
நிந்தனைசெய் புட்பகந்தன் வந்தனைசெய் தலமே

(15) பன்றியொடு வேடன்வலஞ் சென்றதிந்தத் தலமே
பற்றுகப் பரமருறை குற்றாலத் தலமே

---

(8) குரவை-பெருமுழக்கத்தையுடைய. பொங்குமாகடல்-ஒரு தீர்த்[தம்.

(9) திரிவேணிசங்கம்-காசியிலுள்ள ஒரு தீர்த்தம்; கங்கை, யமுனை, சரசுவதி நதிகள் கூடுமிடம்.

(10) வடவருவி தங்குமிந்த்ரசாபம் என்பது வடவருவியிலே மூழ்கு வார் கண்ணுக்கு, அவ்வருவியில் இந்திரதநுசுப்போலப் பலநிறங் காட்டும் ஒளி. கழுநீராய் - அரிசி கழுவிய சலம்போலச் சிவந்து.

(11) மதிட்சிகரம் - திருமதிலினுச்சி.

(12) கொங்கு அலர் - வாசனைவிரிந்த.

(13) மன்று - சித்திரசபை. தெய்வமுரசு - ஆகாயத்தில் முழங்குந் தேவவாச்சியம். சதுரயுகம்-நான்கு யுகங்களும். கிழமைபோல் வழங்கும்-[நான்கு] தினம்போலச் செல்லும்; எனவே மிக நீண்டகாலத்துக்கு முற்பட்டது என்றபடி.

(14) புட்பகந்தன் - பாண்டியநாட்டுக் கொற்கைநகரத்துக் குசல னென்னும் பிராமணன்; தி. பு புட்பகந்தச்சருக்கம் பார்க்க.

(16) வென்றிபெறுந் தேவர்களுங் குன்றமாய் மரமாய்
மிருகமதாய்த் தவசிருக்கும் பெரியதலம் அம்மே. (48)

## வசந்தவல்லி திரிகூடநாதர்சுற்றம் வினவுதல்.

விருத்தம்.

தீர்த்தவிசே டமுந்தலத்தின் சிறந்தவிசேடமுமுரைத்தாய்திருக்குற்றால
மூர்த்திவிசே டந்தனையு மொழிதோறு நீயுரைத்த முறையாற்கண்டேன்
வார்த்தைவிசே டங்கள்கற்ற மலைக்குறவஞ் சிக்கொடியே வருக்கைவாசர்
கீர்த்திவிசே டம்பெரிய கிளைவிசே டத்தையினிக் கிளத்துவாயே. (49)

## குறத்தி திரிகூடநாதர் கிளைவிசேடங் கூறுதல்.

இ-ம்—முகாரி. ஏகதாளம்.

கண்ணிகள்.

(1) குற்றாலர் கிளைவளத்தைக் கூறக்கேள் அம்மே
குலம்பார்க்கிற் றேவரினும் பெரியகுலங் கண்டாய்
(2) பெற்றதாய் தந்தைதனை யுற்றுநீ கேட்கிற்
பெண்கொடுத்த மலையரசன் றனைக்கேட்கவேணும்
(3) உற்றதொரு பனிமலையின் கொற்றவேந் தனுக்கும்
உயர்மதுரை மாறனுக்குஞ் செயமருகர் கண்டாய்
(4) வெற்றிபெறும் பாற்கடலிற் புற்றரவி லுறங்கும்
வித்தகர்க்குக் கண்ணான மைத்துனர்காண் அம்மே.
(5) ஆனைவா கனத்தானை வானுலகி லிருத்தும்
ஆகுவா கனத்தார்க்குந் தோகைவா கனர்க்கும்

---

(16) குன்றம், மரம், மிருகம ஆய்த் தவசிருக்குங் கதை, தி. புரா ணம் தேவர்கள் சிவத்துரோகந்தீர்ந்த சருக்கத்திலே தெரிந்து கொள்க.

(49) மொழிதோறும்-சொல்லுந்தோறும். முறை-கிரமம். வருக்கை வாசர்-பலாமரத்தடியில் வசிக்குந் திரிகூடநாதர். கிளை-சுற்றம்.

(3) மாறன் - பாண்டியன் மருகர் - மருமகனார்.

(4) புற்று அரவு - புற்றிலேவசிக்கும் [ஆதிசேடனாகிய] பாம்பு. வித் தகர் - நன்மையுடையவராகிய விஷ்ணு.

(5) ஆனைவாகனத்தானை- (வெள்ளை) யானையை வாகனமாகவுடைய இந்திரனை. இருத்தும் - இருக்கச்செய்யும். ஆகு-பெருச்சாளி. தோகை- மயில்.

(6) தானையாற் றந்தைகா லெறிந்தமக னார்க்குந்
தருகாழி மகனார்க்குந் தகப்பனார் கண்டாய்
(7) சேனைமக பதிவாச லானைபெறும் பிடிக்குந்
தேனீன்ற மலைச்சாரல் மானீன்ற கொடிக்கும்
(8) கானமலர் மேலிருக்கு மோனவய னார்க்குங்
காமனார் தமக்குமிவர் மாமனார் அம்மே.
(9) பொன்னுலகத் தேவருக்கு மண்ணுலகத் தவர்க்கும்
பூதலத்தின் முனிவருக்கும் பாதலத்து ளார்க்கும்
(10) அன்னவடி வெடுத்தவர்க்கு மேனவுரு வார்க்கும்
அல்லார்க்கு முன்னுதித்த செல்வர்காண் அம்மே
(11) முன்னுதித்து வந்தவரைத் தமையனென வுரைப்பார்
மொழிந்தாலு மொழியலாம் பழுதில்லைகாண் அம்மே
(12) நன்னகரிற் குற்றால நாதர்கிளை வளத்தை
நானுரைப்ப தரிதுலகந் தானுரைக்கும் அம்மே. (50)

## வசந்தவல்லி குறத்தியைக் குறியின்விசேடம் வினவுதல்.

### விருத்தம்.

நீர்வளர் பவள மேனி நிமலர்குற் றால நாதர்
கூர்வளம் பாடியாடுங் குறவஞ்சிக் கொடியே கேளாய்
கார்வளர் குழலார்க்கெல்லாங் கருதிநீ விருந்தாச் சொல்லுஞ்
சீர்வளர் குறியின் மார்க்கந் தெரியவே செப்புவாயே. (51)

---

(6) தானை-ஆயுதம். மகனார்-சண்டேசுரர். காழிமகனார்-திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். கானம - [வண்டுகளின்] இராகத்தையுடைய. காமன் - மன்மதன்.

(7) மகபதி - இந்திரன் சாரல் - மலைப்பக்கம்.

(8) கான — வாசனையுடைய.

(10) ஏனம்-பன்றி, அல்லார்க்கும்- [அவர்] அல்லாத மற்றையோர்க்கும்.

(51) நீர் - கடற்சலத்தில். நிமலர்-மலமில்லாதவராகிய. கூர்-மிக்க. விருந்தா - புதிதாக.

## குறத்தி குறியின்விசேடங் கூறுதல்.

இ-ம்-தோடி. ஆதிதாளம்.

### பல்லவி.

வித்தார மென்குறி யம்மே—மணி
முத்தாரம் பூணு முகிழ்முலைப் பெண்ணே
வித்தார மென்குறி யம்மே.

### சரணங்கள்.

(1) வஞ்சி மலைநாடு கொச்சி கொங்கு
மக்க மராடந் துலுக்காண மெச்சி
செஞ்சி வடகாசி நீளம் சீனம்
சிங்களம் ஈழம் கொழும்புவங் காளம்
சந்தை திராப்பள்ளிக் கோட்டை தமிழ்ச்
சங்க மதுரைதென் மங்கலப் பேட்டை
மிஞ்சக் குறிசொல்லிப் பேராய்த் திசை
வென்றுநான் பெற்ற விருதுகள் பாராய் (வித்தாரம்)

(2) நன்னகர்க் குற்றாலந் தன்னில் மங்கும்
நாட்டுமெண் ணூற்றெண்பத் தேழாண்டு தன்னில்
பன்னக மாமுனி போற்றத் தமிழ்ப்
பாண்டிய னார்முதற் சிற்றேடு மேய்ந்த
தென்றருஞ் சித்ர சபையை யெங்கள்
சின்னணஞ் சாத்தேவன் செப்போடு பேய்ந்த
முன்னாளி லேகுறி சொல்லிப் பெற்ற
மோகன மாலைபார் மோகன வல்லி. (வித்தாரம்)

(3) அன்பாய் வடகுணை பாலிற் கொல்லத்
தாண்டொரு நானூற் றிருபத்து நாலில்
தென்காசி யாலய மோங்கக் குறி
செண்பக மாறற்குச் சொன்னவோர் நாங்கள்

---

வித்தாரம் - பெரியது. முகிழ் - தாமரையரும்புபோலும்.

(1) மெச்சி - கொண்டாடப்பெற்று. மிஞ்சகுறி - அதிகக்குறி. பேராய்ப்பெற்ற எனக் கூட்டுக. பேராய்-பெரிதாக.

(2) பன்னகமாமுனி - பதஞ்சலியாகிய பெரிய முனிவர். முதல்-ஆதியில். தென் - அழகு.

(3) வடகுணபால் - வடகிழக்கெல்லையில். மாறன் - பாண்டியன்.

நன்பாண்டி ராச்சிய முய்யச் சொக்க
நாயகர் வந்து மணக்கோலஞ் செய்ய
இன்பா மதுரை மீனாட்சி குறி
யெங்களைக் கேட்டதுஞ் சங்கத்தார் சாட்சி.
(வித்தாரம்)

## வசந்தவல்லி குறி கேட்குதல்.

### விருத்தம்.

கலவிக்கு விழிவாள் கொண்டு காமனைச் சிங்கி கொள்வாய்
குலவித்தை குறியே யானுற் குறவஞ்சி குறைவைப் பாயோ
பலவுக்குட் கனியாய் நின்ற பரமர்குற் றாலர் நாட்டில்
இலவுக்குஞ் சிவந்த வாயா லெனக்கொரு குறிசொல் வாயே (53)

## குறத்தி குறி சொல்லுதல்.

இ—ம்—அடாணா. ஆதிதாளம்.

### கண்ணிகள்.

(1) என்னகுறி யாகிலுநான் சொல்லுவேனம்மே சதுர்
ரேறவே யெதிர்த்தபேரை வெல்லுவேனம்மே
(2) மன்னவர்கள் மெச்சுகுற வஞ்சிநானம்மே யென்றன்
வயிற்றுக்கித் தனைபோதுங் கஞ்சிவாரம்மே
(3) பின்னமின்றிக் கூழெனினுங் கொண்டுவா அம்மே வந்தால்
பெரிய குடிக்கைமுட்ட மண்டுவேனம்மே

---

ராச்சியம் - உலகம். கேட்டதும் - கேட்டதற்கும். சங்கத்தார்-சங்கப் புலவர்.

(53) கலவிக்கு-புணர்ச்சிக்கு. விழிவாள்கொண்டு-கண்ணாகிய வாளால் சிங்கி-குறத்தியே. காமனைக் கொள்வாயெனக் கூட்டுக. காமனைக் கொள் வாய் - மன்மதனையும் வசப்படுத்துவாய். இலவுக்கும்-இலவமலரைப் பார்க் கிலும்.

(1) சதுர் - சபை; [ஆகுபெயர்].

(2) இத்தனை - இவ்வளவு; ஒரு சிற்றளவு.

(3) பின்னம் - வேறுபாடு. முட்ட - நிறைய. மண்டுவேன் - மிகக் குடிப்பேன்.

(4) தின்னவிலை யும்பிளவு மள்ளித்தா அம்மே கப்பற்
சீனச்சரக் குத்துக்கிணி கிள்ளித்தா அம்மே.

(5) அம்மேயம்மே சொல்லவாராய் வெள்ளைச்சியம்மே யுனக்
காக்கம் வருகுதுபார் வெள்ளைச்சியம்மே

(6) விம்முமுலைக் கன்னிசொன்ன பேச்சுநன்றம்மே நேரே
மேல்புறத்தி லாந்தையிட்ட வீச்சுநன்றம்மே

(7) தும்மலுங்கா கமுமிடஞ் சொல்லுதேயம்மே சரஞ்
சூட்சமாகப் பூரணத்தை வெல்லுதேயம்மே

(8) செம்மையிது நன்னிமித்தங் கண்டபோரம்மே திரி
கூடமலைத் தெய்வமுனக் குண்டுகாணம்மே. (54)

## இதுவுமது விருத்தம்.

பல்லியும் பலப லென்னப் பகருது திரிகூ டத்திற்
கல்விமான் சிவப்பின் மிக்கான் கழுத்தின்மேற் கறுப்பு முள்ளா
நல்லமேற் குலத்தா னிந்த நன்னகர்த் தலத்தா னுக (ன்
வல்லியே யுனக்கு நல்ல மாப்பிள்ளை வருவானம்மே. (55)

---

(4) இலை - வெற்றிலை - பிளவு - வெட்டுப்பாக்கு. கப்பல் - கப்பலி லிருந்து வந்த. சீனச்சரக்கு-சீனதேசத்துப்புகையிலை. சரக்கு-ஆகுபெயர் துக்கிணி-சிற்றளவு.

(5) வருகுது - வருகின்றதன் மரூஉமொழி; இது போன்ற பல சொற்கள் நாடகத்தமிழாதலால் ஒவ்வோரிடங்களில் அந்தந்தச்சாதியார் பேசுதல் போலவே இந்நூலாசிரியர் கூறியிருத்த லறிந்துகொள்க.

(6) விம்மு-பருக்கக்கூடிய. இட்ட வீச்சு-ஒலித்தஒலி.

(7) இடம்-இடதுபக்கத்தில். சொல்லுது-ஒலிக்கின்றது; [தாற் பரியம்]. சொல்லுது என்பதனைத் தும்மலுக்கும் காகத்துக்கும் தனித் தனி பயனிலையாக்குக; சரம்-சுவாசநடை. சூட்சம் - கண்ணுக்குப்புலப் படாமை. பூரணத்தை-எல்லாவற்றையும். வெல்லுது - வெற்றிக்கொள் கின்றது; இது சரநூல் படித்தவர்க்குப் புலப்படும்.

(8) நிமித்தம் - சகுனம்.

(55) பகருது-முழங்குது; [தாற்பரியம்]. கறுப்பு- [விஷத்தின்] கறுப்பு. வல்லியே-வசந்தவல்லியே.

## இதுவுமது.

ஸ்ரீ ராகம். அடதாளம் சாப்பு.

### கண்ணிகள்.

(1) தரைமெழுகு கோலமிடு முறைபெறவே கணபதியை யம்மே குடந்
தாங்காய்முப் பழம்படைப்பாய் தேங்காயு முடைத்துவைப்பா யம்மே

(2) அறுகுபுனல் விளக்கிடுவா அடைக்காய்வெள் ளிலைகொடுவா அம்மே வடை
யப்பமவல் வர்க்கவகை சர்க்கரையோ டெட்பொரிவை யம்மே

(3) நிறைநாழி யளந்துவைப்பா யிறையோனைக் கரங்குவிப்பா யம்மே குறி
நிலவரத்தைத் தேர்ந்துகொள்வாய் குலதெய்வத்தை நேர்ந்துகொள்வா யம்மே

(4) குறிசொல்லவா குறிசொல்லவா பிறைநுதலே குறிசொல்ல (வா அம்மே ஐயர்
குறும்பலவர் திருவுளத்தாற் பெரும்பலனுங் குறிசொல்ல அம்மே. (56) வா

## இதுவுமது. கட்டளைக்கலித்துறை.

ஆனேறுஞ் செல்வர் திரிகூட நாதரணிநகர்வாழ்
மானே வசந்தப் பசுங்கொடி யேவந்த வேளைநன்றே
தானே யிருந்த தலமுநன் றேசெழுந் தாமரைபோற்
கானேறுங் கைம்மலர் காட்டாய் மனக்குறி காட்டுதற்கே. ()

---

[1] குடந்தாங்காய்-[பூர்ண]கலசந்தாங்குவாயாக. முப்பழம்-வாழை பழம், மாம்பழம், பலாப்பழம்.

[2] இடு - கொண்டுவந்துவைப்பாய். அடைக்காய்-பாக்கு. வெள்ளிலை-வெற்றிலை. வர்க்கவகை-பலபிரிவுகளின் பண்டம்.

[3] நிலவரத்தை-நிச்சயத்தை. நேர்ந்து-பிரார்த்தித்து.

[4] பிறைநுதலே - பிறைச்சந்திரன்போன்ற நெற்றியையுடைய. வசந்தவல்லியே.

[57] ஆன்-இடபவாகனம். அணி-அழகுடைய. வேளை—சமயம். தலம்-இடம். கான்-வாசனை. காட்டாய்-காண்பிப்பாய்.

இ-ம்—கல்யாணி. தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

(1) முத்திரைமோதிரமிட்ட கையைக்காட்டா யம்மே
முன்கை முதாரியிட்ட கையைக்காட்டாய்
(2) அத்தகட கம்புனைந்த கையைக்காட்டாய் பொன்னின்
அலங்கார நெளியிட்ட கையைக்காட்டாய்
(3) சித்திரச்சூ டகமிட்ட கையைக்காட்டாய் பசுஞ்
செங்கமலச் சங்க ரேகைக் கையைக்காட்டாய்
(4) சத்திபீ டத்திறைவர் நன்னகர்க்குளே வந்த
சஞ்சீவி யேயுனது கையைக்காட்டாய். (58)

கவிக்கூற்று.

கொச்சகக்கலிப்பா.

ஏழைபங்கர் செங்கைமழு வேற்றவர்குற் றாலர்வெற்பில்
வாழிகொண்ட மோக வசந்தவல்லி கைபார்த்து
வீழிகொண்ட செங்கனிவாய் மிக்ககுற வஞ்சிபழங்
கூழையுண்ட வாயாற் குறியைவிண்டு சொல்வாளே. (59)

இ-ம்—பைரவி. ரூபகதாளம்.

கண்ணிகள்.

(1) மாறாம லிருநிலத்தி லறம்வளர்க்குங் கையே
மனையறத்தா லறம்பெருக்கித் திறம்வளர்க்குங்கையே

---

[1] முதாரி-முன்கையிலணியப்பட்ட ஒருவித வளையல்.

[2] அத்தகடகம்-பொற்கங்கணம்.

[3] சித்திரம்-அழகு. சூடகம்-ஒருவகைக்காப்பு. ரேகை என்பதனைக் கமலமென்பதனோடுங் கூட்டுக. கமலரேகை-பத்மரேகை.

[4] சஞ்சீவி-உயிர்பிழைப்பிக்கும் ஒரு மூலிகைமருந்து.

[59] ஏழைபங்கர்-மாதுபாகர். வாழி-வாழ்த்து. வீழி-கொவ்வைப் பழம். கொண்ட-(உவமையாகப்)பெற்ற. விண்டு-விரித்து.

[1] மாறாமல்-நீங்காமல். திறம்-உறுதிப்பொருள், மோக்ஷமாகிய செல்வம்.

(2) வீறாக நவநிதியும் விளையுமிந்தக் கையே
மேன்மேலும் பாலமுதம் அளையுமிந்தக் கையே

(3) ஆறாத சனங்கள்பசி யாற்றுமிந்தக் கையே
அணங்கனையார்வணங்கிநித்தம் போற்றுமிந்தக்கையே

(4) பேறாக நன்னகரங் காக்குமிந்தக் கையே
பிறவாத நெறியார்க்கே யேற்குமிந்தக் கையே. (60)

## குறத்தி தெய்வவணக்கஞ்செய்தல்.

### விருத்தம்.

கைக்குறி பார்க்கி லிந்தக் கைப்பிடிப் பவர்தா மெட்டுத்
திக்குமே யுடைய ராவர் செகமக ராசி நீயே
யிக்குறி பொய்யா தென்றே யிறையவர் திரிகூடத்தில்
மெய்க்குற வஞ்சி தெய்வம் வியப்புற வணங்கு வாளே.(61)

### ஆசிரியப்பா.

குழல்மொழி யிடத்தார் குறும்பலா வுடையார்
அழகுசந் நிதிவா ழம்பல விநாயகா
செந்தில்வாழ் முருகா செங்கண்மால் மருகா
கந்தனே யிலஞ்சிக் கடவுளே சரணம்

(5) புள்ளிமா னீன்ற பூவையே குறக்குல
வள்ளிநா யகியே வந்தெனக் குதவாய்
அப்பனே மேலை வாசலி லரசே
செப்பரு மலைமேற் றெய்வகன் னியர்காள்
ஆரியங் காவா அருட்சொரி முத்தே

(2) வீறு-பெருமை. விளையும்-விளையப்படும். அளையும்-கலக்கும்.

(3) ஆறாத - நீங்காத. போற்றும் - போற்றப்படும்.

(4) பேறு -பிரயோசனம். பிறவாதநெறியார் - திரிகூடநாதர்.

(61) உடையர்-உடையவர், (ஆடையாகவுள்ளவர்.) வியப்பு-மகிழ்ச்சி.

(62) 3. செந்தில் - திருச்செந்தூர். 5. பூவை - நாகணவாய்ப்பறவை போல்பவளாகிய. 7. அப்பனே-ஐயனாரே. 9. ஆரியங்கா-ஒருதலம்.

நேரிய குளத்தூர் நின்றசே வகனே
கோலமா காளி குற்றால நங்காய்
கால வைரவா கனதுடிக் கறுப்பா
முன்னடி முருகா வன்னிய ராயா
மன்னிய புலிபோல் வரும்பன்றி மாடா
எக்கலா தேவி துர்க்கை பிடாரி
மிக்கதோர் குறிக்கா வேண்டினே னுங்களை
வந்துமுன் னிருந்து வசந்தமோ கினிப்பெண்
சிந்தையில் நினைந்தது சேலோ தாதுவோ
சலவையோ பட்டோ தவசதா னியமோ
கலவையோ புழுகோ களபகஸ் தூரியோ
வட்டிலோ செம்போ வயிரமோ முத்தோ
கட்டிலோ மெத்தையோ சட்டி வராகனோ
வைப்பொடு செப்போ வரத்தொடு செலவோ
கைப்படு திரவியங் களவுபோ னதுவோ
மறுவிலாப் பெண்மையில் வருந்திட்டி தோஷமோ
திரிகண்ண ரானவர் செய்தகைம் மயக்கமோ
மன்னர்தா மிவள்மேல் மயல்சொல்லி விட்டதோ
கன்னிதா னொருவர்மேற் காமித்த குறியோ
சேலையும் வளையுஞ் சிந்தின தியக்கமோ
மாலையு மணமும் வரப்பெறுங் குறியோ
இத்தனை குறிகளி லிவள்குறி யிதுவென
வைத்ததோர் குறியை வகுத்தருள்வீரே. (62)

---

10. நேரிய - ஒழுங்குள்ள.
14. மன்னிய - நிலைபெற்ற.
18. தாதுவோ - பொன்னோ.
19. சலவை - வெள்ளிய புடவை.
20. கலவை - கூட்டுச்சந்தனம். களபம் - மணம்.
23. வைப்பு - புதையல்.
25. பெண்மையில் - பெண்ணழகின் றன்மையால்.
26. திரிகண்ணர் - மூன்றுகண்களையுடைய திரிகூடநாதர். கைம் மயக்கம் - சிறுமயக்கம்.
28. காமித்த - ஆசைப்பட்ட.
32. வகுத்து - பிரித்து. அருள்வீர் - சொல்லுவீராக.

### விருத்தம்.

கடித்திடு மரவம் பூண்ட கர்த்தர்குற் றாலர் நேசம்
பிடிக்குது கருத்து நன்றாய்ப் பேசுது சக்க தேவி
துடிக்குதென் னுதடு நாவுஞ் சொல்லுசொல் லெனவே வாயி
லிடிக்குது குறளி யம்மே யினிக்குறி சொல்லக் கேளே. (63)

இ—ம்—பிலகரி. தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

(1) சொல்லக்கே ளாய்குறி சொல்லக்கேளா யம்மே
தோகையர்க் கரசேகுறி சொல்லக்கேளாய்

(2) முல்லைப்பூங் குழலாளே நன்னகரில்வாழ் முத்து
மோகனப் பசுங்கிளியே சொல்லக்கேளாய்

(3) பல்லக்கே றுந்தெருவி லானைநடத்தி மணிப்
பணியா பரணம்பூண்ட பார்த்திபன்வந்தான்

(4) செல்லப்பூங் கோதையேநீ பந்தடிக்கையில் அவன்
சேனைகண்ட வெருட்சிபோற் காணுதேயம்மே. (64)

## வசந்தவல்லி குறத்தி சொன்னதைத் தடுத்து வினவுதல்.

கண்ணிகள்.

(1) நன்றுநன்று குறவஞ்சி நாடகக்காரி யிந்த
நாட்டானபேர்க் கானவார்த்தை நானறியேனோ

(2) ஒன்றுபோ டாமற்குறி சொல்லிவந்தாய் பின்னை
யுழப்பிப்போட் டாய்குறியைக் குழப்பிப்போட்டாய்.

---

(63) நேசம் - அன்பு. குறளி — ஒருபிசாசு.

(1) தோகையர்க்கு - மயில்போலும் பெண்களுக்கு.

(2) முத்துமோகனம் - முத்துக்கோத்த ஒரு மாலை.

(3) ஆனை - இடபவாகனத்தை. பணி - பாம்பு. பார்த்திபன்-அரசன்.

(4) செல்லம் - அருமையாகிய. வெருட்சி - பயம்.

(1) நன்றுநன்று - நல்லதுநல்லது; இஃது, இகழ்ச்சிக் குறிப்பு. நாட்டானபேர்க்கு - நாட்டிலுண்டானவர்களுக்கு. ஆனவார்த்தை-ஆகிய பேச்சு; அஃதாவது: பெண்களைக் குறைகூறுதல்.

(2) போடாமல் - விடாமல். பின்னை - பின்பு.

(3) மன்றல்வருஞ் சேனைதனைக் கண்டுபயந்தால் இந்த
மையலுங் கிறுகிறுப்புந் தையலர்க்குண்டோ
(4) இன்றுவரை மேற்குளிருங் காய்ச்சலுமுண் டோபின்னை
யெந்தவகை யென்றுகுறி கண்டுசொல்லடி. (65)

## குறத்தி சொல்லுதல்.

### கண்ணிகள்.

(1) வாகனத்தி லேறிவரும் யோகபுருடன் அவன்
வங்காரப் பவனியாசைப் பெண்களுக்குள்ளே
(2) தோகைநீ யவனைக்கண்டு மோகித்தாயம்மே யது
சொல்லப் பயந்திருந்தேன் சொல்லுவேன்முன்னே
(3) காகமணு காதகிரி கூடமலைக்கே யுன்மேற்
காய்ச்சலல்ல காய்ச்சலல்ல காமக்காய்ச்சல்காண்
(4) மோகினியே யுன்னுடைய கிறுகிறுப்பெல்லாம் அவன்
மோகக்கிறு கிறுப்படி மோகனக்கள்ளி. (66)

## வசந்தவல்லி கோபித்துப்பேசுதல்.

### கண்ணிகள்.

(1) கன்னியென்று நானிருக்க நன்னகர்க்குளே யென்னைக்
காமியென்றாய் குறவஞ்சி வாய்மதியாமல்
(2) சன்னையாகச் சொன்னகுறி சாதிப்பாயானால் அவன்
தாருஞ்சொல்லிப் பேருஞ்சொல்லி யூருஞ்சொல்லடி.

---

(3) மன்றல் - நெடுந்தெருவில்.

(4) பின்னை - வேறே, [தாற்பரியம்].

(1) வாகனத்தில் [இடப] வாகனத்தில். வங்காரப்பவனி - ஒழுங்குடைய திருவுலா.

(2) தோகை-மயில்போல்பவளே. மோகித்தாய் - ஆசைப்பட்டாய்.

(3) காகம் அணுகாத-காக்கையும் பறவாத. மலைக்கே-மலையினிடத்தே.

(4) மோகனக்கள்ளி - காமக்களவுடையவளே.

(1) காமி – ஒருவனையாசைப்பட்டவள்.

(2) சன்னை - சாடை. தார் - மாலை.

## குறத்தி சொல்லுதல்.

### கண்ணிகள்.

(3) உன்னைப்போ லெனக்கவ னறிமுகமோ அம்மே
ஊரும்பேருஞ் சொல்லுவதுங் குறிமுகமோ

(4) பின்னையுந்தா னுனக்காகச் சொல்லுவேனம்மே யவன்
பெண்சேர வல்லவன்காண் பெண்சக்கரசே. (67)

## வசந்தவல்லி சொல்லுதல்.

### கண்ணிகள்.

(1) வண்மையோ வாய்மதமோ வித்தைமதமோ என்முன்
மதியாமற் பெண்சேர வல்லவனென்றாய்

(2) கண்மயக்கால் மயக்காதே யுண்மைசொல்லடி பெருங்
கானமலைக் குறவஞ்சி கள்ளிமயிலி.

## குறத்தி சொல்லுதல்.

### கண்ணிகள்.

(3) பெண்ணரசே பெண்ணென்றால் திரியுமோக்கும் ஒரு
பெண்ணுடனே சேரவென்றாற் கூடவுமோக்கும்

(4) திண்ணமாக வல்லவ னு நாதனுமோக்கும் பேரைத்
திரிகூட நாதனென்று செப்பலாமம்மே. (68)

## கவிக்கூற்று.

### கண்ணிகள்.

(1) மன்னர்திரி கூடநாத ரென்னும்போதிலே முகம்
மாணிக்க வசந்தவல்லி நாணிக்கவிழ்ந்தாள்.

---

(3) அறிமுகம்-பழக்கம். குறிமுகமோ-குறிசொல்லும் இலக்கணமோ.

(4) பெண்சேர வல்லவன் - பெண்களைக் கூடுவதற்கு வலிமையுள்ளவன்; இதற்கு வேறுபொருள் அடுத்தபாட்டில் 3, 4-கண்ணிகளிற் காண்க-

(1) வண்மை - (உன்) வலிமைத்தன்மை.

(2) கண்மயக்கு - கண்ணால் மயக்கஞ்செய்யும் பார்வை. கானம்-காடுகளையுடைய. மயிலி - உள்ளத்தை மறைத்துப் பேசுகிறவள்.

(1) மாணிக்கம் - மாணிக்க ரத்நாபரணமணிந்த.

## குறத்தி சொல்லுதல்.

(2) நன்னகரி லீசருன்னை மேவவருவார் இந்த
நாணமெல்லா நாளைநாளுங் காணவேபோறேன்
(3) கைந்நொடியிற் பொன்னிதழி மாலைவருங்காண் இனிக்
கக்கத்தி லிடுக்குவாயோ வெட்கத்தையம்மே
(4) எனுமொரு குறவஞ்சி தன்னையழைத்தே யவட்
கீட்டுசரு வாபரணம் பூட்டினளே, (69)

## சிங்கன் சிங்கியாகிய குறத்தியைத் தேடிவருதல்.

### விருத்தம்.

பாமாலைத் திரிகூடப் பரமருள் பெறுவசந்தப் பாவை கூந்தல்
பூமாலை யிதழிபெறப் பொன்மாலை மணிமாலை பொலிவாய்ப் பூண்டு
நாமாலைக் குறவஞ்சி நன்னகர்ப்பட் டணமுழுது நடக்கு நாளில்
மாமாலைப் பூண்டசிங்கன் வங்கணச்சிங் கியைத்தேடி வருகின் றானே.(70)

### இதுவுமது.

வக்காவின் மணிபூண்டு கொக்கிறகு சிகைமுடித்து வரித்தோர் கச்சை
தொக்காக வரிந்திறுக்கித் தொடர்பலியைக் கண்டுறுக்கித் தூணிதூக்கிக்
கைக்கான வாயுதங்கள் கொண்டுசில்லிக்கோலெடுத்துக் கண்ணிசேர்த்துத்
திக்கடங்காக் குளுவசிங்கன் குற்றாலத் திரிகூடச் சிங்கன் வந்தான். (71)

---

(2) நன்னகரிலீசர்-திருக்குற்றாலத்திலிருக்கும் திரிகூடநாதர்.

(3) பொன் இதழி - பொன்போன்ற கொன்றை.

(4) ஈட்டு - சம்பாதிக்கப்பட்ட.

(70) இதழிப்பூமாலையெனக்கூட்டுக. நாமாலை - நாவா லொழுங்காகக் கூறி சொல்லுகின்ற. குறவஞ்சி - குறத்தி. மாமாலை - பெரிய ஆசையை. சிங்கன் - [அக்குறத்தியின் கணவனாகிய] குறவன். வங்கணச்சிங்கியை - மிகுந்த அன்புடைய சிங்கியாகிய அக்குறத்தியை.

(71) வக்காவின்மணி - ஒருவகைமணி. சிகை - குடுமி. வரி - நீண்ட. தொக்காக-வாய்ப்பாக [தாற்பரியம்]. உறுக்கி-கோபித்து. தூணிதூக்கி-அம்பறாத்தூணியைத் தொங்கவிட்டுக்கட்டி. சில்லிக்கோல் - ஒருவகைச் சிறுகம்பு. குளுவசிங்கன்-குளுவனாகிய சிங்கன்; குளுவனென்பது குறவர் சாதியிற் பிறந்தவனுக்கு ஒரு பெயர். சிங்கனென்பதுவும் அதுவே.

வக்காவின் மணிசூடி வகைக்காரி சிங்கிவரும் வழியைத் தேடி
மிக்கான புலிகாடி இடுகிடென நடுநடுங்க வெறித்து நோக்கிக்
கக்காவென் றோலமிடுங் குருவிகொக்குக் கேற்றகண்ணி கையில் வாங்கித்
தொக்கான நடைநடந்து திரிகூட மலைக்குறவன் றோன்றி னானே. (72)

இராகம்-அடாணா. தாளம்-சாப்பு.

கண்ணி.

கொக்கிறகு சூடிக்கொண்டு குருவிவேட்டை யாடிக்கொண்டு
வக்காமணி பூட்டிக்கொண்டு மடவார்கண்போ லீட்டிக்கொண்டு
தொக்காக் கச்சை யிறுக்கிக்கொண்டு துள்ளுமீசை முறுக்கிக்கொண்டு
திக்கடங்காக் குளுவசிங்கன் திரிகூடச் சிங்கன் வந்தான். (73)

சிங்கன் தன் வலிமை கூறுதல்.

விருத்தம்.

ஆளிபோற் பாய்ந்தசுரும் பிசைகேட்குந் திரிகூடத் தமலர் நாட்டில்
வேளைதொறும் புகுந்து திருவிளையாட்டங் கண்ணிகுத்தி வேட்டை யாடி
ஞாளிபோற் சுவடெடுத்துப் பூனைபோ லொளிபோட்டு நரிபோற் பம்மிக்
கூளிபோற் றொடர்ந்தடிக்குந் திரிகூடச் சிங்கனெனுங் குளுவ னானே.
(74)

இ—ம்—தன்னியாசி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

(1) தேவருக் கரியார் மூவரிற் பெரியார்
சித்திர சபையார் சித்திர நதிசூழ்
கோவிலிற் புறவிற் காவினி லடங்காக்
குருவிகள் படுக்குங் குளுவனு நானே.

---

[72] வகைக்காரி-பலவகையான குணமுடையவளாகிய. வெறித்து-கோபித்து. ஓலம் — சத்தம்.

[73] ஈட்டி — ஓராயுதம்.

[74] ஆளி-சிங்கம். சுரும்பு-வண்டு. வேளை-காலம். திருவிளையாட்டம்-சிறந்த விளைநிலங்களில். கண்ணிகுத்தி-கண்ணிகளைப்பதித்து. ஞாளி-நாய். சுவடெடுத்து - தடங்கண்டுபிடித்து. ஒளிபோட்டு-பதுங்கியிருந்து. பம்மி - ஒடுங்கி. கூளி - பேய்.

[1] அரியார் - அருமையுள்ளவர். மூவரில் - திருமூர்த்திகளுக்குள். புறவு - குறிஞ்சிநிலம். கா - சோலை. படுக்கும் - பிடிக்கும்.

(2) காதலஞ் செழுத்தார் போதநீ றணியார்
கைந்நரம் பெடுத்துக் கின்னரந் தொடுத்துப்
பாதகர் தோலாற் பலதவி லடித்துப்
பறவைகள் படுக்குங் குறவனு நானே.

(3) தலைதனிற் பிறையார் பலவினி லுறைவார்
தகையினை வணங்கார் சிகைதனைப் பிடித்தே
பலமயிர் நறுக்கிச் சிலகண்ணி முறுக்கிப்
பறவைகள் படுக்குங் குளுவனு நானே.

*(4) ஒருகுழை சங்கம் ஒருகுழை தங்கம்
உரியவி நோதர் திரிகூட நாதர்
திருநாமம் போற்றித் திருநீறு சாற்றுந்
திரிகூட நாமச் சிங்கனு நானே. (75)

## நூவன் வருதல்.

### விருத்தம்.

புலியொடு புலியைத் தாக்கிப் போர்மத யானை சாய்க்கும்
வலியவர் திரிகூ டத்தில் மதப்புலிச் சிங்கன் முன்னே
கலிகளுங் கதையும் பேசிக் கையிலே யீட்டி வாங்கி
யெலிகளைத் துரத்தும் வீர னீப்புலி நூவன் வந்தான். (76)

---

(2) காதல் - ஆசை. போதநீறு-ஞானந்தரும் விபூதி. கின்னரம்-ஒருவகையாழில். தோலால்-தோலாற் (செய்த).

(3) தகை - பெருமை. சிகை - குடுமி.

(4) குழை-குண்டலம். உரிய-உடைய (தாற்பரியம்). விநோதர்-மகத்துவமுடையவர். திரிகூடநாமம்-திரிகூடமென்னும் பெயரையுடைய

(76) புலியொடு - [தாருகாவனத்து ருஷிகள்விட்ட] புலியுடனே. புலியை - [தக்கன்யாகத்தில் வந்திருந்த] சந்திரனை. புலி - அம்புலியின் முதற்குறை. தாக்கி-மோதி. மதப்புலி-வலிய புலிபோலும். கலி-வஞ்சகப் பேச்சு. ஈட்டி-ஓராயுதம். ஈப்புலிநூவன்-ஈப்புலிபோலப்பாயும்நூவன். ஈப்புலி-ஒரு சிறிய செந்து. நூவன் - குறவர்களுக்குள் தோழமையுடையவன்; பாங்கன். மேல்வருவனவு மது.

இ-ம்-அடாணா. தாளம்-சாப்பு.

**கண்ணிகள்.**

(1) ஊர்க் குருவிக்குக் கண்ணியுங் கொண்டு
உள்ளானும் வலியானு மெண்ணிக் கொண்டு
மார்க்கமெல் லாம்பல பண்ணிக் கொண்டு
கோட்கார நூவனும் வந்தானே.

(2) கரிக்குருவிக்குக் கண்ணியுங் கொண்டு
காணுங் கோழிக்குப் பொரியுங் கொண்டு
வரிச்சிலைக் குளுவரிற் கவண்டன் மல்லன்
வாய்ப்பான நூவனும் வந்தானே.

(3) ஏகனை நாகனைக் கூவிக் கொண்டு
ஏலியனைப் புலியனை யேவிக் கொண்டு
வாகான சிங்கனை மேவிக் கொண்டு
வங்கார நூவனும் வந்தானே.

(4) கொட்டகைத் தூண்போற் காலி லங்க
ஒட்டகம் போலே மேலி லங்கக்
கட்டான திரிகூடச் சிங்கன் முன்னே
மட்டீவாய் நூவனும் வந்தானே. (77)

## சிங்கன் பட்சிகளைப் பார்த்தல்.

### விருத்தம்.

மூவகை மதிலுஞ் சாய மூரலால் வீரஞ் செய்த
சேவகர் திருக்குற் றாலர் திருவிளை யாட்டந் தன்னிற்
பாவக மாக நூவன் பறவைபோற் பறவை கூவ
மாவின்மே லேறிச் சிங்கன் வரும்பட்சி பார்க்கின் றானே. (78)

---

(1) உள்ளான், வலியான், - ஒவ்வொரு பறவைகள். கோட்கார- குணமுடைய.

(2) பொரி-நெற்பொரி முதலியவை. மல்லன் - மல்லனென்பவன் (உடன்).

(3) வங்காரம் - ஒழுங்குள்ள.

(4) மட்டு - கள். ஈ - (அக்கள்ளில் மொய்க்கும்) ஈ.

(78) மூவகைமதில்-மூன்று பிரிவாகிய கோட்டைகள். மூன்று - இரும்பு, வெள்ளி, பொன். மூரலால்-சிரிப்பால். திரு-சிறந்த. விளையாட்டம்-விளைநிலம். பாவகம் - இயற்கை. பறவைபோல் - பக்ஷியைப்போல ஒலித்து. பறவை கூவ-பட்சிகளை அழைக்க. மாவின்--மாமரத்தின்.

## சிங்கன் பட்சிகள்வரவு கூறுதல்.

இ—ம்—கல்யாணி. ஆதிதாளம்.

### பல்லவி.

வருகினு மையே பறவைகள் வருகினு மையே.

### அநுபல்லவி.

வருகினு மையே திரிகூட நாயகர்
வாட்டமில் லாப்பண்ணைப் பாட்டப் புறவெல்லாங்
குருகும் நாரையு மன்னமுந் தாராவுங்
கூழைக் கடாக்களுஞ் செங்கால் நாரையும் (வருகினு)

### சரணங்கள்.

(1) சென்னியி லேபுனற் கன்னியை வைத்த
திரிகூட நாதர் கிரிமாது வேட்கையில்
மன்ன னொருவன் வரிசையிட் டான்கங்கை
மங்கைக்கு நானே வரிசைசெய் வேனென
அன்னை தயவுடை யாகாச கங்கை
யடுக்களை காணப் புறப்படு நேத்திபோல்
பொன்னிற வானெங்குந் தந்நிறமாகப்
புரிந்து புவனந் திரிந்து குருகினம். (வருகினு)

---

(79) வருகினும் - வருகின்றன என்பதன் மரூஉமொழியாக் குற வர்சாதி கூறுஞ்சொல்; இதுபோலவே மேலே மேயினும், சாயினும், போயினும் என்பனவும், மேய்கின்றன சாய்கின்றன போகின்றன என் பதன் மரூஉமொழிகளாம். ஐயே - (நாவலோ) அழைத்தலின் குறிப்புச் சொல்; இங்ஙனம் வருமிடந்தோறும் கொள்க. பண்ணை - வயல்களுள். பாட்டப்புறவு-வாரப்பற்றுக்காடு. புறவமென்பது, புறவென அம் கெட்டு நின்றது.

(1) கிரிமாது - உமாதேவியை. வேட்கையில் - விவாகஞ் செய்யு மிடத்து. மன்னன் - [இமய] அரசன். வரிசையிட்டான்-மரியாதைசெய் தான். அடுக்களை - சமையல்வீடு. புறப்படும்-வெளியேறிவரும். நேத்தி - ஒழுங்கு. பொன்-இரும்பு. புரிந்து-செய்து. குருகினம்-பறவைக் கூட்டங் கள்- அடுக்களை காணப் புறப்படுதலாவது: மகளைக்கொடுத்த தாய், அம் மகள் வாழ்க்கை நலத்துக் கேதுவாகிய உணவுசமைத்தலினிடத்தை முத லாவது காண வெளிப்புறப்பட்டு வருதல்; இது; பண்டைக்கால வழக்கு.

(2) காடை வருகுது கம்புள் வருகுது
காக்கை வருகுது கொண்டைக் குலாத்தியும்
மாடப் புறாவு மயிலும் வருகுது
மற்றொரு சாரியாய்க் கொக்குத் திரளெல்லாங்
கூடலை யுள்ளாக்கிச் சைவம் புறம்பாக்கிக்
கூடுஞ் சமணரை நீடுங் கழுவேற்ற
ஏடெதி ரேற்றிய சம்பந்த மூர்த்திகண்
றிட்ட திருமுத்தின் பந்தர்வந் தாற்போல (வருகினு)

(3) வெள்ளைப் புறாவுஞ் சகோரமும் அன்னையும்
மீன்கொத்திப் புள்ளு மரங்கொத்திப் பட்சியுங்
கிள்ளையும் பஞ்சவர் ணக்கிளிக் கூட்டமுங்
கேகயப் பட்சியும் நாகண வாய்ச்சியும்
உள்ளானுஞ் சிட்டும் வலியானு மன்றிலும்
ஓலஞ்செய் தேகூடி நாலஞ்சு பேதமாய்த்
துள்ளாடுஞ் சூல கபாலர் பிராட்டியார்
தொட்டாடு மைவனப் பட்டாடை போலவே (வருகினு)

## சிங்கன் சொல்லுதல்.

## கோச்சகக் கலிப்பா.

ஈரா யிரங்கரத்தா னேற்றசங்கு நான்மறையுஞ்
சீரா யிரங்கடஞ் செய்தவர்குற் றாலவெற்பில்

(2) சாரியாய்-சுற்றாய். கூடலை-மதுரையை. உள்ளாக்கி-கைவசப் படுத்தி. சைவம்-சைவசமயத்தை. புறம்பாக்கி-அப்புறப்படுத்தி. ஏடு-[திருநள்ளாற்றுப் பதிகமெழுதிய] ஏட்டை. எதிரேற்றிய - [வைகையாற்றில்] எதிரேறச்செய்த. பந்தர்-பந்தல்.

(3) கேகயம்-மயில். ஓலம்-முழக்கம். துள்ளாடும்-துள்ளுதல்செய்யும். சூலகபாலர்-சூலாயுதத்தையும் பிரமகபாலத்தையுமுடைய திரிகூடநாதரது. தொட்டாடும் - தொட்டுத்தரிக்கும். ஐவனம் - அஞ்சு நிறத்தையுடைய.

(80) ஈராயிரங்கரத்தான் - இரண்டாயிரங் கையையுடைய பாணுகம்பன். இரங்க - முழங்க.

ஓரா யிரமுகமா யோங்கியகங் காநதிபோற்
பாரார் பலமுகமும் பட்சிநிரை சாயுதையே. (80)

இ-ம்-கல்யாணி. ஆதிதாளம்.

பல்லவி.

சாயினு மையே பறவைகள் சாயினு மையே.

அநுபல்லவி.

சாயினு மையே பாயும் பறவைகள்
சந்தனக் காட்டுக்குஞ் செண்பகக் காவுக்குங்
கோயிற் குழல்வாய் மொழிமங்கைப் பேரிக்குங்
குற்றால நாயகர் சிற்றாற்று வெள்ளம்போல் (சாயினு)

சரணங்கள்.

(1) காராருஞ் செங்குள மேலப்பாட் டப்பற்று
காடுவெட் டிப்பற்று நீடுசுண் டைப்பற்று
சீராரும் பேட்டைக் குளமுடைக் காங்கேயன்
ஸ்ரீகிருஷ்ணன் மேடு முனிக்குரு கன்பேரி
ஏரிவாய் சீவலப் பேரி வடகா
லிராசகுல ராமன் கண்டுகொண் டான்மேலை
மாரிப்பற் றுங்கிழை மாறிப்பற் றுஞ்சன்ன
நேரிப்பற் றுஞ்சாத்த னேரிப்பற் றுஞ்சுற்றிச் (சாயினு)

(2) பாரைக் குளந்தெற்கு மேல்வழு திக்குளம்
பாட்டப் பெருங்குளஞ் செங்குறிஞ் சிக்குளம்

---

ஆயிரம்-அளவற்ற. பாரார்-பூமியினிறைந்த. நிரை-வரிசை.

(81) காட்டுக்கும்-காட்டினிடத்தும். காவுக்கும் - சோலையிடத்தும். பேரிக்கும்-பேரியினிடத்தும். சிற்றாறு-சித்திராநதி.

(1) கார் ஆரும்-மேகங்கள் நீருண்ணும்; கடல்போன்ற தென்றபடி. பாட்டப்பற்று - வார நன்செய். பற்றென்பது நன்செய்க்கு உலகவழக்க மாக வந்தபெயர்; இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க. ஏரிவாய்-குளம் பொருந்திய.

(2) பாரைக்குளம்-பாறைக்குளம்; எதுகைநோக்கிப் பாரைக்குள மென்றாயிற்று. வழுதி - பாண்டியன்.

ஊருணிப் பற்றுந் திருப்பணி நீள
முயர்ந்த புளியங் குளந்து வைக்குள்
மாரனே ரிச்குள மத்தளம் பாறை
வழிமறித் தான்குள மாலடிப் பற்றும்
ஆரணி குற்றாலர் தோட்ட நெடுஞ்செ
யபிஷேகப் பேரிக் கணக்கன் பற்றிலுஞ் (சாயினு)

(3) ஐயர்குற் றாலத்து நம்பியார் திருத்து
அப்பா லொருதாதன் குற்றாலப் பேரிச்
செய்யம் புலியூ ரிலஞ்சிமே லகரஞ்
செங்கோட்டை சீவல நல்லூர் சிற்றம்பலம்
துய்ய குன்றக்குடி வாழவல் லான்குடி
சுரண்டை யூர்முத லுட்கிடை சுற்றியே
கொய்யு மலர்த்தா ரிலஞ்சிக குமார
குருவிளை யாடுந் திருவிளை யாட்டத்தில் (சாயினு) (81)

சிங்கன் சொல்லுதல்.

கொச்சகக் கலிப்பா.

கொட்டழகு கூத்துடையார் குற்றால நாதர்வெற்பில்
நெட்டழகு வாள்விழியும் நெற்றியின்மேற் கஸ்தூரிப்
பொட்டழகுங் காதழகும் பொன்னழகு மாய்நடந்த
கட்டழகி தன்னழகென் கண்ணைவிட்டு கொள்ளாதே. (82)

இ—ம்—கலயாணி. ஆதிதாளம்.

பல்லவி.

மேயினு மைமேப பறவைகள் மேயினு மைமேய.

---

ஆர் - ஆத்திமலர.

(3) நம்பியார்-அருச்சகர். திருத்து-நன்செய்; மேல்வருவனவுமது. செய்-வயல். அம் - அழகு. உட்கிடை - அகத்தேயிருக்குமிடங்கள். விளையாட்டத்தில் - விளைநிலங்களில்.

(82) அழகுகொட்டு எனக் கூட்டுக. நெட்டு - நீண்ட; கட்டழகி - பேரழகுடையவள்.

அநுபல்லவி.

மேயினு மைமேய குற்றால நாதர் வியன்குல சேகரப்
பட்டிக் குளங்களும்
ஆயிரப் பேரியுந் தென்காசி யுஞ்சுற்றி அயிரையுந் தேளியு
மாராலுங் கொத்தியே. (மேயினு)

சரணங்கள்.

(1) ஆலயஞ் சூழத் திருப்பணி யுங்கட்டி
யன்னசத் ரங்கட்டி யப்பாலுந் தென்காசிப்
பாலமுங் கட்டிப் படித்தரஞ் சேர்கட்டிப்
பத்த சனங்களைக் காக்கத் துசங்கட்டி
மாலயன் போற்றிய குற்றால நாதர்
வழித்தொண்டு செய்திடக் கச்சைகட் டிக்கொண்ட
சீலன் கிளுவையிற் சின்னணைஞ் சேந்த்ரன்
சிறுகால சந்தித் திருத்துப் புறவெல்லாம் (மேயினு)

(2) தானைத் தலைவன் வயித்தியப் பன்பெற்ற
சைவக் கொழுந்து தருமத்துக் காலயஞ்
சேனைச் சவரிப் பெருமாள் சகோதரன்
செல்வன் மருதூர் வயித்தி யபபனுடன்
மானவன் குற்றால நாதனைப் பெற்றவன்
வள்ள லெனும்பிச்சைப் பிள்ளை திருத்தெல்லாங்
கானக் குளத்துள்வாய்க் கீழைப் புதுக்குளங்
கற்பூரக் காற்பறறுந் தட்டான் குளச்சுற்றும் (மேயினு)

---

(1) சேர்-நெற்குவிக்கு கொட்டாரம். துசங்கட்டி-கொடிக்கட்டி; அஃதாவது: முடிததே தீரவேண்டுமென்று உறுதிப்படுத்தி. மேலே கச்சை கட்டி யென்பதற்கும் இதுவே பொருள். வழித்தொண்டு — பரம்பரை யடிமை. கிளுவை - ஏகாககமபட்டிச் சமஸ்தானம்; மேல்வருவது மது. திருத்து-பயிர்செய்யும நிலம். புறவு - பக்கம்.

(2) தானைத்தலைவன்-படைத்தலைவன். மானவன்-பெருமையுடையவனாகிய. திருத்து-வயல். பற்று-வயல். சுற்று-சுழ இருக்குமிடம்.

(3) மன்னன் கிளுவையிற் சின்னணைஞ் சேந்த்ரன்
வடகரை வீட்டுக்கு மந்திரி யாகவுஞ்
செந்நெல் மருதூர்க்கு நாயக மாகவுந்
தென்காசி யூருக்குத் தாயக மாகவுந்
தன்னை வளர்க்கின்ற குற்றால நாதர்
தலத்தை வளர்க்கின்ற தானிக னாகவு
நன்னகர்க் குற்றாலத் தந்தாதி சொன்னவ
னள்ளார் தொழும்பிச்சைப் பிள்ளை திருத்தெல்லாம்
(மேயினு)

(4) நன்னக ரூர்கட்டிச் சாலை மடங்கட்டி
நாயகர் கோவிற் கொலுமண்ட பங்கட்டித்
தென்ன மரம்பர மானந்தத் தோப்பிட்டுத்
தெப்பக் குளங்கட்டித் தேர்மண்ட பங்கட்டிப்
பன்னுந் திரிகூடத் தம்பலங் கட்டிப்
பசுப்பிரை கோடி திருப்பணி யுங்கட்டி
யந்நாளில் தர்மக் களஞ்சியங் கட்டும்
அனந்த பற்பநாபன் கட்டளைப் பற்றெல்லாம்
(மேயினு)

(5) தந்தைமுன் கட்டின அம்பலத் தூக்குந்
தருமத் தூக்குநிலைக் கண்ணாடி போலவே
யெந்தையார் வாசலிற் பிள்ளையார் செய்வித்
திரண்டு குறிஞ்சிப் படித்துறை யுஞ்செய்த
கொந்தார் புயத்தா னிராக்கதப் பெருமாள்
குற்றால நாதன்முன் னுற்ற சகோதரன்
வந்தனை சேர்சங்கு முத்துதன் மைத்துனன்
மன்னன் வயித்திய நாதன் திருத்தெல்லாம் (மேயினு)

---

(3) நாயகம்-தலைமை. ஊருக்கு-ஊரிலுள்ளார்க்கு. தாயகம்-தாய் பிறந்த இடம். தானிகன்-காரியகாரன். நள்ளார்-பகைவரும்.

(4) நாயகர் - [திருக்குற்றாலத்தில் உற்சவங் கொண்டருளும்] சோமாஸ்கந்தர். இட்டு-செய்து [தாற்பரியம்]. அம்பலம் - சபை. பசுப் பிரை-பசுக்கள் நிற்குமிடம். அந்நாளில் - அந்தக்காலத்தில்.

(5) எந்தையார்-திரிகூடநாதர். பிள்ளையார் - [அரசடி] விநாயகர் குறிஞ்சிப்படித்துறை-சிறுபடித்துறை. கொந்து-பூமாலை [ஆகுபெயர்.]

(6) ஆர்மேல் வருகின்ற துன்பமு நீக்கி
யடங்கார் குறும்பு மடக்கியே தென்காசி
யூர்மே லுயர்ந்த மனுநீதி நாட்டி
யுடையவர் குற்றாலர் பூசேனை வேத்தியங்
தேர்மேற் றிருநாளுந் தெப்பத் திருநாளுஞ்
சித்திர மண்டபஞ் சத்திரஞ் சாலையும்
பார்மேல் வளஞ்செ யனந்த பற்பநாபன்
பாலன் வயித்திய நாதன் திருத்தெல்லாம் (மேயினு).

(7) ஆறை யழகப்ப பூபாலன் கட்டளை
யன்பன் திருமலைக் கொழுந்துதன் கட்டளை
நாறும்பூக் குற்றாலச் சங்குதன் கட்டளை
நங்கலொல் லாரரி நரபாலன் கட்டளை
வீறுசேர் பால்வண்ணச் சங்குதன் கட்டளை
மிககான ஓமநல்லூர்க் கிருஷ்ணன் வணிகேசன்
பேறுடைப் பம்பை வருசங்கு முத்துதன்
பேரான கட்டளைச் சீரான பற்றெல்லாம் (மேயினு)

(8) தானிகன் சர்க்கரைப் பண்டார மென்னுந்
துணியாத காதற் பணிவிடை செய்கின்ற
மேன்மை பெருஞ்சுந் தரத்தோழன் கட்டளை
மிக்க கருவைப் பதிராம நாயக
ஞானில மும்புகழ் தாகந்தீர்த் தானுட
னல்லூர் வருசங் கரமூர்த்தி கட்டளை
யான சடைத்தம்பி ரான்பிச்சைக் கட்டளை
யப்பால் மலைநாட்டார் கட்டளைப் பற்றெல்லாம்
(மேயினு) (83

---

(6) அடங்கார்-பகைவர். வளஞ்செய் - வள[மாகச்]செய்கின்ற.

(7) ஒல்லார்-பகைவர்களை. அரி-கெடுக்கின்றவன். நரபாலன்-மனிதர்களை யிரட்சிக்கின்றவன். வீறு-பெருமை. பேறு-பயன். பம்பை-பம்பளிப் பட்டணம்.

(8) தானிகன்-காரியகாரன். காதல் - ஆசையோடு. கருவைப் - திகரிவலம்வந்தநல்லூர். நல்லூர்-ஓமநல்லூர். அப்பால்-அப்புறத்திலுள்ள.

### சிங்கன் சிங்கியை நினைத்துக் கூறுதல்

### கொச்சகக் கலிப்பா.

செட்டிக் கிரங்கிவினை தீர்த்தவர்குற் றாலர்வெற்பிற
சுட்டிக் கிணங்குநுதற் சுந்தரியாள் கொங்கையின்மேல்
முட்டிக் கிடந்துகொஞ்சி முத்தாடிக் கூடிநன்றாய்க்
கட்டிக் கிடக்கமுலைக் கச்சாய்க் கிடந்திலனே. (84)

### சிங்கன் குளுவனைப்பார்த்துக் கண்ணிகொண்டுவரச் சொல்லுதல்

இ-ம்-கல்யாணி. தாளம்-சாப்பு.

பல்லவி

கண்ணி கொண்டு வாடா குளுவா கண்ணி கொண்டுவாடா.

அநுபல்லவி

கண்ணி கொண்டு வாடா பண்ணவர் குற்றாலர்
காரார் திரிகூடச் சாரலி லேவந்து
பண்ணிய புண்ணிய மெய்திறற் போலப்
பறவைகளெல்லாம் பரந்தேறி மேயுது (கண்ணி)

சரணங்கள்

(1) மானவர் சூழு மதுரையிற பாண்டியன்
மந்திரி யார்கையில் முந்திப் பணம்போட்டுத்
தானைசைப் பட்டுமுன் கொண்டகொக் கெல்லாந்
தரிகொண்டு இல்லை நரிகொண்டு போச்சுது

---

(84) செட்டி-வைசியரிலொருபிரிவாகிய கவிப்பர் குலத்திற்பிறந்த கண்டகசேதனன்; இவன் சரிதம், தி. பு, கண்டகசேதனச்சருக்கத்திற் காண்க. சுட்டி - நெற்றிச்சுட்டி. சுந்தரி - அழகுடையவள். முத்தாடி- முத்தமிட்டு.

(85) குளுவா-குளுவனே; குளுவன்-பறவைகளைப் பிடிக்கக் கள்ள வடிவமாக ஒரு வேஷம் போட்டுக்கொள்கிறவன். பரந்து - எங்கும்வியாபித்து.

(1) மானவர்-பெருமையுடையவர். மந்திரியார் — [மாணிக்கவாசக சுவாமியாகிய] மந்திரியார். முந்திப்பணம்போட்டு — முதலிலே திரவியங்களைக் கொடுத்தது [வாதகிலாச்சொல்] தானை- [பாண்டியனுடைய] தான். கொக்கு — குதிரை [கொச்சை]. தரிகொண்டதில்லை — தங்குதல் செய்யவில்லை. நரிகொண்டுபோச்சுது; இச்சரிதம் திருவிளையாடற்புராணத்திலறிக.

கானவர் வேடத்தை யீனமென் றெண்ணாதே
காக்கை படுத்தான் கருமுகில் வண்ணனு
மேனாட் படுத்திட்ட கொக்கிற கின்னும்
விடைமே லிருப்பார் சடைமே லிருக்குது (கண்ணி)

(2) முன்னாட் படுத்த பரும்பெருச் சாளியை
மூத்த நயினார் மொடுவாய்க் கொடுபோனார்
பின்னை தம்பியா ராடு மயிலையும்
பிள்ளைக் குறும்பாற் பிடித்துக்கொண் டேகினார்
பன்னரு மன்னத்தை நன்னக ரீசர்
பரிகல மீந்திடும் பார்ப்பானுக் கீந்தனர்
வன்னப் பருந்தொரு கள்வன் கொடுபோனான்
வக்காவும் நாரையுங் கொக்கும் படுக்கவே (கண்ணி)

(3) மீறு மிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குற வன்முதல் வேட்டைக்குப் போனநா
ளாறுநாட் கூடி யொருகொக்குப் பட்ட
தகப்பட்ட கொக்கை யவித்தொரு சட்டியிற்
சாறாக வைத்தபின் வேதப் பிராமணர்
தாமுங்கொண் டார்சைவர் தாமுங்கொண் டார்தவப்
பேறு முனிவரு மேற்றுக்கொண் டாரிதைப்
பிக்குச்சொல் லாமலே கொச்குப் படுக்கவே(கண்ணி)
(85)

---

கானவர்-குறவர். ஈனம்-குற்றம். காக்கை - [காகாசுரனாகிய] காக்கையை. படுத்தான்- [கண்ணைக் கெடுத்துக் கீழே] விழச்செய்தான். கருமுகில்வண்ணன்-கரியமேகம்போன்ற விஷ்ணு; இச்சரித்திரம் பாகவதத்திற் காண்க.

(2) படுத்த - அகப்படுத்திக்கொண்ட. பெருச்சாளி - [கயமுகாசுரனாகிய] பெருச்சாளி. மூத்தநயினார்-விநாயகக்கடவுள். மொடுவாய்- [மிக] நயமாய். ஆடும்-ஆட்டையும். பன்னரும்-சொல்லுதற்கரிய. அன்னத்தை-அன்னப்பறவையை. பரிகலம்-போசனபாத்திரம். பார்ப்பான் - பிராமணனாகிய பிரமா. வன்னம்-நிறம். கள்வன்-விஷ்ணு.

(3) மீறும்- [வளங்கள்] அதிகப்படும். வேட்டைக்குப் போனநாள் முதலெனக் கூட்டுக. கொக்கு-மாமரமாகிய சூரபன்மன் [ஒரு பறவை]. சட்டியிலவித்தெனக் கூட்டுக. அவித்து-வேகவைத்து [கெடுத்து]. சட்டியில் - ஒரு பாத்திரத்தில் [சஷ்டியாகிய ஆறுவது திதிநாளில்]. சாறு - குழம்பு (திருவிழா). பிக்கு - பிசகு.

## கலிக்கூற்று.

### கொச்சகக்கலிப்பா.

ஆனைகுத்திச் சாய்த்ததிற லாளர் திருக் குற்றாலர்
கூனிகொத்தி முக்கிவிக்கிக் கொக்கிருக்கும் பண்ணையெலாஞ்
சேனைபெற்ற வாட்காரச் சிங்கனுக்குக் கண்ணெரிகொண்டு
பூனைகுத்தி நூவன்முழுப் பூனைபோல் வந்தானே. (86)

## நூவன் சொல்லுதல்.

### இ-ம் - காம்போதி. தாளம்-சாப்பு.

(1) கலந்த கண்ணியை நெருக்கிக் குத்தினாற் காக்கையும்படுமே
குளுவா காக்கை யும்படுமே
(2) மலர்ந்த கண்ணியைக் கவிழ்த்துக் குத்தினால் வக்கா வும்படு
குளுவா வக்கா வும்படுமே (மே
(3) உலைந்த கண்ணியை யிறுக்கிக் குத்தினா லுள்ளா னும்படுமே
குளுவா வுள்ளா னும்படுமே
(4) குலைந்த கண்ணியைத் திருத்திக் குத்தடா குற்றால மலைமேற்
குளுவா குற்றால மலைமேல். (87)

## சிங்கன்சொல்லுதல்.

### கொச்சகக்கலிப்பா.

கள்ளொழுகு கொன்றையந்தார்க் கர்த்தர்திரி கூடவெற்பிற்
பிள்ளைமதி வாணுதலாள் பேசாத வீறடங்கத்
துள்ளிமடி மேலிருந்து தோளின்மே லேறியவள்
கிள்ளைமொழி கேட்கவொரு கிள்ளையா னேனிலையே. (88)

---

(86) ஆனை - [தாருகாவனத்து முனிவர்விட்ட] யானை. திறலாளர் - வலிமையுடையவர். கூனி - ஒருவகைமீன். பண்ணையெல்லாம் - வயலிட மெல்லாம். சேனைபெற்ற - வேடர்படை சூழப்பட்ட. வாட்காரச்சிங்கனுக்கு-வாளாயுதமுடைய சிங்கனாகிய குறவனுக்காக. பூனைகுத்திநூவன்-பூனையைக் குத்திப்பிடித்தலில் வல்லவனாகிய நூவன்.

(1) குத்தினால் - [பூமியில்] பதித்தால்.

(2) மலர்ந்த - வாய்விரிந்த.

(3) உலைந்த - தளர்ந்த.

(4) குலைந்த - கட்டுவிட்ட.

(88) கள்-தேன். பிள்ளைமதி-பிறைச்சந்திரன்போன்ற. வாணுதலாள்-ஒளிபொருந்திய நெற்றியையுடையவளாகிய [மேலேகூறிசொன்ன] குறத்தி. வீறு-கருவம். கிள்ளைமொழி-கிளிமொழிபோன்ற சொல்.

இ-ம் - கல்யாணி, ஆதிதாளம்.

பல்லவி

கெம்பா றடையே பொறுபொறு கெம்பா றடையே.

அநுபல்லவி

கெம்பா றடையே நம்பர்குற் றாலர்
கிருபைப் புறவிற் பறவை படுக்கையில்
வம்பாக வந்தவுன் சத்தத்தைக் கேட்டல்லோ
வந்த குருவி கலைந்தோடிப் போகுது (கெம்பா)

சரணங்கள்

(1) ஏறாத மீன்களு மேறி வருகுது
எத்திசைப் பட்ட குருகும் வருகுது
நூறாறு கண்ணியைப் பேறாகக் குத்தியே
நூவனு நானு மிருந்தோ முனக்கினிப்
பேறான சூளை மருந்தா கிலும்பிறர்
பேசாமல் வாடைப் பொடியா கிலுமரைக்
கூறா கிலுமொரு கொக்கா கிலுநரிக்
கொம்பா கிலுந்தாரேன் வம்புகள் பேசியே (கெம்பா)

(2) பூசி யுடுத்து முடித்து வளையிட்டுப்
பொட்டிட்டு மையிட்டுப் பொன்னிட்டுப் பூவிட்டுக்
காசு பறித்திடும் வேசைய ராசாரக்
கண்ணிக்குள் ளேபடுங் காமுகர் போலவும்
ஆசார வீனத் துலுக்கன் குதிரை
யடியொட்டுப் பாறை யடியொட்டி னாற்போலுந்
தேசத்துக் கொக்கெல்லாங் கண்ணிக்குள் ளேவந்து
சிக்குது பார்கறி தக்குது பாரினிக் " (கெம்பா)

---

(89) கெம்பாறடையே - கெம்பாதே அட ஐயே என்பதின் மரூஉ மொழி. கெம்புதல் - உரத்துப் பேசுதல். அட ஐயே-விளிக்குறிப்பு. இங் ஙனம் வருமிடந்தோறுங் கொள்க.

(1) நூவன் - சிங்கனுக்குத்தோழன். பேறு - பயன் சூளைமருந்து வேசையர்களை மயக்குமருந்து. பேசாமல் - பேசாமலிருக்கும்படி - கூறு பங்கு.

(2) ஆசாரக்கண்ணி - பொய்யொழுக்கமாகிய வலை. ஆசாரஈனத் துலுக்கன் - ஒழுக்கங்கெட்ட துலுக்கனது. குதிரையடி - குதிரைக்கால். அடியொட்டுப் பாறை - அஃதாவது: நவாபுகாலத்தில் ஒரு பட்டாணி குதிரையேறிக்கொண்டு திருக்குற்றாலத்து ஆலயத்துக்குச் சிறிது தூரத் தில் வர அங்குள்ளார் தடைசெய்யவுங் கேளாமல் மீட்டுங் குதிரையைச் செலுத்த அக்குதிரை அடியெடுத்து வைக்கமாட்டாமல் ஒட்டிக்கொண்டு நின்ற பாறை. சிக்குது-அகப்படுகின்றது. தக்குது-கிடைக்கின்றது. தாற் பரியம்.

(3) ஆலாவுங் கொக்கு மருகே வருகுது
ஆசாரக் கள்ளர்போல் நாரை திரியுது
வேலான கண்ணிய ராசையி னூற்கீழு
மேலுந்திரிந்திடும் வேடிக்கைக் காரர்போற்
காலாற் றிரிந்து திரிந்து திரிந்தெங்கள்
கண்ணிக்குள் ளாகும் பறவையைப் போகட்டுப்
பாலாறு நெய்யாறு பாய்கின்ற வோட்டத்திற்
பல்லொடிக் கச்சிறு கல்லகப் பட்டாற்போல்
(கெம்பா) (89)

கவிக்கூற்று.

விருத்தம்.

தேவிகுழல் வாய்மொழிப்பெண் ணுச்சி யார்கால்
செண்பகக்கால் திருந்தமதி சூடி னார்கால்
காவிவயல் வெண்ணமடை தட்டான் பற்றுக்
கள்ளிகுள மழகர்பள்ளங் கூத்தன் மூலை
வாவிதொறு நின்றுசிங்கன் வேட்டை யாடி
வடவருவி யாற்றுக்கால் வடகால் தென்கால்
கோவில்விளை யாட்ட மெங்குங் கண்ணி குத்திக்
கூவினு னாவனை விட் டேவி னானே. (90)

---

(3) ஆகும் - அகப்படும். போகட்டு-போகும்படிசெய்து. ஓட்டத்தில் - உதட்டில்.

(90) கால் - வாய்க்கால். காவிவயல்-நீலோற்பலமலரும் நன்செய். கூத்தன்-திரிகூடநாதர் சங்கக் கோயிலுக்கு வடபக்கங் கோயில் கொண்டிருக்குஞ் சிவபிரான். வாவி-தடாகம். விளையாட்டம் - விளைநிலம். கூவினுன்-அழைத்தவனுகி. விட்டேவினுன்- [அப்பறவைகளைப் பிடித்துவரச் சொல்லிச்] செலுத்தினுன்.

## சிங்கன் சொல்லுதல்.

இ—ம்—தர்பார். தாளம்—சாப்பு.

### கண்ணிகள்.

(1) கல்வித் தமிழ்க்குரியார் திரிகூடக் கர்த்தர்பொற் றாள்பரவுஞ்
செல்வக் கடலனையான் குற்றாலச் சிவராம நம்பியெங்கோன்
வல்ல மணியபட்டன் பெருமை வளர்சங்கு முத்துநம்பி
வெல்லுங்குற் றாலநம்பி பறவெல்லா மீன்கொத்திக் கூட்டமையே.

(2) சீராளன் பிச்சைப்பிள்ளை திருப்பணிச் செல்வப் புதுக்குளமுங்
காராளன் சங்குமுத்து திருத்தொடைக் காங்கேயன் கட்டளையும்
மாராசன் றென்குடிசை வயித்திய நாதன் புதுக்குளமுந்
தாராள மானபுள்ளும் வெள்ளன்னமுந் தாராவு மேயுதையே.

(3) தானக் கணக்குடனே ஸ்ரீபண்டாரந் தன்மபத் தர்கணக்கும்
வானவர் குற்றாலர் திருவாசல் மாடநற் பத்தியமும்
நானிலஞ் சூழ்குடிசை வைத்திய நாத நரபாலன்
தானபி மானம்வைத்த சிவராமன் சம்பிர திக்கணக்கும்.

(4) வேதநா ராயணவேள் குமாரன் விசைத்தொண்டை நாடாளன்
சீதரன் முத்துமன்னன் விசாரிப்புச் சேர்ந்த புறவினெல்லாங்
காதலாய்க் கண்ணிவைத்துப் பறவைக்குக் கங்கணங் கட்டி நின்றே
னேதோ வொருபறவை தொடர்ந்துவந் தென்னைக் கடிக்குதை
[யோ.

---

(1) உரியார் - உரியவராகிய. மணிய - மணியவேலையுள்ள. நம்பி- அருச்சகர். புறவு - நன்செய்.

(2) சீராளன்-சீர்த்தியையாளுகின்றவன். திருப்பணி-திருப்பணிக் காக விட்ட. காராளன் - வேளாளனாகிய. மாராசன் - மகாராசனாகிய. குடிசை -ஓரூர். புள் - பறவை.

(3) தானக்கணக்கு - தானமாகவிடப்பட்ட சொத்தின் கணக்கு. ஸ்ரீபண்டாரம் - கருவூலம். தன்மபத்தர் - தருமமாகிய தொண்டுசெய்யும் அடியார்கள். குடிசை-ஓரூர். நரபாலன் - அரசன். சம்பிரதிக்கணக்கு - எல்லாஞ்சேர்ந்த தொகைக் கணக்கு.

(4) விசை-விசயமென்பதன் கடைக்குறை; வெற்றி. விசாரிப்பு- விசாரணை. கங்கணங்கட்டிநின்றேன் - மிகச்சாக்கிரதையாகநின்றேன். இஃதொரு குறிப்புமொழி

## சிங்கன் சிங்கியை நினைத்தல்.

### விருத்தம்.

காவலர் திரிகூடத்திற் காமத்தாற் கலங்கி வந்த
தூவனைப் பழித்துச் சிங்க னோக்கிய வேட்டைக் காட்டி
லாவல்சேர் காம வேட்டை யாசையா லன்னப் பேட்டைச்
சேவல்போய்ப் புணரக் கண்டான் சிங்கிமேற் பிரமை கொண்
(டான். (92)

## சிங்கன் சிங்கியை நினைத்துப் புலம்பல்.

இ-ம்-ஆகிரி. தாளம்-சாப்பு.

எட்டுக் குரலி லொருகுரல் கூவும்பு றாவே யென
ஏகாந்தச் சிங்கியைக் கூவாத தென்னகு லாவே
மட்டார் குழலிதன் சாயலைக் காட்டும யூரமே யவள்
மாமலர்த் தாள்நடை காட்டாத தென்னவி காரமே
தட்டொத்த கும்பத் தடமுலை காட்டுஞ்ச கோரமே சற்றுத்
தண்ணென்றும் வெச்சென்றுங் காட்டிவிட் டாலுப காரமே
கட்டித் திரவியங் கண்போலு நன்னகர்க் காவியே கண்ணிற்
கண்டிட மெல்லா மவளாகத் தோணுதே பாவியே. (93)

---

(92) வந்த - (தன்னிடத்தில்) வந்த. தூவனை - தோழனாகிய தூவனை. நோக்கிய-பார்க்கப்பட்ட. ஆவல்-பேராசை. ஆசையால்-விருப்பத்தால். சேவல்-ஆணன்னம். சிங்கி-மனைவியாகிய குறத்தி. பிரமை-மயக்கம்.

(93) எட்டுக்குரல் - (*உவரி †சுரதமாதர் கண்டத்திலுண்டாதும்) எண்வகை ஒலிகள்; அவையாவன: மயில் புறா அன்னம் காடை வண்டானம் குயில் கோழி வண்டு இவற்றின் ஒலிகள். ஒருகுரல் கூவும் - தன்னுடைய ஒன்றாகிய ஒலியைச்செய்யும். ஏகாந்தம் - தனிமையுடைய. கூவாதது-அழையாதது. குலா-பட்சம். மட்டு-தேன். மயூரமே-மயிலே. விகாரம் - வேறுபாடு. தட்டு-அடிப்பக்கம். கும்பம்-யானைமத்தகங்கள்போன்ற. தடம்-பெருமை. சகோரமே - சக்கரவாகப் பறவையே. தண்ணென்றும் வெச்சென்றும் - (அவள் முலைகள் காட்டுதல்போல) குளிர்ந்தும் உட்டணித்தும். காவியே - நீலோற்பலமே.

---

* உவரி - மேல். † சுரதம் - சையோகம்.

## சிங்கன் வேட்டையைப்பற்றிச் சொல்லுதல்.

### கொச்சகக்கலிப்பா.

செட்டிபற்றிற் கண்ணிவைத்துச் சிங்கிநடைச் சாயலினாற்
பெட்டைக் குளத்திலன்னப் பேடைநடை பார்த்திருந்தேன்
கட்டுற்ற நன்னகர்க்கென் கண்ணியெலாங் கொத்திவெற்றி
கொட்டிக்கொண் டையே குருவியெலாம் போயினுமே. (94)

இ—ம்—முகாரி. தாளம்—சாப்பு

பல்லவி

போயினுமையே பறவைகள் போயினு மையே.

அநுபல்லவி.

போயினு மையே நாயகர் குறாலர்
பொல்லாத தக்கன் மகத்தை யழித்தநாள்
வாயி லடிபட் டிடிபட் டுதைபட்டு
வானவர் தானவர் போனது போலவே. (போயினு)

சரணங்கள்.

(1) மேடையி னின்றொரு பஞ்சவர் ணக்கிளி
பின்னார்கை தப்பியென் முன்னாக வந்தது
பேடையென் றேயதைச் சேவல் தொடர்ந்தது
பின்னொரு சேவலுங் கூடத் தொடர்ந்தது
சூடிய வின்ப மிரண்டுக்கு மெட்டாமற
சுந்தோப சுந்தர்போல் வந்த கலகத்திற

---

(94) பற்று-வயல். சாயல்-தோற்றம். பெட்டைக்குளம்-ஒருகுளம் கட்டு - கட்டுப்பாடு. நன்னகர்க்கு - நன்னகரத்தில் கொத்தி - அறுத்து வெற்றிகொட்டிக்கொண்டு - செயித்துக்கொண்டு.

(95) மகத்தை - யாகத்தை, தானவர் - அசுரர்.

(1) கைதப்பி - கையினின்றுந் தவறி. பேடை - பெட்டைக்கிளி. சேவல்-ஆண்கிளி. சூடிய - அணியப்பட்ட. இரண்டுக்கும் - அவ்விரண்டு ஆண்கிளிக்கும். சுந்தோபசுந்தர்போல்-சுந்தன் உபசுந்தனென்னு மிரண்டு அசுரரைப்போல; இவர்: இரணியகசிபன் வமிசத்து நிசுந்தன்புத்திரர். இவ்விருவரு மிக்க பலசாலிகளா யெல்லாரையுந் துன்புறுத்தி வந்தனா; அதுகண்டு விஷ்ணு விசுவகர்மாவினு லொருபெண்ணைப் படைத்து. அவ ரிடமனுப்ப அவ்விருவரு மோகித்து அவள்பொருட்டுச் சண்டையிட்டு மாண்டனர். வந்த - (அவ்விரண்டு கிளிகளிடத்தும்) வந்த. கலகத்தில்- சண்டையால்.

காடெல்லாம் பட்சியாக் கூடி வளம்பாடிக்
கண்ணியுந் தட்டியென் கண்ணிலுங் குட்டியே.
(போயினு)

(2) ஆயிரங் கொக்குக்குக் கண்ணியை வைத்துநா
னப்பாலே போயொரு மிப்பா யிருக்கையில்
ஆயிரங் காகங்க ளாயிரம் பட்டு
மறைத்து விறைத்துக் கிடப்பது போலவே
காய மொடுங்கிக் கிடந்தது கண்டுநான்
கண்ணி கழற்றி நிலத்திலே வைத்தபின்
சேயிழை தன்பொருட் டாலேபஞ் சாக்ஷரஞ்
*செபித்த மன்னவன் பாவம்போ றற்போலப்.
(போயினு)

(3) தம்பமென் றேநம்பி னோரைச் சதிபண்ணித்
தாம்வாழப் பார்ப்பவர் செல்வங்கள் போலவும்
பம்பும் வடபா லருவியிற் றோய்ந்தவர்
பாவங் கழுநீராய்ப் போவது போலவுங்
கும்ப முனிக்குச் சிவமான காலங்
குதித்தோடிப் போன வயிணவர் போலவும்
அம்பிகை பாகர் திரிகூட நாதர்
ரடியவர் மேல்வந்த துன்பங்கள் போலவும்.
(போயினு) (95)

---

வளம்பாடி- (வயல்) வளப்பத்தைப் பாடிக்கொண்டு. தட்டி - தடுக்கி விட்டு. குட்டி - எய்த்து (தாற்பரியம்).

(2) ஒருமிப்பாய்-ஒரேபார்வையாகப்பார்த்து. ஆயிரம்பட்டு-ஆயிரங் கண்ணிக்குள்ளு மகப்பட்டு. மறைத்து—மறைபட்டு. விறைத்து—செத்து. சேயிழைபொருட்டு - மங்கையர்க்கரசியார் காரணமாக. பஞ்சாக்ஷரம்-ஐந் தெழுத்து மந்திரத்தை. செபித்த - செபஞ்செய்த. மன்னவன் - கூன் பாண்டிய அரசன்.

(3) தம்பம் - பற்றுக்கோடு; ஆதாரம். சதி - வஞ்சனை. பம்பும் - நெருங்கும். வடபால் - வடபக்கத்து. சிவம் - (அகத்தியமுனிவர்பொரு ட்டு) விஷ்ணுசிவரூபம்.

---

* சேவித்த என்றும் ஒருபாட மிருக்கிறது.

## நூவன் சிங்கனைப் பழித்தல்.

### விருத்தம்.

வருக்கையார் திரிகூ டத்தில் மாமியாள் மகள்மேற் கண்ணும்
பருத்திமேற் கையு மான பான்மைபோல் வேட்டை போனாய்
கருத்துவே றானாய் தாயைக் கற்பித்த மகள்போ லென்னைச்
சிரித்தனை சிங்கா வுன்னைச் சிரித்தது காமப் பேயே. (96)

### இதுவுமது.

கடுக்கையார் திரிகூ டத்திற் காமத்தால் வாமக் கள்ளைக்
குடித்தவர் போலே வீழ்ந்தாய் கொச்குநீ படுத்து வாழ்ந்தா
யடிக்கொரு நினைவேன் சிங்கா ஆசைப்பே யுனைவி டாது
செடிக்கொரு வளையப் போட்டுச் சிங்கியைத் தேடு வாயே. (97)

## சிங்கன் சிங்கியைத் தேடும்படி நூவனுக்குச் சொல்லுதல்.

### விருத்தம்.

வேடுவக் கள்ளி யோர்நாள் மெய்யிலா தவனென் றென்னை
யூடலிற் சொன்ன பேச்சா லுருவிலி பகைத்தா னென்மேற்

---

(96) வருக்கையார்-பலாமரத்தில் நிறைந்துள்ளாராகிய சிவபிரான். மாமியாள் மகள்மேற் கண்ணும் பருத்திமேற்கையுமான பான்மை-அஃதாவது: பருத்தியெடுப்பவன் மாமியாள் மகளைக்கண்டு மோகித்துக் கண்ணை யவள்மேற் செலுத்தி நின்று பருத்தியைப் பிறரெடுத்துப்போகத் தவற விட்ட தன்மை. போல் - [அது] போல. வேட்டைபோனாய்-வேட்டை யைத் தவறவிட்டாய். தாயைக் கற்பித்தமகள் - அஃதாவது: தான் விய பிசாரஞ் செய்துகொண்டு தாயை அதுசெய்யாதே யென்று போதித்த மகள். போல்- [அது] போல. என்னைச் சிரித்தனை - [நீ வேட்டையைத் தவறவிட்டு நான் தவறவிட்டதாக இகழ்ந்து] என்னை நகைத்தாய்.

(97) கடுக்கையார் - கொன்றைமாலையுடையாரது. வாமம் - தீமை யுடைய. படுத்து-கொன்று. வாழ்ந்தாய் - வாழ்வையடைந்தாய்; இகழ்ச் சிக்குறிப்பு. செடிக்கொரு வளையம்போட்டுச் சிங்கியைத்தேடுவாய்- அஃ தாவது: மந்திர சாத்திரத்திற் கூறியபடி செடிக்கு இருப்புவளையம் போட்டுக் காப்புக்கட்டி மந்திரசெபஞ்செய்து காணாமற்போன சிங்கி யைத் தேடுவாயென்றபடி.

(98) வேடுவக்கள்ளி-குறவர்குலக்கள்ளி. மெய்யிலாதவன்-நிசமில் லாதவன் [சரீரமில்லாதவன்]. உருவிலி - மன்மதன். பகைத்தான் என் மேல் - [நாமு மெய்யில்லாதவன் இவனு மெய்யில்லாதவன் ஆனால் இவன் நமக்கு விரோதியென்றெண்ணி] என்மேல் விரோதித்தான்.